கனடா இந்து மாமன்றம்

CANADA HINDU MAAMANTRAM

ஓம்

சைவநீதி

Saivaneethi



"ஆழ்கடலான்"

முருக. வே. பரமநாதன்

சிறப்புமலர்



ஈழத்துத் திருத்தலம்


இனுவில் கந்தசுவாமி கோவில்

Inuvil Kanthaswami Temple

கனடா இந்து மாமன்றம்

CANADA HINDU MAAMANTRAM

பொங்கல் விழா மலர்-2017



TRAFFIC
TICKETS
DRIVE WITH NO INSURANCE
CARELESS DRIVING
RED LIGHT
FOLLOW TOO CLOSE
DRIVE UNDER SUSPENSION
K. SUTHARSAN
416-560-6926



சைவநீதி 2017

வணக்கம் வருக! இதுவே நுழைவாயில் சென்று பொருள் கொணர்க!

உ
சிவமயம்

பஞ்சபுராணம்

தேவாரம் - சுந்தரமூர்த்தி நாயனார்

மங்கை பங்கனை மாசிலா மணியை
வான நாடனை ஏனமோ டன்னம்
எங்கும் நாடியுங் காண்பரி யானை
ஏழை யேற்கெளி வந்த பிரானை
அங்கம் நான்மறை யால்நிறை கின்ற
அந்த ணாளர் அடியது போற்றும்
நங்கள் கோனைநள் ளாறனை அமுதை
நாயி னேன்மறந் தென்னினைக் கேனே.

திருவாசகம் - மாணிக்கவாசகர்

இரந்துஇரந்து உருக,என்மனத் துள்ளே
எழுகின்ற சோதியே! இமையோர்
சிரம்தனில் பொலியும் கமலச்சே வடியாய்
திருப்பெருந் துறைஉறை சிவனே!
நிரந்தஆ காயம், நீர்,நிலம்,தீ,கால்
ஆய்அவை அல்லையாய், ஆங்கே
கரந்ததுஓர் உருவே! களித்தனன், உன்னைக்
கண்உறக் கண்டுகொண்டு இன்றே.

திருவிசைப்பா - கருவூர்த்தேவர்

கடுவினைப் பாசக் கடல்கடந்து ஐவர்
கள்வரை மெள்ளவே துரந்துன்
அடியினை இரண்டும் அடையுமா(று) அடைந்தேன்
அருள் செய்வாய் அருள்செயா தொழிவாய்
நெடுநிலை மாடத்(து) அரவிருள் கிழிக்க
நிலை விளக்(கு) அலகில்சா லேகப்
புடைகிடந்(து) இலங்கம் ஆவணவீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே.

திருப்பல்லாண்டு - சேந்தனார்

நிட்டையி லாவுடல் நீத்தென்னை
ஆண்ட நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்
சீராட்டும் திறங்களுமே சிந்தித்(து)
அட்ட மூர்த்திக்கென் அகம்நெக
ஊறும் அமிர்தினுக்(கு) ஆலநீழற்
பட்டனுக்(கு) என்னைத்தன் பாற்படுத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

திருப்புராணம் - சேக்கிழார்

எண்ணிய ஓசை ஐந்தும் விசும்பிடை நிறைய எங்கும்
விண்ணவர் பொழிபூ மாரி மேதினி நிறைந்து விம்ம
மண்ணவர் மகிழ்ச்சி பொங்க மறைகளும் முழங்கி ஆர்ப்ப
அண்ணலை ஓலை காட்டி ஆண்டவர் அருளிச் செய்வார்.

திருப்புகழ் -- அருணகிரிநாதர்

சிவனார் மனங்குளிர உபதேச மந்திரமிரு
செவிமீதி லும்பகர் செய் குருநாதா
சிவகாம சுந்தரிதன் வரபால கந்தநின்
செயலே விரும்பியுளம் நினையாமல்

அவமாயை கொண்டுலகில் விருதாவ லைந்துழலு
மடியேனை அஞ்சலென வரவேணும்
அறிவாக மும்பெருக இடரான துந்தொலைய
அருள்ஞான இன்பமது புரிவாயே

நவநீத முந்திருடி உரலோடெ யொன் றுமரி
ரகுராமர் சிந்தைமகிழ் மருகோனே
நவலோக முங்கைதொழு நிசதேவ லங்கிருத
நலமான விஞ்சைகரு விளைகோவே
தெய்வ யானை யங்குறமின் மணவாள சம்ப்ரமுறு
திறல்வீர மிஞ்சுகதிர் வடிவேலா
திருவாவி னன்குடியில் வருவேள்ச வுந்தரிக
செகமேல்மெய் கண்டவிறல் பெருமாளே.

தலைவர் செய்தி

இளைய தலைமுறையே தொண்டு செய்ய வாருங்கள்

சேவையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள பல தொண்டு நிறுவனங்களில் அதில் உள்ள ஒரு சில நிர்வாகிகளே தமது காலத்தையும் நேரத்தினையும் செலவழித்து தொண்டு செய்கிறார்கள். அதில் சேர்ந்து பணிபுரிய இளம் சமுதாயம் வருவதற்கு பின்நிற்கின்றது. எத்தனை காலம்தான் இந்தநிலை நீடிக்கப்போகிறது. பொதுமக்கள் சிலரின் அபிப்பிராயம் "ஒரு சிலரே இப்படியான பொது அமைப்புக்களைத் தமக்குள் வைத்திருக்கிறார்கள்" என்று. அது மிகவும் பிழையான கூற்று. இப்படி விமர்சனம் செய்பவர்கள் தொண்டு செய்ய முன்வந்து அவர்களை ஏற்றுக்கொள்ள மறுத்தால் மட்டுமே விமர்சனம் செய்யும் உரிமையுண்டு. "தொண்டுக்கென்றே அலைவார் கேலிக்கு ஆளாவார் கண்டு கொள்வாய் அவரை ஞானத்தங்கமே" என்ற பாடல் வரிகள்கூட உண்டு. இப்படியாக தொண்டு செய்பவர்களைக் கேலி செய்யும் ஒரு கூட்டமும் உண்டு. தொண்டு செய்வதுபோல் பாசாங்கு செய்பவர்களை விமர்சிக்கும் உரிமை ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. ஆனால் தொண்டு நிறுவனங்களில் அவர்களை ஆதரிக்க வேண்டும். இது சமூகத்தின் கட்டாயம். இவர்களைக் கேலி செய்வது பாவம் என்றுகூடச் சொல்லாம். சில அண்பர்கள் நன்கொடைகள், அல்லது பொருள் உதவிகள் செய்வதால் தம் கடமை முடிந்துவிட்டதாக நினைக்கின்றார்கள். இப்படியான அன்பர்கள் முன்வந்து சேவையாற்ற வேண்டும். அன்பர்கள் தொண்டு செய்யப் பின்நிற்பதால் பல நிறுவனங்கள் செயற்படாமல் போயிற்று. நிறுவனங்களின் செயற்பாடுகள் பல மூடப்பட்டுவிட்டன. மூடப்பட்ட நிறுவனங்களை மீண்டும் உயிர்ப்பிப்பது அவ்வளவு இலகுவான காரியம் அல்ல. ஆகவே அன்பர்களே தொண்டு செய்யவாருங்கள். அதனால்தான் சான்றோர்கள் சொன்னார்கள் "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்று!

சுபம்

தம்பையா ஸ்ரீபதி
தலைவர்



SECRETARY'S MESSAGE

We are living in a western society where people came from different parts of the world. They have different believes and faiths. The world's major religions Hinduism, New Age, Buddhism, Islam and Christianity are each quite unique.

Look at our younger generation and you will find many of them have no interest whatsoever in practicing the Hindu religion. One hundred years ago, before the arrival of movies, television and computers, in the cities and villages of Sri lanka and India, the Hindu temples were the most interesting places for kids and parents. Besides the festivals, there were dramas, dances and musical concerts performed in the temples. The temples resembled a social and educational center as well.

In our modern world, we do have movies, television and computers, and many Hindu children would spend their free time enjoying themselves with their friends rather than being at the temple. Why is this? There are many reasons. Parents are not so close with the children. Kids today want answers that make sense to them. This is the challenge every Hindu parent faces. Younger generations are eager to hear the meaningful answers. Those answers can be explained in ways that engage and inspire young seekers, counterbalancing the powerfully magnetic influences of the modern world.

A popular saying in English is "The family that prays together stays together." In Hinduism, ideally this refers to all members of the family participating in the morning and evening worship in the home shrine before breakfast and dinner. The children can be trained to always bring an offering of a flower or at least a leaf. The exact routine followed depends on the family's religious background and lineage. Typical practices include a simple arati or a puja, singing devotional songs and if possible meditating or performing simple yoga.

Parents are indeed the first guru. They must teach in many different ways such as by being an example, giving proper explanation, and giving advice and direction to their kids. The child's deepest impressions come from what the parents do and say. Therefore, if the parents follow a systematic approach to teaching the child Hinduism as he or she grows up, their eternal duty will be fully integrated into his or her life. Worship in heartfelt devotion, clearing the inner channels to God, develops their kindness toward you and loved ones. Make the shrine a refuge for all family members, where they can find peace and comfort, thus they can connect with the God and offer their worship and prayers.

Canada Hindu Maamantram requests the parents to train their children to worship in their shrine room in the morning, evening, significant religious days and before any important events happening in life. Following this simple, traditional practice in a sacred space within the home will do much to make our religion relevant to them on a day-to-day basis. As the children get older, they can take on greater responsibilities in worshipping daily.

"Our best wishes for a Happy Pongal Vizha"

V. Nantheeswarar.
Secretary

ஆசிரியர் குரல்!

உலகம் எங்கும் வாழும் சைவத்தமிழ் நெஞ்சங்களே! எல்லோர்க்கும் மங்களகரமான புதுவருட வாழ்த்தும், தைப்பொங்கல் வாழ்த்தும், வணக்கமும் உரித்தாகட்டும்.

புலம் பெயர்ந்தாலும் இப் பனி படர்ந்த நாட்டில் எமது கலை, கலாசாரம், பண்பாடு என்பவற்றைக் கட்டிக் காக்கும் நோக்கோடு வருடா வருடம் இந்து மாமன்றத்தால் தை மாதத்தில் கொண்டாடி மகிழும் தைப்பொங்கல் விழா நடைபெறுகிறது. அதில் சிறப்பிதழான சைவநீதி சஞ்சிகை வெளியீடும், மாணவர்களுக்குப் பரிசளிப்பும், சிறப்புச் சொற்பொழிவுகளும், கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும். இதனை எல்லோரும் இம் மாலைப் பொழுதில் கண்டு மகிழ்வோம்.

இந்த உலகத்தில் மனிதப் பிறவி எடுத்த நாங்கள் மற்ற மனிதர்களிடமிருந்து எல்லாவற்றையும் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் மன அமைதியையும், மனச் சாந்தியையும் எவரிடமிருந்தும் பெற்றுக் கொள்ள முடியாது. இவை இரண்டும் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது. இதனால்த்தான் ஐம்புலன்களையும் புலன்வழி செல்லாது அடக்கி, தியானத்தில் ஈடுபட்டு கடவுளை வணங்குவது தான் எல்லா வழிகளிலும் மிகச் சிறந்த வழி. இது சாந்திக்கான வழி மட்டுமன்றி இறைவனை அடையும் மேலான வழியுமாகும். யோகசுவாமிகள் தியானத்தின் பெருமையை விளக்கிக் கூறியுள்ளார். பகவத் கீதையிலும் மனதில் உறுதியில்லாதவனுக்கு ஆன்ம ஞானம் உண்டாவதில்லை. அவனால் தியானத்தில் ஈடுபடமுடியாது. மனச்சாந்தி இல்லாதவனுக்கு மகிழ்ச்சி எப்படி உண்டாகும்?

தியானத்திற்குப் பயிற்சி வேண்டும். ஆரம்பத்தில் கடினமாகத்தான் இருக்கும். ஐந்து நிமிட நேரமாவது மனம் ஒடுங்கி தியானம் செய்தால் அதுவே உயர்ந்தது. பிரார்த்தனையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது மனது அலைந்து கொண்டிருப்பதால் அது இலகுவாகத் தோன்றலாம். ஆனால் மனதை அலையவிட்டுத் தியானம் செய்ய முடியாது. சில நாட்களாயினும் கஷ்டப்பட்டு மனத்தைத் தியானத்தில் ஈடுபடுத்துவோமானால் அதைப் போல இன்பம் வேறு எதிலும் காணமுடியாது. "தியானமே எனது மனநிலை" என்ற அளவுக்கு பயிற்சியினால் முன்னேறி விடலாம்.

"சிவத் தியானஞ் செய் செய் செய்
சிவமே நாமெனல் மெய் மெய் மெய்
அவனி யனைத்தும் பொய் பொய் பொய்
அதனை அறிந்து உய் உய் உய்."

எந்தக் காரியத்தைச் செய்தாலும் குழப்பமில்லாமல் நம்பிக்கையோடு செய்யப் பழகிக் கொள்ள வேண்டும். தன்னில் நம்பிக்கை இருந்தால் நன்மை தீமைகளையும் இனம் கண்டு கொள்ளலாம்.

தியானத்தைப் போல் யோகமும் கடவுளை அடைவதற்குரிய பயிற்சியாகும். உடல், உள்ளம், ஆத்மா ஆகிய மூன்றையும் ஒருங்கே மேம்பாடடையச் செய்வதே யோகத்தின் குறிக்கோளாகும். அதிக சக்தி, ஊக்கம், உற்சாகம், நீண்ட ஆயுள், உயர்ந்த ஆரோக்கியம், மனச் சாந்தி ஆகிய இத்தனையையும் யோகம் அளிக்கின்றது. யோகப் பயிற்சியும் இறைவனுடன் இணக்கத்தை ஏற்படுத்துகின்றது. எல்லோருடைய மனமும் ஒரே அளவான வலிமையை உடையதல்ல, ஆனாலும் ஒவ்வொருவரும் மனவலிமையை அதிகப்படுத்தலாம். பக்குவம் பெற்ற மனம் பாதை தவறாது, நீதி வழுவாது.

சைவநீதி மலருக்கு எல்லோருக்கும் பயன் தரக்கூடிய கட்டுரைகள் கவிதைகள் தந்துதவிய உயர்ந்த உள்ளங்களுக்கும், மாணவர்களுக்கும், அட்டைப் படத்தை அலங்கரித்தவர்க்கும், அச்சுப்பதிவு, வடிவமைப்பு செய்தவர்களுக்கும், விளம்பரங்களைத் தந்துதவியவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவிபுரிந்த எல்லோருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி வணக்கம்

திருமதி. மனோன்மணி தனபாலசிங்கம்
மலராசிரியர்

தொன்மை மிகு இணுவில் கந்த சுவாமி கோவிலின் சிறப்புகள்

யாழ்ப்பாண குடா நாட்டின் மத்தியில் அமைந்துள்ள இணுவில் கிராமம் சைவத்தையும் முத்தமிழையும் பேணிக்காத்து போற்றி வளர்ப்பதில் முதன்மையான கிராமமாக திகழ்கின்றது. பண்டைய காலத்தில் இணையில் என்று அழைக்கப்பெற்று பின் இணுவில் என்று ம ருவி வந்ததாக அறிஞர்கள் பலர் சுட்டிக் காட்டியுள்ளார்கள். இணுவிலில் இணையற்ற சைவப்பண்பாட்டிற்கு இங்குள்ள சிறப்பு மிக்க ஆலயங்களின் தொன்மையும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற எழில் மிகு இயற்கையான சூழலில் வனப்புடனே திகழ்வது இணுவில் கந்த சுவாமி கோவில் ஆகும். இணுவிற் பகுதியையும் அதைச்சூழவுள்ள பாரிய நிலப்பரப்பையும் பரிபாலித்து ஆட்சித்தலைவனாக விளங்கிய திருக்கோவிலூர் பேராயிர முடையோர் முதலியின் மரபிலே வந்த கனகராச, முதலி காலத்து ஆலயமாக இப்பதி சிறப்புறுகின்றது பேராயிரமுடையோன் காலம் கி. பி. 1365 என முதலியார் செ. இராசநாயகம் அவர்கள் எழுதிய "யாழ்ப்பாணச் சரித்திரம்" எடுத்தியம்புகிறது.

போர்த்துக்கேயரின் ஆட்சியில் அழிவுற்ற இவ் வாலயம் மீண்டும் 1661ஆம் ஆண்டளவில் அமைக்கப்பட்டு தோற்றம் பெற்றது. இப்பெரும் ஆலயத்தின் தல விருட்சமான நொச்சிமரம் ஆரம்ப காலம் முதல் கருவறையருகில் இன்றும் நிற்பதைக்காணலாம். செங்கற்களாலான இவ்வாலயம் வெண்கற்களால் கட்டப்பட்டு 1840 ஆம் ஆண்டு குடமுழுக்குச் செய்யப்பட்டது. எம்பெருமான் ஆலய ஐயரின் கனவில் தோன்றி விக்கிரத்திற்குரிய அளவுப்பரி-மாணம் கொடுத்துச் செய்யப்பட்டதே இன்று எழுந்தருளி வரும் கடா வாகனம் 100 ஆண்டுகள் பழமைவாய்ந்தது. இக்கோவிலின் சிறப்பான சூரன் போரைக் கண்டு களிக்கத் தமிழகத்திலிருந்து கூட அடியார்கள் அன்றைய நாட்களில் வந்து சென்றதாகக்கூறப்படுகிறது.

இத்தகைய மேன்மை கொண்ட இத் தலத்திலான சித்திரத்தேர் 1976ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது, அத்துடன் கலை நுணுக்கங்கள் நிறைந்த சப்பறம் 1977ஆம் ஆன்டு முதல் முருகன் சப்பறத் திருவிழாவன்று வீதியுலா வருகிறார். இருமணிக் கோபுரங்களையும் இரு இராச கோபுரங்களையும் கொண்ட இத்தலம் புதிய மெருகோடு பளிச்சிடுகின்றது.

தைப்பூச தினத்தன்றும் மகோற்சவவத்தின் 12ஆம் திருவிழாவன்றும் திருமஞ்சத்திலே வீதியுலாவரும் கண் கொள்ளாக் காட்சியைக் காண பல அயலூர்களிலிருந்தும் அடியார்கள் வந்து கூடுவர். இத்திருத்தலத்தின் மூல மூர்த்தியாக ஆறுமுகப்பெருமான்விளங்கி வருவதோடு தல விருட்சமாக நொச்சிமரமும் தீர்த்தமாக வைரவ தீர்த்தமும் காணப்படுகின்றன. இந்தியாவிலே ஆயிரக்கணக்கான கோவில்கள் கோவில் என்ற அந்தஸ்து சிறப்புக்குரியது எனக் கருதப்படுகின்றது. அதே போலவே ஈழத்தின் யாழ்ப்பாணதிலே காங்கேசந்துறை வீதியைப் பார்வையாகக் கொண்ட பல கோவில்கள் இருந்தும் இன்றும் கோவில் வாசல் எனும் காரணப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது. முருகன் பார்வையிலுள்ள இணுவில் சந்தியே ஆகும். இவ்வாலயத்தின் தொன்மைக்கும் பெருமைக்கும் இதுவும் ஒருதாரணமாகும் .இத்தகைய புகழ் பூத்த இக்கோவிலில் அற்புதங்கள் பல நிகழ்ந்துள்ளது குறிப்பிடத் தக்கது.

இனுவில் ஆர். எம் கிருபாகரன்.

ஆழ்கடலிலும் அணையா விளக்கு

செந்தமிழும் சிவநெறியும் தம் இரு கண்கள் எனப்போற்றி வாழ்ந்த ஈழம் பெற்றெடுத்த பேரறிஞர்களின் வரிசையில் தகுதியும் தகைமையும் கொண்ட நல்லாசிரியராகத் திகழ்ந்தவர் முருக. வே பரமநாதன் அவர்கள். இவர் சிங்கைநகர் என வரலாற்றுப் புகழ்மிக்க வல்லிபுரத்திலே வேலுப்பிள்ளை இலட்சுமிப் பிள்ளை அவர்களது இரண்டாவது குழந்தையாகவும் ஒரேயொரு அன்பு மகனாகவும் 1924 - 01 - 30 ந் திகதி பிறந்தார். இவருடன் உடன் பிறந்தவர்கள் மூன்று சகோதரிகள். இவரின் தந்தையார் மிகவும் இளம் வயதில் வாகன விபத்தொன்றில் காலமாகிவிட்டதனால் தாயார் தனியே நின்று தன்பிள்ளைகளை வளர்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இவர் தனது ஆரம்பக் கல்வியை மந்திகை மெதடிஸ் மிஷன் பாடசாலையில் ஆரம்பித்தார். இளவயதில் பாடசாலை செல்வது அவருக்கு வேப்பங்காயாகக் கசந்தது. மூன்றாம் வகுப்பு வரை அங்கு படித்து முடித்த பின் புற்றளை மகாவித்தியலயத்தில் தனது கல்வியைத் தொடர்ந்தார். கல்வியில் ஆர்வம் கொண்டு நன்றாகக் கற்று கனிஷ்ட சிரேஷ்ட தராதரப் பரீட்சைகளில் திறமைச்சித்திகள் பெற்றார். பேரறிஞர் கந்தமுருகேசனிடம் தமிழ் மொழியை ஆழமாகக் கற்றுக் கொண்டார். இதனால் தான் அவர் தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெற்றவராகக் காணப்பட்டார். தமிழ் மொழியை மாத்திரமல்ல ஆங்கிலக் கல்வியையும் கற்க ஆர்வம் கொண்டு கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் பயின்றார். பரமேஸ்வரா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியர் பயிற்சியைப் பெறும் உயர்கல்வி வாய்ப்புக் கிடைத்தது. ஆசிரியர் பயிற்சித் தேர்விலும் திறமைச் சித்தி அடைந்தார். அங்கு கலாநிதி சிவப்பிரகாசம் என்னும் பேரறிஞர், க. சிதம்பரப்பிள்ளை, பண்டிதமணி நவநீத கிருஷ்ண பாரதியார், பண்டிதர் சோ. இளமுருகளார் ஆகியோர் கல்விப்பணியாற்றினார்கள். பயிற்சிக் கலாசாலையிலே அறிஞர் பெருமக்களின் போதனையின் பலனாகத் தாமும் பேரறிஞராகிவிடும் தகைமையைப் பெற்றுக் கொண்டார். கலைமகளின் கடாட்சம் பெற்றவர். 'நூல் பல கல்" என்ற ஔவையார் வாக்கிற்கு இணங்க பல நூல்களையும் கசடறக் கற்று நுண்ணறிவுடையவராய், சான்றோனாய், பண்புள்ளவராய் எல்லோரினதும் மதிப்பைப் பெற்று வாழ்ந்தார்.

ஊரெழுவைப் பிறப்பிடமாகக் கொண்ட வரும் சிங்கள மகாவித்தியாலய ஆங்கில ஆசிரியையுமான திருப்பதி என்னும் மங்கை நல்லாளைத் திருமணம் செய்தார். இல்லறம் என்னும் நல்லறத்தை இனிதே நடாத்தி சித்திரா, சரச்சந்திரா, ரவிச்சந்திரா, சுபத்திரா ஆகிய நான்கு பிள்ளைகளைப் பெற்றெடுத்து சீரும் சிறப்புமாக வாழ வழிவகுத்துள்ளார்.

திரு பரமநாதன் அவர்கள் முதன் முதலில் தமது ஆசிரியப் பணியை, கண்டியிலுள்ள கட்டுக்கலை அரசினர் தமிழ்ப் பாடசாலையில் ஆரம்பித்தார். பின்னர் கலகா, கடுகாஸ்தோட்டை, பேராதனை ஆகிய இடங்களிலும் ஆசிரியப் பணியை மேற் கொண்டுள்ளார். பின் அச்செழு பாடசாலை யிலும், ஊரெழு கணேச வித்தியாலயத்திலும் தனது சேவையை ஆற்றியுள்ளார். "எழுத்தறிவ- ித்தவன் இறைவனாவான்" என்பதற்கிணங்க நல்லதொரு எதிர்காலச் சந்ததியினரை உருவாக்கியுள்ளார். கண்டியில் பதினைந்து வருடங்களும் யாழ்ப்பாணத்தில் இருபது வருடங்களும் சேவையாற்றி ஓய்வு பெற்றார்.

இவர் இறைபக்தியுடன் தமிழ், சமயம், இனம், நாடு எல்லாவற்றிலும் மிகவும் பற்றுள்ளவர். பேச்சு, எழுத்து, கவிதைகள் புனைவதிலும் ஆற்றல் மிக்கவர். இவர் இலங்கையில் இருக்கும் போதும், கனடாவிற்கு வந்த பின்பும் அவருடைய ஆக்கங்கள் பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும், விசேட மலர்களையும் அலங்கரிக்கத் தொடங்கின. இவரின் பெரும்பாலான படைப்புகள் சமயத்தோடு தொடர்புடையதாகவே காணப்படும். தனது எழுத்தாற்றல் மூலம் வல்லிபுரத்தான் தல புராணம், வல்லிபுர மாயவன் பிள்ளைத் தமிழ், நவநாத சித்தர் ஊரெழு மீனாட்சிப் பதிகம்,

வேலவா வடிவேலவா, எங்கள் ஊர் வல்லிபுரம், ஈழத்துச் சித்தர் எனப் பலநூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவர் பல சித்தர்களுடன் ஈடுபாடு கொண்டவராதலால் "ஈழத்துத் தபோதனர்" என்ற நூலையும் ஆக்கியுள்ளார். "நினைக்க நினைக்க" என்பது இவருடைய வாழ்க்கைச் சரிதம்.

இதுமாத்திரமன்றி தமிழர் தகவல், ஆத்மஜோதி, இந்து மாமன்றத்தால் வெளியிடப்படும் சைவநீதி என்ற நூல்களிலும் இவரின் பல கட்டுரைகள் வெளிவந்துள்ளது. இவரின் கட்டுரைகளில் நிறையப் பாடல்கள் இடம்பெறும். இவர் தினமும் ஒரு பாசுரம் மனனம் செய்வார். நினைவாற்றல் மிக்கவர். சைவநீதிக்கு அவர் எழுதிய கட்டுரைகளில் ஒன்று ஞாபக சக்தியை எவ்வாறு வளர்ப்பது என்பது. அவரின் கட்டுரைகள் ஒவ்வொன்றும் தனித்தன்மை வாய்ந்தது. சைவநீதிக்குக் கட்டுரை கேட்டால் உடனே தபாலில் அனுப்பிவைத்து விடுவார். இவர் ஒரு நடமாடும் நூலகம்.

திரு பரமநாதனின் சிறப்பினை மதித்து கௌரவப் பட்டங்கள், விருதுகள் என்பன வழங்கப்பட்டன. திரு. முருகுப்பிள்ளை சுவாமிகள் இவரின் புலமையைப் போற்றி "ஆழ்கடலான்" என்ற சிறப்புப் பெயரை வழங்கினார். அவரின் ஞாபக சக்தியும் ஆழ்ந்த அறிவும் எல்லாப் புனைபெயரிலும் பார்க்க இது மிகவும் பொருத்தமானது. இவர் கடவுள் சுவாமி, மௌனகுரு சுவாமி, நல்லாசிரியர், சிங்கை யாழியான், இளம்பிறையான், மகா வித்துவான் என்ற சிறப்புப் பட்டங்களுக்குரியவர். இலக்கிய கலாநிதி முத்தையா அவர்கள் புலவர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தார். கனடா இந்து சமயப் பேரவையினர் "பேறிஞ்ஞர்" எனப்பட்டம் சூட்டிப் பெருமைப் படுத்தினர். மூதறிஞர்கள் கந்த முருகேசனார் நூற்றாண்டு விழாவில் அவ்வறிஞரின் மாணவர் பேறிஞர் பரமநாதனுக்கு வித்துவ சிரோன்மணிப்பட்டம் வழங்கிப் பெருமைப்படுத்தினார். தமிழர் தகவல் நிறுவனத்தினர் நடாத்திய கௌரவிப்பு விழாவில் அறிஞ்ஞர் அவர்களுக்கு விருது வழங்கி தங்கப்பதக்கத்தினையும் சூட்டிப் பெருமைப் படுத்தினர். உதயன் பத்திரிகை, செந்தாமரைப் பத்திரிகை, கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் போன்றவர்களால் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் பங்குபற்றி முதலாம் இரண்டாம் இடத்தைப் பெற்றுப் பல பரிசில்களைப் பெற்றுக்கொண்டார்.

அறிஞ்ஞர் உடல் தளர்ந்தாலும் கண்பார்வை குறைந்தாலும் எழுதுகோலைக் கைவிடவில்லை. அவரின் கட்டுரைகள் பல இனிவருங்காலத்திலும் பிரசுரிக்கப்படும். ஒரு அறிவுப் பெட்டகம், அமைதியின் இருப்பிடம், எல்லோரிடமும் பாரபட்சமின்றி அன்பாகப் பழகும் தன்மையுள்ளவர். வித்துவச்செருக்கற்றவர். எங்கு அவரின் கட்டுரைகள் கிடைத்தாலும் அதனை வாசிப்பதில் மிகுந்த ஆர்வம் எனக்கு உண்டு. அவ்வளவு ஆழமும் அகலமும் கொண்டது. சிலவற்றை ஒருமுறை வாசித்தால் அதன் சாரத்தை விளங்கிக் கொள்ளமுடியாது. அதனால் இரண்டாம் முறை வாசிப்பேன். இதனை அவருடன் கதைத்த போது பகிர்ந்து கொள்வேன். எனக்கு சமயத்தில் தமிழில் ஏற்படும் ஐயங்களை இவரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன் இவருடன் கதைக்கும்போது மிக மகிழ்ச்சியாக இருக்கும்.

பேரோடும் புகழோடும் வாழ்ந்த இவ் அறிஞ்ஞர் எல்லோரையும் விட்டுப் பிரிந்து, சென்னியில் திங்கள் கங்கை தாங்கிய சிவனார் பாதம் சென்றடைந்துவிட்டார். எல்லோர் மனதிலும் நீங்காத இடம் பெற்றுவிட்ட இம் மானிதன் இன்று இல்லையென்று எண்ணும் போது நெஞ்சம் நெகிழ்கின்றது. ஆனால் அவருடைய ஆக்கங்கள் நிலைத்து நிற்கும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்."

திருமதி மனோன்மணி தனபாலசிங்கம்

மனச்சாந்தி தரும் திருவாசகம்

மாணிக்கவாசகப் பெருமான் அவர்கள் மாணிக்கவாசகமாக அருளிச் சென்றது திருவாசகத்தேன். "நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க" என இறைவன் பால் பேரன்பு கொண்டு பாடியுள்ளார் மணிவாசகர். எந்த நேரத்திலும் இறைவன் திருநாமம் கூறிப் பணிய எல்லா நற்பேறும் நம்மை வந்தடையும் என்பது திண்ணம்.

எதையும் மின்னல் வேகத்தில் செய்யவேண்டும். அல்லது விரைவில் பெரும் செல்வந்தர் ஆக வேண்டும், என்று எண்ணி இறுமாந்து போகும் உள்ளத்தைக் கட்டுப்படுத்த "வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க" என்று உள்ளத்தை, யாக்கையின் அதிர் வேகத்தைக் குறைக்க சிவசிந்தனை நமக்கு உதவி புரிகின்றது. சிவபுராணவரிகள் ஒவ்வொன்றும் ரத்தினவரிகளாகும். பிறந்த பிறப் பறுக்கும் எம்பெருமான், மனித வாழ்வில் ஏற்படும் ஊழ்வினைப் பயன்களையும் தெளிவாக்குகிறார்.

புல்லாகிப் பூடாகிப் புழுவாய் மரமாகி, பல்விருகமாகி, பின்னர் பறவையாய் பாம்பாகி, கல்லாய் மனிதராய்! என்னே தத்துவம். மனிதப் பிறப்பிற்கு முன் இத்தனை பிறப்புக்களா! அதைச் சிந்தித்தவர் யார்!

இப்பிறப்பே நிச்சயமானது, எல்லாம் தம் கையில் என மார்தட்டி விரைந்து நிற்கும் மனித குலம் அடுத்து என்ன நடக்கும் என்பதை அறியாத அறியாமையில் உழல்கின்றது. அறிந்து, அறிவு தெளிவு பெறும் போது வயது முதிர்ந்து வன்பல்லும் விழுந்து நாக்குளறிப் போகின்றது. அப்போது தான் இறைசிந்தனை ஏற்படுகிறது.

இத்தனை காலமும் உள்ளத்தின் ஒரு மூலையில் உறங்கிக் கொண்டிருந்த பக்தி பரவசப் பிரகாசமடைகிறது. அய்யா! என உள்ளம் ஓங்காரமிடுகிறது. அப்போது உள்ளத்தினுள்ளே ஆழ்ந்து அகன்று உறைந்து நின்ற தெய்வ சிந்தனை, பக்தி தலை தூக்குகின்றது. கண்களில் நீர் வடிய பாடச் செய்கிறது. ஆனந்த மிகுதியால் ஆடச் செய்கிறது. அது தான் தெய்வ பிராப்தம்.

மனித வாழ்விற்கு வாய் மணக்க மனம் மகிழ அன்றாடம் யாவரும் வாசித்து வாசித்து வளம் தேட வேண்டியது சிவபுராணம் ஆகும். அஞ்ஞானம் அகற்றி மெய்ஞ்ஞானம் உணர்வித்து, மேன்மையுறச் செய்யும் அற்புதம் சிவபுராணம் ஆகும். ஆசை, அகந்தை, மனங்கொண்டு மாயை இருளை உடலில் போர்த்திக் கொண்டு திரியும் மனித குலம் அமைதி பெற சிவசக்தி கவசமாகிறது. மனிதப் பிறவி மாண்பு பெறவழி செய்யும்.

"நாயிற் கடையாய் கிடந்த அடியேற்கு
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே"

என்று பாடிப் பரவசம் அடையும் போது உள்ளம் புத்துணர்ச்சி பெறுகிறது. சிந்தனை சீர் பெறுகிறது. நல்லொழுக்கம் பற்றிக் கொண்டு பிறந்த பிறப்பறுத்து ஆன்மீகம் அரவணைத்துக் கொள்கிறது. பெருங்கருணையாளன் சிவ பெருமான் நம் உள்ளத்தின் உள்ளே உறைகின்றான். நம்மை வழிநடத்துகிறான். எல்லாம் தம்மால் இயலும் என்று எண்ணினாலும் அதை ஆக்குவிக்கும் சக்தி ஒன்று உண்டு என்ற நம்பிக்கையே நம்மை வாழ்விக்கும்.

நம்முடைய அல்லல் பிறவி அறுத்து அரவணைக்கும் கரங்கள் கண்ணுக்குப் புலப்படாது. உணர்வுக்குப் புலப்படும். தெய்வ நம்பிக்கை மனிதப் பிறப்பைப் புனிதப் படுத்தும்.

"போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே" என்று மணிவாசகர் பாடி மகிழ்ந்தார் என்றால், அந்த இன்பம் எல்லார்க்கும் கிடைக்க, எல்லார் மனங்களும் ஓத ஆங்காரம் நீங்கி அமைதி பெறுவர்.

"தொல்லை இரும் பிறவி சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே!
எல்லை மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்"

என்று போற்றிப் புகழ் பாடி மகிழ்வர் பாவலர்.

தேவாரம், திருவாசகம் யாவும் பேரானந்த நிலையருளி அருள் பாலிக்கும் ஔடதங்களாகும். நமது திருமுறைகள் பன்னிரண்டும் திரும்பும் திசையெல்லாம் கவனமுடன் நம்மைக் கண்காணிக்கும் மூலமந்திரங்களாகும். சைவன் என்று சொல்லிக் கொள்வதால் மட்டும் சைவனாகி விட முடியாது.

தெள்ளு தமிழ் பக்திப் பனுவல்களைப் பாடித் தெளிவதால் மட்டுமே நாம் நித்தியம் பெறமுடியும். இன்றைய சமுதாயம் அரை நூற்றாண்டைக் கடந்து விட்டவர்களால் மட்டும் தேவாரப் பண்களைப் பாட முடிகிறது. நாளைய சமுதாயம் என்ன செய்யும்? அதற்கான அடிப்படைகளை நாம் அமைத்துள்ளோமா? சிந்திக்கின்றோம்.

அவரவர் சமயத்தில் ஆழ்ந்த புரிந்துணர்வோடு பலரும் பாதுகாத்து வருகின்றனர். இந்நிலையில் நாம் ஏனோ தானோ என்று வாழ்ந்தால் நாளைய விளைவுகளை எண்ணிப் பார்க்கின்றோமா? நமது இளைய தலைமுறையினர் நாளைய நாளை எவ்வாறு மேற்கொள்வார்கள்? அவர்களைச் சமய நெறிப்படுத்த என்ன வழி யோசிக்கின்றோம்? ஒருவர் மட்டும் ஒரு மூலையில் நின்று பஞ்சபுராணத்தை ஓதுவதைத் தவிர்க்க வேண்டும். ஆலயங்கள் தோறும் கூட்டுப் பிரார்த்தனை வழிபாடு அமுலுக்கு வர வேண்டும். இளமை முதல் கேள்வி ஞானத்தால் எல்லாம் மனனமாகி விடும். சமயப்பாடல்கள் யாவும் உலகெங்கும் எதிரொலிக்கும்.

"உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகிற் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்."

திருச்சிற்றம்பலம்

திருமதி சரஸ்வதி அரிகிருஷ்ணன்

தினமும் 25 நிமிடமாவது கடவுளை கும்பிடுங்கள்.
பலன் கருதாது செயற்படுங்கள்
பாவமான செயல்களைச் செய்யாதீர்கள்
மன்னிப்புக்கோரும் பழக்கத்தை வளருங்கள்
பொறுமையைக் கடைப் பிடியுங்கள்
பிறர் நோகும் படி நடக்காதீர்கள்
போதுமென்று மனத்திருப்தியுடன் வாழவும்
உங்களிடம் இல்லாத்தை நினைத்துக்கவலைப்பட வேண்டாம்.

அவலங்களைப் போக்கும் ஆன்மீக வாழ்வு

- கவிஞ்ஞர் வி. கந்தவனம் -

மனித வாழ்க்கையை ஒரு பொதுநிலையில் இரண்டாகப் பிரித்துப் பேசுவது வழக்கம். ஒன்று உலகியல் வாழ்க்கை, மற்றையது ஆன்மீக வாழ்க்கை. உலகியல் வாழ்க்கை ஐம்புலன்களின் ஆட்சிக்குட்பட்டது. அதனால் பந்தபாசங்களாற் கட்டுப்பட்டது. ஆன்மீக வாழ்வு ஐம்புலன்களை யடக்கிய வாழ்வு. அதனால் அது பக்குவத்துடன் நடத்தப்பெறுவது. ஆன்மீக வாழ்வை நன்கு விளங்கிக் கொள்வதற்கு முதலிலே ஆன்மீகம் என்றால் என்ன என்று அறிந்துகொள்வது நல்லது.

ஆன்மீகம் என்றால் என்ன?

ஆன்மீகம் என்றதுமே அது சமயத்தோடு தொடர்புடையது, கடவுள் வழிபாட்டுக்கு முதன்மை அளிப்பது, வேத ஆகம விதிகளை நடைமுறைப்படுத்துவது, கோயிலிற் பூசைகளையும் விழாக்களையும் செய்வது, ஒழுக்கத்தை வலியுறுத்துவது என்றெல்லாம் நினைப்பதும் பேசுவதும் வழக்கமாகிவிட்டது. அவ்விதம் நினைப்பவர் முக்கியமான ஒன்றைப் பொதுவாகக் கருத்திலே கொள்வதில்லை - ஆன்மீகம் என்பது தங்களைப்பற்றியது என்று எண்ணத் தவறிவிடுகின்றனர்.

ஆன்மா என்றால் உயிர். பசு என்று சைவசித்தாந்தம் பேசும். பசுக்கள் பலவகையாயினும் ஆன்மீகத்தில் தங்கள் உயிர்களைப்பற்றிச் சிந்தித்து அதற்கு ஈடேற்றந் தரமுயல்பவர் மக்களேயாவர். அதனாலேயே,

தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாந் தொழும்(1)

என்றார் வள்ளுவர் பெருமான். `தன்னுயிர் தானறப் பெறுதல்` என்பது தன்னைத்தான் முழுமையாக அறிதல். முழுமையாக அறிதல் என்றால் என்ன?

குறைகளை மட்டுமன்றி நிறைகளையும் அறிதலே முழுமையாக அறிதல் என்பது. இது சுயவிசாரணை பற்றியது. நாம் எங்களைப்பற்றி ஆராய்தல் வேண்டும்.

நான் ஆர் என் உள்ளம் ஆர் ஞானங்கள் ஆர்?
என்னை யார் அறிவார்(2)

என்று கேட்கின்றார் மணிவாசகப் பெருமான். இது ஒரு நல்ல ஆய்வு முறை. எங்களைப் பற்றி முழுமையாக அறிவதற்கு இவ்விதம் கேள்விகள் கேட்கவேண்டும். ஆனால் நாம் எங்களைப்பற்றி ஆராய்வது பொதுவாகக் குறைவு. மற்றவர்களைப்பற்றித் துருவித் துருவி ஆராய்வோம். அதுவும் அவர்களின் குறைகளையே அதிகம் பேசுவோம். அதனையும் சோடித்து இல்லாததையும் பொல்லாததையும் வைத்துப் பேசுவோம்.

ஆனால் எங்களைப் பற்றிப் பேசும்பொழுது நிறைவைத்தான் பேசுவோம். குறைகளைப் பற்றிப் பேசவே மாட்டோம். எம்மிடம் குறைகள் கண்டாலும் அல்லது நாம் ஏதும் தவறுகள் செய்தாலும் அவற்றுக்கும் பிறர்தாம் காரணம் என்று சொல்லி அவர்களைத் தூற்றுவோம். ஏனென்றால் நாங்கள் செய்வதெல்லாம் சரி, மற்றவர்கள் செய்வது சரியில்லை - இப்படி ஒரு மனப்பான்மை. ஆணவத்தின் விசித்திரம். இது எங்களைப்பற்றி முழுமையாக அறியாததால் ஏற்படக்கூடிய விளைவு.

தான் அறுதல் - நான் என்னும் முனைப்புக் கெடுதல். பசுக்கள் இயல்பாகவே மலபந்தம் உடையன. மலங்கள் ஆணவம், கன்மம், மாயை என மூவகைப்படும். மும்மலங்களில் ஆணவம் இருளிலும் கொடியது எனப்படுகின்றது. ஏனெனில் இருள் தன்னைக் காட்டும். பிறபொருள்களை மறைக்கும். ஆனால் ஆணவம் தன்னையும் காட்டாது பிறவற்றையும் அறியவிடாது. ஆணவத்தின் முனைப்புக் கெடுதலே தான் அறுதலாகும். இக்கெடுதி 'எல்லாம் இறைவன் செயல்' என்ற உண்மை நிலைக்கு உயிரை உயர்த்தும். அந்த உயிரை ஏனைய உயிர்கள் எல்லாம் தொழுமாம்.

எனவே ஆன்மீகம் என்பது தன்னைத்தான் அறிதல். தனது நடத்தையில் உள்ள குறைநிறைளை மதிப்பிடுதல். வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு இவ்வித மதிப்பீடு மிக இன்றியமையாதது.

திருவருளால் அறிதல்

தான் அறிந்து தன்னைத்தான் அறிந்துகொள்வதற்குத் திருவருள் கைகூடுதல் வேண்டும். ஒருமுறை கொழும்புத்துறை சிவயோக சவாமிகளை அவரது குரு செல்லப்பா சுவாமிகள் "யாரடா நீ"" என்று கேட்டார். சாதாரணமாக இத்தகைய கேள்வி ஒருவருக்குக் கோபத்தை உண்டு பண்ணக்கூடியது. அடிபிடியிலும் முடியக்கூடியது. யோகர்சுவாமிகள் பக்குவம் பெற்ற ஆன்மாவாதலால்,

என்னையெனக் கறிவித்தான் எங்கள்குரு நாதன்
இணையடியென் தலைவைத்தான் எங்கள்குரு நாதன்
அன்னைபிதா குருவானான் எங்கள்குரு நாதன்
அவனியெல்லாம் ஆளவைத்தான் எங்கள்குரு நாதன்(3)

என்று பாடினார். தன்னைத்தான் அறிதலும் இறையருளால் வரவேண்டியது என்பதைச் சொல்லாமற் சொல்லுகின்றார்.

எல்லாம் இறைவன் செயல் என்று வெறுமனே வாயாற் சொல்லுவதற்கும் தானறப் பெற்ற ஞான நிலையிலே சொல்வதற்கும் வேறுபாடு அதிகம். ஞானநிலை இறை அருளோடு கூடியது. குருவின்றி ஞானம் இல்லை. ஞானம் என்பது பதிஞானம். அவனின்றி அணுவும் அசையாது என்கின்ற ஞானம். அவனை அறிந்து அவனுடன் வாழ்கின்ற வாழ்வே ஆன்மீக வாழ்க்கை. அவனை அறிவதற்கு ஆகாயத்தைப் பார்க்க வேண்டியதில்லை. கோயில் குளங்களுக்கும் அலைய வேண்டியதில்லை.

கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்
ஒங்கு மாகடல் ஓதநீர் ஆடிலென்
எங்கும் ஈசன் எனாதவர்க் கில்லையே(4)

என்ற அப்பர் பெருமான் கருத்துக் கவனிக்கத்தக்கது. இக்கருத்தே இக்காலத்தில் வலுப்பெற்று வருகின்றது. மரபுரீதியாக ஆன்மீகத்தை ஆலயங்களே வளர்த்து வந்தன. இக்காலத்தில் ஆலயம் என்கின்ற நிறுவனத்துக்கு அப்பால் ஆன்மீகத்தை வளர்க்கும் அமைப்புகள் பல தோன்றியுள்ளன. சாயிபாபா பத்தர்கள், பிரம்மகுமாரிகள், அம்மா பகவான் அடியார்கள், மேல்மருவத்தூர் பங்காரு அடிகளின் அடியார்கள் உலகெங்கணும் உள்ளனர். அவர்கள் வீட்டுப் பிரார்த்தனைகள், கூட்டுப் பிரார்த்தனைகள் மூலம் ஆன்மீகத்தை வளர்த்து வருகின்றார்கள். ஆலயங்களுக்கு அவர்கள் செல்வது குறைவு.

உடம்பினுள்ளே உறுபொருள்

இறைவன் எங்கும் இருக்கின்றான். எமக்குள்ளேயும் இருக்கின்றான். எமக்குள்ளே இருக்கும் இறைவனைக் கண்டறிதலும் அவனுடன் உறவாடி மகிழ்தலும் ஆன்மீகச் செல்வரின் வாழ்க்கையாகும்.

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின் றேனே(5)

என்றார் திருமூல நாயனார். உள்ளே இருக்கும் உறுபொருளை அறிதலே தன்னைத்தான் அறிதலின் உச்சக்கட்டம்.

உறுபொருளை உள்ளே கண்டுவிட்டதால் திருமூலநாயனாருக்கு உடம்பு கோயிலாகின்றது. காணாதவருக்குக் காயம் ஒரு மாயம். பொய், காற்றடைத்த பை. திருமூலரே அது இழுக்கு என்று தான் இருந்ததை ஒப்புக்கொள்கின்றார். உத்தமன் - இறைவன். இறைவன் தன்னுள்ளே கோயில் கொண்டான் என்று உணர்ந்துகொண்டபின் உடம்பினை இருந்து ஓம்புகின்றார். தனக்காகவல்ல, இறைவனுக்காக.

ஓம்புதல் - பேணுதல். எவ்விதம் இறைவன் எழுந்தருளியிருக்கும் கோயிலைச் சுத்தமாக வைத்திருக்கிறோமோ அவ்விதம் உடலையும் சுத்தமாகப் பேணுதல் வேண்டும். இறைவனைத் தம்முள்ளே கண்டவர் மது அருந்தமாட்டார்கள். மாமிசம் புசிக்கமாட்டார்கள்.

உடற் சுத்தத்துடன் மனச்சுத்தத்தையும் பேணுதல் வேண்டும். இறையுணர்வு பெற்றவர் அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் போன்ற அழுக்குகளை அணுகவிடமாட்டார்கள். இவ்வழுக்குகளாலேயே உலகத்திற் பகைமைகள் வளருகின்றன. தீமைகள் இடம்பெறுகின்றன. ஆன்மீகத்தர் பூசு நீறுபோல் உள்ளத்தை எப்பொழுதும் புனிதமாகவே வைத்திருப்பர். உள்ளப் புனிதம் அன்பை வளர்க்கும். அமைதியை நிலைநாட்டும்.

திருமூல நாயனார் கண்ட உறுபொருளை அப்பர் பெருமானும் தம்முள்ளே கண்டு பாடுகின்றார்:

தேடிக் கண்டு கொண்டேன் - திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டுகொண்டேன்.(6)

அதனால் காயமே கோயில் என்றும் பாடிக் களிக்கின்றார்.

இந்த இணையற்ற அனுபவமே தன்னுயிர் தானறப் பெறுதல் என்பது. தன்னுயிர் தானறப் பெறுதலே மனிதப் பிறவியின் தலையாய பயன். பிறவிப் பெருங்கடலை எளிதாக நீந்திக் கடப்பதற்கு உகந்த உபாயம். முத்தியின்பம் பெறுவதற்கு முதன்மையான முறை. அதற்கென்றே இப்பிறவி பெறப்பட்டது. இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ?

ஆன்மீக வாழ்வு துறவறத்துக்குரியதா?

இனி, ஆன்மீக வாழ்வு துறவறத்துக்குரியது என்று பலர் நினைக்கிறார்கள். அதாவது இல்லறம் துறவறம் என்கின்ற இரண்டில் இல்லறம் உலகியலுக்குரியதென்றும் துறவறம் ஆன்மீகத்துக்கு

உரியதென்றும் கருதுகின்றார்கள்.

சைவம் அப்படிச் சொல்லவில்லை. இல்லறத்தில் இருந்துகொண்டே ஒருவர் ஆன்மீக வாழ்வை அனுபவிக்கலாம். உண்மையில் துறவறத்துக்கும் இல்லறமே உதவியாகவுள்ளது.

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை(7)

என்பார் வள்ளுவர் பெருமான்.

இல்லறத்தில் இருந்துகொண்டே இறைவனை உள்ளும் புறமுமாகக் காணலாம் என்பதனைச் சேக்கிழார் பெருமானின் திருத்தொண்டர் புராணம் எமக்கு நன்கு காட்டுகின்றது. அதன் கதாநாயகர் சுந்தரமூர்த்தி நாயனார் வரலாறே நல்ல உதாரணம்.

எனவே ஆன்மீகம் என்பது எமது உயிரின் நிலையான மேம்பாட்டுக்கே என்று துணிந்து நடப்பவர் எமது மதிப்புக்கும் வணக்கத்துக்கும் உரிய மலபரிபாகத்தவர். ஆன்மீக வாழ்வு பக்குவ வாழ்வு. இருவினையும் ஒப்பான வாழ்வு. அதில் அமைதியும் சமாதானமுமே நிலவும். சீவன் சிவனாகித் துலங்கும் அநுபூதி வாழ்வு அது.

ஆன்மீகம் துறந்தா ருக்கோ
அவ்வுல குக்கோ வல்ல
ஆன்மீகம் எம்மைப் பற்றி
ஆராய வைத்துத் தீய
பான்மைகள் அனைத்தும் போக்கிப்
பக்குவம் செய்யும் பாதை
மேன்மைகொள் வாழ்வை இங்கே
மேற்கொள்ள வைக்கும் நீதி!(8)

அவலங்களுக்கு மருந்து

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது(9)

என்று முதலாவது அதிகாரத்திலேயே அறிவுறுத்துகின்றார் வள்ளுவர் பெருமான். அவர் என்றோ சொன்னதை இன்று பரிசோதனைகள் பல நிரூபித்துள்ளன. அமெரிக்காவில் ஒரே வருத்தமுள்ள சிலரைத் தெரிவுசெய்து இரு குழுக்களாகப் பிரித்தனர். ஒரு குழவை இறைவழிபாட்டில் ஈடுபடுத்தினர். பின்னர் இரு குழுக்களினதும் முன்னேற்றங்களை மதிப்பிடுகையில் இறைவழிபாட்டுக் குழுவினர் மற்றயை குழுவினரிலும் வேகமாகக் குணமாகிவருவது கண்டிறியப்பட்டது. இந்தப் பரிசோதனையைப் பகிரங்கமாகக் கனடா TVI தொலைக்காட்சியிற் கூறியவர் டாக்டர் சூரியபாலன் அவர்கள்.

இந்தியாவில் உள்ள இராஜஸ்தானில் பிரம்மகுமாரிகள் அமைப்பு மருத்துவமனை ஒன்றை நடத்தி வருகின்றது. அதன் நிருவாகத் தலைவராக டாக்டர் பிரதாப் அவர்கள் தொண்டாற்றுகின்றார். அவர் அண்மையில் கனடா துரந்தை(Toronto) நகரில் உரையாற்றுகையில் பல நோய்களைத் தியானம், இராஜயோகம் மற்றும் பிரார்த்தனைகளால் தாம் மாற்றியிருப்பதை, மாற்றிவருவதைக் குறிப்பிட்டார்.

ஆன்மீக வாழ்வு தனிப்பட்ட அல்லது குடும்பமட்ட அளவிலன்றி ஊர் உலகத்து அவலங்களையும் போக்க வல்லது. இன்று உலகத்தில் சண்டை சச்சரவுகளும் வன்முறைகளும் கொலை களவுகளும் அதிகரித்து வருவதற்குக் காரணம் மக்கள் தங்களுக்குள் இருந்து,

தங்களுக்கே தெரியாமல் தங்களை வழிநடத்தும் இறைவனை அறிந்துகொள்ளாமையேயாகும்.

அறிந்து கொண்டு பயனடைய வேண்டும் என்று சொல்வதே இக் கட்டுரையின் நோக்கம். இதுவரை ஆன்மீகம் என்பது எம்மைப்பற்றியது என்பதும் எம்மை நாம் அறிந்து கொண்டு தானற நடக்கவேண்டும் என்பதும் எமக்குள்ளே இருக்கும் இறைவனைக் கண்டுகொண்டு அவனுடன் உறவாடும் தெய்வீக வாழ்வே ஆன்மிக வாழ்வு என்பதும் ஆன்மீக வாழ்வால் தனிப்பட்டவரது நோய் நொடிகளன்றி அகிலகத்து அவலங்களையும் போக்கலாம் என்பதும் எடுத்துரைக்கப்பெற்றன.

இறுதியாக ஒன்று. ஆன்மீக வாழ்வு அனுபவிக்கப்பட வேண்டியது. அதனை யாரிடமிருந்தும் வாங்க முடியாது. அதனால் ஆன்மீகத்தை வியாபாரம் ஆக்குபவர்பற்றி அன்பர்கள் கவனமாக இருத்தல் நல்லது.

வாழ்க ஆன்மீகம்! வளர்க வையகத்து அமைதி!

----

1. திருக்குறள்: 268
2. திருவாசகம்: 216
3. நற்சிந்தனை: முதலாவது பாடல், எங்கள் குருநாதன்.
4. திருநாவுக்கரசர் தேவாரம்: பாவநாசத் திருக்குறுந்தொகை
5. திருமந்திரம்: 725
6. திருநாவுக்கரசர் தேவாரம்: பொது-திருவங்கமாலை
7. திருக்குறள்: 42
8. ஆன்மீகக் கவிதைகள், வி. கந்தவனம், காந்தளகம், சென்னை. 2007.
9. திருக்குறள்: 7

இருப்பதைக் கொண்டு திருப்தி அடையுங்கள்
முயற்சி செய்யவும் ஆனால் பேராசை வேண்டாம்
குருவை எப்போதும் வணங்கவும் , பணிவுடன் இருக்கவும்
நல்ல நண்பர்களுடன் உறவாடவும் கூட்டுப்பிரார்த்தனை செய்யவும்
உங்கள் துன்பங்களை இறைவன் அடியில் சமர்ப்பியுங்கள்
நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவும்
நல்லது தீயது இனங்கண்டு வாழவும்

வழிபாட்டில் நீர்

முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்
முன்னாள் ஆய்வுப் பேராசிரியர்
கக்சுயின் பல்கலைக் கழகம், ஜப்பான்.

வையகம் எங்கும் வழிபடச் செல்லும் போது எல்லோரும் நீராடித் தூய்மையாகச் செல்ல வேண்டும் என்ற மரபு இன்றுவரையும் தொடர்கிறது. நீரின் பயன்பாடு பற்றி நோக்கும் போது தமிழர் வழிபாட்டில் நீர் இன்றியமையாத ஒன்றாக விளங்குவதைக் காணலாம்.

இயற்கையின் கொடைகளில் ஒன்று நீர். "நீர் இன்று அமையாது உலகு" என்று வள்ளுவர் கூறியுள்ளார். நீர் உணவாகவும் எல்லா உயிரினங்களுக்கும் பயன்படுகிறது. அதனால் நீர் தெய்வ மடைப் பொருளாகவும் போற்றப்படுகிறது.

நீர் நிலைகளை வழிபாட்டிடங்களாகத் தமிழரும் வையகத்தில் இன்னும் பலரும் கொண்டுள்ளனர். ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் என மூவகையான நீர் எமக்குக் கிடைக்கிறது. இன்னும் நீர் நிலைகளான அருவி, குளம், சுனை, குளம், ஓடை, கால்வாய், துரவு எனப் பல்வேறிடங்களிலும் வழிபாடு நடக்கிறது. பரிபாடல் என்னும் பழந்தமிழ் இலக்கியம் வைகை ஆற்றங்கரையிலே நடந்த வழிபாட்டைப் பதிவு செய்து வைத்துள்ளது. அருவியும், சுனையும் வழிபாட்டிடங்களாகப் பேணப்பட்டதைச் சங்கத் தமிழ்ச் செய்யுள்கள் விளக்கியுள்ளன. நீர் வறண்டுவிட்டால் மண்ணுலகம் மட்டுமல்ல விண்ணுலகமும் இடர்படும் எனக் குறள் சுட்டிக் காட்டுகிறது.

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு" (குறள் : 18)

மழை பெய்து நீர் வளம் மக்களுக்குக் கிடைக்கிறது. ஆனால் மழையை வானம் பொழியாது விட்டால் தேவர்களுக்கு மக்கள் செய்கின்ற விழாவும் பூசையும் நடைபெறாது. எனவே மழையை வேண்டி வழிபாடு ஒன்றை ஆண்டாள் தொடக்கி வைத்தாள். "திருப்பாவை" என அவள் பாடிய முப்பது பாடல்களில் இந்த வழிபாட்டு மரபு முதன் முதலாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. பின்னர் நாயன்மாரில் மாணிக்கவாசகர் திருவெம்பாவைப் பாடல்கள் என இருபது பாடல்களிலே மழை வேண்டி நோன்பிருக்கும் பண்பாட்டு நடைமுறையைப் பாடியுள்ளார். இம்மரபு இன்றுவரையும் மார்கழி நோன்பாக வழிபாட்டு மரபாக நிலைத்துள்ளது. மழைநீர் எல்லோருக்கும் பெரும் பயன்தருவது. எனவே அதற்காக எல்லோரும் கூட்டாக இணைந்து வழிபாடும் செய்வது சிறப்பானது. குறிப்பாக இந்த வழிபாட்டு நடைமுறையைப் பெண்களே பேணிவந்துள்ளனர்.

நீரின் சிறப்புகளில் ஒன்று தண்மை. அதாவது குளிர்மையாக இருப்பது. அதனால் நீர் தண்ணீர் என்றும் சிறப்பாக அழைக்கப்பட்டது. நீர் எல்லோராலும் பேணிக் காக்கப்பட வேண்டும். அதனால் நீர் நிலைகளின் அருகே வழிபாட்டிடங்கள் அமைக்கப்பட்டன. சிறப்பாகப் பிள்ளையாருடைய வழிபாட்டிடங்கள் நீர் நிலைகளுக்கு அருகிலே அமைந்தன. ஆற்றங்கரைப்பிள்ளையார், குளத்தங்கரைப் பிள்ளையார், கிணற்றங்கரைப் பிள்ளையார் எனச் சிறப்பாகப் பிள்ளையார் பெயர் கொண்டு வழிபடப்படுவது இதற்குச் சான்றாகும்.

இவ்வாறு அமைந்த நீர் நிலைகள் பொது நீர் நிலைகளாகவும் விளங்கின. மக்கள் தம்முடைய நீர்த் தேவைகளையும் இங்கே வந்து நிறைவேற்றினர். வழிபாட்டுக்கு வருபவர் நீர் நிலையிலே நீராடி வழிபாட்டை நிறைவேற்றிய பின்னர் தமது குடிநீர்த் தேவைக்கான நீரையும் குடங்களிலே சுமந்துசென்றனர். எல்லாக் கோயில்களிலும் கேணிகள் அமைக்கப்பட்டன. இயற்கையாக நீர்நிலைகள் இல்லாத இடத்துச் செயற்கையாகக் கேணிகள் அமைக்கப்பட்டன. மூவர் பாடிய தேவாரங்களிலே திருக் கோயில்களுக்கு அருகே அமைந்த நீர் நிலைகள் பற்றிய பல குறிப்புகள் உள்ளன.

எடுத்துக்காட்டுகள் சில:

"பொன்திரள் மணிக் கமலங்கண் மலரும்
பொய்கை சூழ் திருப்புன்கூர்"...... (சுந்தரர்)

பரக்குங் காவிரி நீரலைக்குங் கரைக்
குரக்குக் கா..... (அப்பர்)

கோயிலு சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை ..... (சம்பந்தர்)

வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில்
பங்கஞ் செய்த மடவாளொடு பாலாவியின்
கரைமேல்...... (சுந்தரர்)

திருக்கோயில்கள் அமைந்த இடங்களிலே சென்று நீராடினால் தீராத நோயும் பிணியும் தீரும் என்ற நம்பிக்கையும் பண்டைய மக்கள் மனதிலே வேரூன்றி உள்ளது. அவ்வாறு நீராடும் போது பாவங்களும் தொலையும் என்பர். திருநள்ளாறு என்னும் திருக்கோயிலிலே உள்ள நளதீர்த்தம் இத்தகைய சிறப்புடையதாகும்.

திருக்கோயிலுக்குள் செல்லும் போது கால்கழுவியே செல்ல வேண்டும். எனவே இயற்கையான நீர் நிலைகள் அமையாத திருக்கோயில்களிலே கேணிகளை அமைத் திருப்பர். அங்கு மக்கள் கால், கை, முகம், கழுவிய பின்னர் கோவிலுள் சென்று வழிபடுவர். பெருந்திருவிழாக் காலங்களிலே "தீர்த்தத் திருவிழா" என ஒரு திருவிழா நடைபெறும். அன்று சுவாமி நீர்நிலையிலே தீர்த்தமாடுவார். நீர் நிலைகளின் வேறுபாட்டிற்கேற்ப இவ்விழா வேறுபட்ட பெயர்களால் அழைக்கப்படுகிறது. சமுத்திரத் தீர்த்தம், கேணித்தீர்த்தம், கடல்தீர்த்தம், குளத்தீர்த்தம், எனப் பல பெயர்கள் உண்டு. இவற்றிற்குச் சிறப்பான பெயர்களும் உண்டு. பாவநாசதீர்த்தம், மாணிக்க கங்கை, பாலாவித் தீர்த்தம், மாமாங்கத்தீர்த்தம், காங்காதீர்த்தம், நளதீர்த்தம் என்பன அவற்றுட் சிலவாகும்.

வழிபாட்டில் மடைப் பொருட்களான முக்கனி, வெற்றிலை, பாக்கு, தேங்காய் என்பவற்றை நீரில் கழுவியே பயன்படுத்த வேண்டும். நீர் எல்லாவற்றையும் தூய்மைப் படுத்துவதால் அது தனித்துவமான சிறப்பு உடையதாக நமது முன்னோரால் கணிக்கப் பட்டிருந்தது. இறையுருக்களை நீராட்டிய நீர் எல்லோர் மீதும் தெளிக்கப்படும் போது அது எல்லோரையும் தூய்மைப்படுத்தும். நீர்க் கரகங்கள் வழிபாட்டு நடைமுறைகளிலே இன்றியமையாதவை. அவை "பூரணகும்பம்" என வட மொழியில் அழைக்கப்பட்டன. இன்றும் இப்பயன்பாடு உள்ளது. இதற்குரிய தமிழ்ச் சொல் "நிறைகுடம்" என்பதாகும். குடங்களிலே நீரை நிரப்பி மாவிலை தேங்காயை அதன் மேல் நேர்த்தியாக வைப்பர். குடங்களுக்கு நூல் சுற்றி விடுவர். குடமுழுக்குப் பூசையின் போது இந்த நிறைகுடங்களால் தெய்வங்களை நீராட்டுவர்.

வீடுகளிலே வழிபாட்டு நடைமுறைகள் செய்யும் போது முழுவீட்டையும் நீரால் கழுவும் வழக்கம் உண்டு. மஞ்சள் அல்லது பசுவின் சாணத்தை நீரிலே கரைத்து வீடுமுழுவதும் தெளித்துவிடும் வழக்கமும் உண்டு. மஞ்சளும் பசுவின் சாணமும் கிருமிகளை அழிக்கும் வலிமையுடையவை. நமது முன்னோர் பயன்படுத்திய இக்கிருமிநாசினி இப்போது வழக்கொழிந்து விட்டது. வழிபாட்டு நடைமுறையின் தொடக்கமாக நிறைகுடம் வைக்கப்படும். அக்குடம் புது நீரால் நிரப்பப்பட்டிருக்கும். வீடு தூய்மையாக இருப்பதையும் அங்கு வழிபாட்டு நடைமுறை நிகழவிருப்பதையும் நிறைகுடம் பறைசாற்றி நிற்கும்.

பொதுவாக மக்கள் நீராடுவதற்கு நீர்நிலைகளை நாடிச்செல்லும்போது இப்போது சுற்றுலா மனப்பாங்குடனேயே செல்கின்றனர். கீரிமலைத் தீர்த்தம் போன்ற வரலாற்றுப் புகழ் வாய்ந்த இடங்களிலே இந்நிலை மிகுந்து காணப்படுகிறது. நீர் பற்றிய எண்ணக்கருக்கள் இப்போது மாறிவிட்டன. பொது நீர்நிலைகள் தூய்மையாக இருக்க வேண்டும் என்னும் எண்ணம் ஒருவருக்கும் இல்லை. வழிபாட்டிடங்களிலே அமைந்திருந்த நீர்நிலைகளிலும் தெய்வம் குடியிருப்பதாக நம்முன்னோர்கள் நம்பினர். அலைகடலிலே அரங்கனும் இலக்குமியும் உறைவதாக எண்ணிக் கடலையும் வழிபட்டனர். ஆற்றங்கரையிலே புதுவெள்ளம் வரும் போது மடைபோட்டு வழிபட்டனர். மழையை வாழ்த்தி வாழ்ந்தனர்.

"மார்கழி நீராடல்" நீர் வழிபாட்டில் பெற்றிருந்த சிறப்பைக் காட்டி நிற்கிறது. குளிர்ந்த காலத்தில் குளிர்ந்த நீரிலே நீராடுவது மனவுறுதிக்கும் ஒரு பயிற்சியாக அமைந்திருந்தது. துறவிகள் இத்தகைய குளிர்ந்த நீரில் நீராடி தமது மன உறுதியை வளர்த்தனர். ஜப்பானிய நாட்டிலே சுனையிலே குளிர்ந்த நீரில் நீராடுவது ஒரு வழிபாட்டு நடைமுறையாக உள்ளது. இந்து சமயத்திலும் நீராடுதல் இத்தகையதொரு பயிற்சியாகவே இருந்தது. மாசித்திங்களில் மகா நட்சத்திரநாளன்று மாசிக்கடலாட்டு நடைபெறும். எல்லாத் திக்குகளிலிருந்தும் தெய்வங்கள் கடற்கரைப்பிரதேசத்துக்கு உலாவந்து தீர்த்தப் பெருவிழா நடைபெறும். பன்னிரண்டு ஆண்டுக்கொருமுறை நடைபெறும் இப்பெருவிழா "மாமாங்கத் தீர்த்தம்" எனச் சிறப்பாக அழைக்கப்படுகிறது. சம்பந்தர் பாடலிலே வருமாறு பதிவு செய்துள்ளார்.

"மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச்சர மமர்ந்தான்"

எனவே வழிபாட்டில் நீர் இன்றியமையாத ஒன்று என்பதை எல்லோரும் உணர வேண்டும். ஐம்பூதங்களில் ஒன்றாக நீர் மனிதனுக்கு என்றும் தேவையென்பதை மறக்கலாகாது.

நட்ட கல்லுப் பேசுமோ?

சித்தாந்தரத்தினம், கலாநிதி க. கணேசலிங்கம்

தெய்வத் திருவுருவங்கள் கல்லிலும் வேறு பொருட்களிலும் செய்யப்பட்டு வணங்கப்படுகின்றன. இது தவிர மண்ணுக்குள் கல்லை நட்டு அதனைத் தெய்வம் என்று வணங்கும் வழக்கமும் உண்டு. சித்தர் பாடலொன்று, இதனைக் கண்டு, "நட்ட கல்லுப் பேசுமோ?" என்று கேட்கிறது.

நட்ட கல்லைத் தெய்வமென்று நாலு புட்பம் சாற்றியே
சுற்றி வந்து மொணமொணென்று சொல்லு மந்திரம் ஏதடா?
நட்ட கல்லுப் பேசுமோ நாதனுள் இருக்கையில்?
சுட்ட சட்டி சட்டுவங்கள் கறிச்சுவை அறியுமோ?

உருவ வழிபாட்டைப் பழிப்பது போல் காணும் இப்பாடலைப் பாடியவர் சித்தர் சிவவாக்கியார் எனப்படுவர். இவர் பதினெண் சித்தரில் முக்கியமான ஒருவர். சித்தர்களில் அதிக பாடல்கள் பாடியவர் இவர் எனக் கூறுவர்.

இப்பாடலில், இறைவன் எமக்குள் இருக்கிறான், கல்லைக் கடவுளென்று வணங்குவதால் பயனில்லை, என்ற கருத்துத் தோன்றுகிறது, சட்டியும் அகப்பையும் (சட்டுவம்) கறியின் சுவையை அறியமாட்டா, இது போன்றதே கல்லைத் தெய்மாகக் கொண்டு தொழுவதும் என்று கூறப்படுகிறது. இக்கருத்துச் சரியானதா? சித்தர் தவிர்ந்த அருளாளரின் கருத்தென்ன? இவை போன்ற கேள்விகள எழுகின்றன.

இக்கேள்விகளுக்குப் பதிலளிப்பது போல் திருமூலரின் சில பாடல்கள் உள்ளன. அவரைப் பெரும் சித்தர் எனப் பலர் போற்றுவதுண்டு. அவர் சொல்வது, "மரத்தினாற் செய்த பெரிய யானை-யொன்று இருக்கிறது. அதை யானை என்று பாரத்தால் மரம் தெரிவதில்லை. மரத்தை யானை மறைத்துவிடுகிறது. மரமென்று பார்த்தால் யானை தெரிவதில்லை. யானை மரத்துள் மறைந்துவிடுகிறது". "மரத்தை மறைத்தது மாமதயானை மரத்துள் மறைந்தது மாமத யானை" என்பது அவரின் திருமந்திரம். நம்பினவருக்கு கல் மறைந்துவிடும். கடவுள் தோன்றும்.

சைவ அருளாளர்கள் கல்லிலே கடவுளைக் கண்டார்கள். அதனால் கல்லையே கடவுளென்று கும்பிட்டுப் பாடினார்கள். அவர்களுக்கு கல் தெரியவில்லை. கடவுள் மட்டும் தெரிந்தார்.
சிவவாக்கியாரின் இன்னொரு பாடல், கோயில் குளங்களைத் தேடிப்போய்க் கும்பிடுவதால் பயனில்லை என்று கூறுகிறது.

கோயிலாவ தேதடா குளங்களாவ தேதடா
கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே
கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே
ஆவதும் அழிவதுமும் இல்லையில்லை யில்லையே.

சைவசமயம் திருக்கோயில் வழிபாட்டையும் திருவுருவ வழிபாட்டையும் வலியுறுத்துவது. கல்லானாலும் மரமானாலும் அதனைக் கடவுள் என வழிபட்டு இறைநிலை கூடியவர்கள் சைவ ஞானிகள். அவர்கள் எல்லாவற்றிலும் இறைவனைக் கண்டனர். அவர்களுக்கு "எல்லாம் சிவமயம்".

இறைவன் கல்லிலும் புல்லிலும் நிலத்திலும் நீரிலும் பிறவற்றிலும் இருக்கிறான் என அப்பரடிகள் பாடிப் பணிகிறார்.

"கல்லாகிக் களறாகிக் கானுமாகிக்
காவிரியாய்க் கால்ஆறாய்க் கழியுமாகிக்
புல்லாகிப் புதலாகிப் பூடுமாகிப்
புரமூன்றும் கெடுத்தா னாகிச்
சொல்லாகிச் சொல்லுக்கோர் பொருளுமாகிச்
சுலாவாகிச் சுலாவுக்கோர் சூழலாகி
நெல்லாகி நிலனாகி நீருமாகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிகள் நின்றவாறே".

திருக்கோயிலின் கல்வடிவத்துடனும் பிறவடிவத்துடனும் அருளாளர்கள் பேசியுள்ளனர். பல நாட்களின் பின் தில்லைக்கு வழிபடப் போன நாவுக்கரசரை இறைவன் "என்று வந்தாய்" என்று கேட்பதையும், "என்னை நீ இகழ வேண்டாம்" என அவர் சொல்வதையும் அவரின் பாடல்களில் பார்க்கலாம்.

இறைவன் சைவ அருளாளருடன் பேசியுள்ளான். "நட்ட கல்லுப் பேசுமோ" என்ற கேள்வி இவர்கள் வாழ்வில் எழுந்ததில்லை. திருக்கோயில் பலவற்றுக்குச் சென்று பாடிய இவர்கள் "கேயிலாவ தேதடா" என்று கேட்டதுமில்லை.

மேற்கண்ட சித்தர் பாடல்களை விளக்கும் பலர், இறைவன் எமக்குள் இருக்கிறான், அதனால் வெளியிலுள்ள கல்லையும் கோயிலையும் வணங்குதல் தேவையில்லை எனக் கூறுவதுண்டு. ஆனால் "நாதன் உள்ளிருக்கையில்" என்பதற்கு அவன் கல்லின் உள்ளும் கோயிலின் உள்ளும் என்று பொருள் காண்பதும் பொருத்தமானதே. கல்லின் உள்ளிருக்கும் கடவுளை வணங்காமல் வெறும் கல்லை வணங்குவதால் பயனில்லை என்பதே பொருத்தமான கருத்தாகிறது. திருமூலரின் "மரத்தை மறைத்தது ..." என்ற பாடலும் இதற்கு அரண் செய்கிறது.

ஆன்மீக வளர்ச்சி பெற்று, மலம் நீங்கி, முத்தியடைந்த நிலையில், உலகில் நடமாடுபவர் சீவன் முத்தர் எனப்படுவர். (மலம் - அழுக்கு, குற்றம்). அவர்களும் மீண்டும் மலப்பற்றுக்கு உள்ளாகலாம். இது நிகழாமலிருக்க அவர்கள் தொடர்ந்து திருக்கோயில் சென்று இறைவனைத் தொழுதல் அவசியம் என்று சைவ ஞானிகள் வலியுறுத்துகின்றனர். சைவசித்தாந்தத்தின் முதன்மை நூலான சிவஞானபோதம் "மாலற நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயந் தானும் அரனெனத் தொழுமே" என்று கூறுகிறது.

எனவே, இறை வடிவம், கல்லினால் ஆனதாயினும், பேசியதுண்டு. அதற்குள் உள்ள இறைவனை நினைந்து அதை வணங்க வேண்டும். இறைவன் உள்ளிருந்து அருள்புரியும் திருக்கோயிலையும் வணங்க வேண்டும். இவை இறைநிலை கூடிய அருளாளரின் அறிவுரையாக உள்ளன. சித்தர் பாடல்களும் இதற்கமையப் பொருள் கொண்டுள்ளன.

DEVOTION OF SAIVA SAINTS

Dr. Shan Shanmugavadivel

Saiva Nayanmar's life stories demonstrate pure and selfless devotion to Lord Siva. In Periya Puranam, Sekkilar brings out the lives of the sixty three Tamil Saivite Saints who live in South India between sixth and nineth century CE. They played a major role in the revival of the Saiva faith by their rich contribution in the form of devotional hymns. The hymns such as Thevaram, Thiruvasagam, Thirumanthiram, etc. form the bed rock of the living tradition of Saivite devotion.

Most of the Saiva Saints were men including three women, belonged to different castes and occupations in the Tamil society. The most prominent of the Nayanmar were Thirunavukkarasar also called Appar, Thirugnanasampanthar and Sundarar. Appar was born as a Saivite, converted as Jain monk and later returned to Saivam after an incurable illness. After his reconversion to Saivism Appar faced severe ill treatment from Jains but miraculously survived all the cunning schemes by the grace of the Lord Siva.

What did Appar, Sampanthar and other saints offer to regain the people from the influence of other alien religions? It was the bhakthi or loving devotional movement that undoubtedly gave a wide popular acceptance. This is a path that is accessible to all for attaining liberation or Mukthi.

In the context of the revival of Saiva faith by the saints in the Tamil land in their time, loving devotion because a pathway to union with God. The follower of this path is not called a 'believer' but a devotee or pakthar. The pure form of bakthi is depicted over and over in Periya Puranam by Sekkilar, where Nayanmar as trembling and weeping as they worship in the presence of the Lord. They are also called Adiyar who had taken refuge at the feet of Lord Siva as his slave or servant.

Nayanmar expressed their devotion and propagated their message by composing and singing devotional hymns in honor of Lord Siva. God of the Nayanmar is not the passionless, impersonal absolute of Advaita Vedanta. In Saivism material world is not regarded as unreal in self. Saiva Siddhanta considers three entities as eternal. They are god, soul and bondage (materials of bondage or world)

The popular appeal of Saivism practised and declared by Nayanmar lay in its warm and personal character. This is a faith of the mother tongue, the language of the childhood and everyday life in contrast to other faiths. Sekkilar repeatedly reminds us that the garlands of songs were in Tamil, the language of the common people, readily became the vehicle of popular devotion.

Due to the outpouring love, faith and unconditional commitment to Lord Siva, Nayanmar were able to perform several miracles. Nayanmar treated every devotee who came wearing sacred ashes and emblem of saivite as Lord himself. Some saints went to the extreme length as in Ciruththondar, Iyarakaiyar and Erathiriathar to please their visitor. Their actions tell us that they were prepared to sacrifice everything and everybody in their absolute service to Lord Siva. Their sincerity is a standing witness to the fact the cry for God is not created by artificial conditions, but rooted in the elementary strands of human nature.

Reference: The History the Holy servants of the Lord Siva - Alastair McGlashan


LAW

சைவ வைணவப் பக்தி இயக்கம் பற்றிய ஒரு நோக்கு

பேராசிரியர் இ. பாலசுந்தரம்
தமிழ்த்துறைத் தலைவர், அண்ணாமலை கனடா வளாகம்

தமிழ் நாட்டிலே கி.பி. 6ஆம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 9ஆம் நூற்றாண்டு வரை தோன்றிய இறை சார்ந்த இலக்கியங் களைப் பக்தி இலக்கியங்கள் என வழங்குவது வழக்கமாகும். அக்காலப் பகுதியில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் இயற்றிய பாடல்களும், பக்தி இலக்கியம் தோன்றுவதற்கு முன்னோடியாக கி.பி. 5ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த காரைக்கால் அம்மையார் மற்றும் முதல் ஆழ்வார் மூவரும் பாடிய பக்திப் பாடல்களும் பக்தி இயக்க வழிப் பிறந்த இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன. இவ்விலக்கியங்களுக்குக் களமாகவும் ஆக்க சக்தியாகவும் அமைந்தது பக்தி இயக்கமாகும்.

பண்டைய சங்க இலக்கியங்கள் முற்றிலும் வாழ்வியல் சார்ந்தனவாகவே அமையலாயின. அக்கால மக்களின் வாழ்வில் காதலும் வீரமும் முனைப்புப் பெற்றிருந்தன. அவர்களின் அகவாழ்வு புறவாழ்வு சார்ந்த விடயங்களை அகத்திணை புறத்திணை இலக்கியங்களாகப் பாடினர். சான்றோர் என அழைக்கப்பட்ட சங்ககாலப் புலவர்களின் இலக்கியங்கள் மக்களை நெறிப்படுத்தும் தன்மை பெற்றிருந்தன. இசைப்பாணர்கள், கூத்தர், மதங்கியர் முதலானோர் மக்களின் வாழ்க்கை நிகழ்வுகளில் கலைகளை நிகழ்த்தினர். மக்களின் சமய சமூக வாழ்க்கையிலும், அரசர், போர்வீரர் ஆகியோரின் செயற்பாடுகளிலும் நிகழ்வுகளிலும் இசையும் நடனமும் இடம்பெற்றன. அக்காலத்தில் தமிழர் கலைகளும் தமிழ்மொழியும் பண்பாடும் மிகவும் வளர்ச்சி அடைந்திருந்தன. அரசர்களாலும் புரவலர் களாலும் கடையெழு வள்ளல்களாலும் தமிழும் தமிழ்ப் பண்பாடும் போற்றிப் பேணப்பட்டன. குடும்ப வாழ்க்கையிலும் கலை நிகழ்ச்சிகளிலும் பெண்கள் போற்றப்பட்டனர். சிவன், முருகன், மாயோன், வருணன், கொற்றவை, முதலான கடவுளரும் வழிபடப்பட்டனர். அவ்வழிபாட்டுடன் இசையும் கூத்தும் இணைந்திருந்தன. இத்தகு மேம்பட்ட பண்பாடு சங்க மருவிய காலத்தில் சமண, பௌத்த மதங்களால் சீரழிக்கப்பட்டபோது, அதனை மீண்டும் நிலைநிறுத்தும் நோக்குடன் பக்தி இயக்கம் சைவ, வைணவத் தலைவர்களால் தோற்றுவிக்கப்பட்டது.

சிறந்த பண்பாட்டுச் சூழலில் வாழ்ந்த தமிழ் மக்களின் வாழ்க்கையில் எவ்வாறு சமணமும் பௌத்தமும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கின என்பதை நோக்க வேண்டும். வீரயுகம் எனப் போற்றபட்ட சங்க காலத்தில் மன்னரிடையே அடிக்கடி போர்கள் நடைபெற்றமையால் தமிழகத்தின் பொருண்மியம் சிதைவுற்றது. மன்னரிடையே ஒற்றுமை நீங்கிப் பகைமை வளர்ந்திருந்தது. போர்களினால் ஏற்பட்ட ஆண்களின் வீரச்சாவைத் தொடர்ந்து மக்கள் வாழ்வியலில் ஒழுக்கச் சீர்கேடுகள் மேலோங்கின. வறுமை தாண்டவம் ஆடிற்று. இப்பின்னணியில் மிக எளிதில் அயல் பிரதேச கொள்ளையர் எனப்படும் களப்பிரர் தமிழ் நாட்டிற் புகுந்து கொள்ளையிடவும், தமிழகத்தைக் கைப்பற்றி ஆளவும் வாய்ப்பாயிற்று. அவர்களுடன் இணைந்து கொண்ட சமண, பௌத்தர்கள் தங்கள் மதங்களை தமிழ் நாட்டில் பரப்புவதற்கு அச்சூழல் வாய்ப்பாயிற்று.

தம் மதத்தைப் பரப்புவதற்காகத் தமிழரது சமய வழிபாட்டை இகழ்ந்தனர். தமிழரது இசை, நடனம், கூத்து முதலான கலைகள் மக்கள் வாழ்க்கையைச் சீரழிப்பன எனப் பரப்புரை செய்தனர். தமிழ் மொழிக்குப் பதிலாக வட மொழியையும் பிராகிருதத்தையும் திணித்தனர். சமூகத்தில் பெண்களின் இழிநிலை பற்றிக்கூறி, அவர்களை ஒதுக்கினர். இல்லற வாழ்வைவிடத் துறவற வாழ்வே மேலானது என்ற கருத்துக்களை மக்களிடம் விதைத்தார்கள். தம் மதங்களுக்கு மாறியோருக்கு உபகாரமாகப் புகலிடம், கல்வி, மருத்துவம் என்பன அளித்து தம் மதங்களைப் பரப்பினர். இதனால் தமிழர் மதமும் தமிழ் மொழியும் கலைகளும்

புறக்கணிக்கப்பட்டன. களப்பிரர்களைத் தொடர்ந்து வந்து தமிழ் நாட்டைக் கைப்பற்றி ஆண்ட பிறமொழியாளரான பல்லவரும் வடமொழியைத் தமிழ்நாட்டின் ஆட்சிமொழியாக நிலைநிறுத்தினர். அவர்கள் சைவ வைணவக் கோயில்களைக் கட்டிய போதிலும் அக்கோவில்களில் வடமொழியிலேயே பூசைகள் நடைபெறச் செய்தனர். தமிழ் மொழிப் பூசகர்கள் கோவில்களிலிருந்து அகற்றப்பட்டனர். தமிழ் மக்களின் ஊர்கள் வடமொழிப் பிராமணர்களுக்கு "பிரமதேயம்" என்ற போர்வையில் பறித்துக் கொடுக்கப்பட்டன. அச்சூழலிலே, தமிழ் மொழியையும் தமிழர் சமயத்தையும் தமிழர் பண்பாட்டையும் மீண்டும் புத்துயிர் பெறச்செய்யும் அடிப்படையில் பல்லவர் காலத்தில பக்தி இயக்கம் தோற்றுவிக்கப்பட்டு, அவ்வியக்கம் தமிழ்நாடு முழுவதும் வீறுபெற்று செயற்படத் தொடங்கியது. இது பற்றி அ. மணவாளன் (2004:15) கூறும் கருத்து நோக்கத்தக்கது:

"தமிழரல்லாத களப்பிரரும் பல்லவர் ஆகிய இரு அரசுகளும் தமிழ் மொழியையும் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளையும் வெறுத்தனர். சமண சமயத்தைச் சார்ந்த இந்த அரசர்களின் ஆதரவில் சமணசமயத் துறவிகள் சிலர் பழந்தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளான இல்லறம், அகப்பொருள் இலக்கியம், தமிழ்மொழி, இசை, நாடகம் ஆகியவற்றைக் கண்டித்துப் பிரச்சாரம் செய்தனர். பிராகிருதம் ஆட்சி மொழியாகவும் செங்கோலோச்சியது. இந்த உலக வாழ்க்கை அந்நியமானது பெண்கள் ஆண்களின் பின்னிணைப்புக்களே தவிர, அவர்களுக்குச் சமமானவர்களல்லர். துறவறமே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொள்ளத் தக்கது இசை, கூத்து, நடனம் என்பன மக்களின் கீழான உணர்வுகளைத் தூண்டித் தீய வழிகளுக்குக் கொண்டு செல்வன எனவே அவையும் அவற்றைத் தாங்கி நிற்கும் தமிழ் மொழியும் வீடு பேற்றுக்குத் தடையாக உள்ளவை தவிர்க்கப்பட வேண்டியவை என்றெல்லாம் சமணத் துறவிகளும் சமண சமயப் பற்றாளர்களும் பிரச்சாரம் செய்தனர். .... பழந்தமிழ்க கூறுகளான இலக்கியம், இசை, கூத்து போன்றன வெறுத்து ஒதுக்கப் பட்டன. சங்க காலத்திலும் அதன் பின்னரும் தமிழர் போற்றிவந்த சிவன், திருமால், முருகன் வழிபாடுகள் இகழ்ந்துரைக்கப்பட்டன. .... இந்தநிலை கி. பி. மூன்றாம் நூற்றாணடளவில் தொடங்கி, கி. பி. ஆறாம் நூற்றாண்டின் பிற் பகுதியில் நன்றாக முற்றி முறுகியிருந்தது."

தமிழரது இலக்கிய மரபுகளை ஒதுக்கிவிட்டு, சமண பௌத்த அறம் போதிக்கும் வகையில் "இன்னா நாற்பது", "இனியவை நாற்பது", "ஆசாரக்கோவை", "திரிகடுகம்", "ஏலாதி" என்ற நூல்களின் போர்வையில் தமிழர் வாழ்க்கை முறைகள், மற்றும் வழிபாட்டு முறைகளுக்கு எதிராகச் சமண பௌத்தக் கருத்துக்களை மக்கள் மனத்தில் பதியவைத்து தமிழ் மொழியையும் தமிழர் பண்பாட்டையும் மழுங்கடித்தனர். தம் கருத்துக்களைப் பரப்ப அற இலக்கியப் போர்வை அவர்களுக்கு நன்கு பயன்பட்டது. இவர்களுக்கு விதிவிலக்காகத், திருவள்ளுவரும் இளங்கோவடிகளும் அக் காலத்தில் வாழ்ந்த சமணப் புலவர்களாக இருந்த போதிலும் மிகப் பரந்த மனப்பான்மையுடன் தமிழர் பண்பாட்டு முறைகளையும் வழிபாட்டு முறைகளையும் தம் நூல்களிலே பதிவுசெய்து காத்துள்ளனர். இப்பின்னணியில் மணிமேகலை ஆசிரியர் காப்பியம் என்ற இலக்கியப் போர்வையில் தமிழர் பண்பாட்டு வாழ்க்கை முறையைச் சிதைத்துக் கூறியிருப்பதை மணிமேகலையைப் பயில்வோர் நன்கறிவர். ஆனால் சிலப்பதிகாரமும் திருக்குறளும் இவற்றுக்கு முரணானவை என்பதை அ. அ. மணவாளன் நிறுவியுள்ளார்:

"இளங்கோவடிகளின் சமயப்பொறை, தமிழ்ப்பற்று, தமிழ்நாட்டுப் பற்று, நாடகம், இசை, நடனம் போன்ற கலைகளின்பால் இருந்த கலைப்பற்று., பெண்ணைப் பெருந் தெய்வமாகக் காட்டிய பெருஞ் சிறப்பு என்பவை எல்லாம் உலகம் அறிந்த செய்திகள். இக்கால கட்டத்தில் தோன்றிய திருக்குறளும் இத்தகைய குறுகிய மாசுபட்ட கருத்தோட்டம் இல்லாமல் பரந்த மானுடப் பார்வையால் படைக்கப்பட்ட ஒரு மாபெரும் நூலாகத் திகழ்கிறது. சமணச் சார்புடைய கருத்துகள் திருக்குறளிலே ஆங்காங்கு காணப்பட்டாலும் அவை தமிழ்ப்பண்பாட்டுக்குப் புறம்பானவை அல்ல. உள்ளது சிறத்தல் முறைமையால் செம்மையான மானுட வாழ்க்கைக்குத் தேவையானவை என்று கருதி வள்ளுவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டவை." (அ.அ.ம. 2004)

சமண, பௌத்த மதங்கள் தமிழர் மதங்களுக்கும் பண்பாட்டிற்கும் முரணானவை. புறச்சமயத்தவர் தமிழகத்தை ஆண்ட காலம் அது. அதனால் தமிழ்ப் பண்பாட்டுக்கு எதிரான செயற்பாடுகள் அக்காலத்தில் முனைப்படைந்தன. களப்பிர அரசின் ஆதரவைப் பெற்று சைவ வைணவ மதங்களுக்கு எதிராகச் செயற்பட்டுக் கொண்டிருந்த புறச்சமயிகளுக்கு எதிராகப் பக்தி இயக்கம் காரைக்காலம்மையார் காலம் முதலாகத் தோன்றி, திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், மற்றும் ஆழ்வார்கள் ஆகியோரால் மக்கள் இயக்கமாகப் பரிணமித்தது. இவர்கள் தமிழ் உணர்வும் இறையுணர்வும் கொண்டு பக்திப் பாடல்களைப் பாடி இயக்கத்தை தீவிரப்படுத்திச் சமண பௌத்த மதங்களின் ஆக்கிரமிப்பிலிருந்து தமிழ் மக்களை மீட்டெடுத்தனர். பக்தி இயக்கதின் மூலம் தமிழர் மதம், பண்பாடு ஆகியவற்றில் பற்றுறுதி கொண்ட தமிழர் ஓரணி சேர்ந்தமை யைக் காண்கின்றோம். பக்திப் பாடல்கள் துறவறத்திற்கு எதிராக இல்லறத்தைப் போற்றின. இத்தகைய பாடல்கள் தமிழ் மக்களை ஒன்றாக அணிதிரள வாய்ப்பளித்தன.

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர்
குறைவில்லை..."(3:ம் திருமுறை)

எனச் திருஞானசம்பர்தர் பாடி மக்களை விளிப்படையச் செய்தார். இவ்வாறாக சம்பந்தர், அப்பர் சுவாமிகள், தொண்டரடிப்பொடி ஆழ்வார், நம்மாழ்வார் முதலியவர்கள் சேர்ந்து முன்னெடுத்துச் சென்ற இப்பக்தி இயக்கம் சைவ, வைணவத் தமிழ் மக்களின் மறுமலர்ச்சிக்கான இயக்கமாக ஒழுங்கமைக்கப்பட்டது. அதற்குக் கருவியாகத் தமிழ்மொழியின் சிறப்பையும் அதன் புனிதத் தன்மையையும் சம்பந்தர் தன் முத்திரைக்கவி தோறும் மக்களுக்கு உணர்த்தினார். அது போன்றே பக்தி இயக்கத்தை நடத்தியோரும் தமிழுக்கு உயர்நிலை அளித்தமைக்குச் சில சான்றுகள் வருமாறு:

"அருந்தமிழ் ஞானசம்பந்தன் செந்தமிழ், விரும்புவார் அவர்கள்போய் விண்ணுலகு ஆள்வாரே". (சம்பந்தர்), "வன்தொண்டன் ஆர்வத்தால் உரைத்த, தண்தமிழ்மலர் பத்தும் வல்லார்கள் சாதலும் பிறப்பும் அறுப்பாரே" (திருநாவுக்கரசர்), "இருந்தமிழ் நல்மாலை இணையடிக்கே சொன்னேன், பெருந்தமிழன் நல்லேன் பெரிது" (பூதத்தாழ்வார்), "கார்மலிமேனி பட்டர்பிரான் கோதைசொன்ன பாடல், சீர்மலி செந்தமிழ் வல்லார் தீவினை யாதும் இலரே". (பெரியாழ்வார்)

இவ்வாறே ஆண்டாள், திருமங்கை ஆழ்வார், நம்மாழ்வார், மதுரகவி ஆழ்வார், குலசேகர ஆழ்வார் முதலியோரும் தமிழ் மொழிக்கு முன்னுரிமை அளித்து மக்களை இயக்கத்தில் இணையச் செய்தமை சமய வரலாறாகும்.

சமண, பௌத்தக் கோட்பாடுகள் தமிழ்ப் பண்பாட்டிற்கு ஒவ்வாத துறவறத்தைப் போதித்தன. அதற்கு மாறாகப் பக்தி இயக்கம் இல்லறத்தையே போதித்ததோடு, உமை + சிவன், இலட்சுமி + திருமால் என்ற இணைந்த திருவுருவங்களையும் அவற்றோடு தொடர்புடைய புராணக் கதைகளையும் தம் பாசுரங்களில் விரித்துப் பாடினர். "வேயுறுதோளி பங்கன் விடமுண்ட கண்டன்..", உண்ணாமுலை உமையாளொடு உடனாகிய ஒருவன்.." (சம்பந்தர்), "வம்புலாமலர் மேல்மலி மடமங்கைதன் கொழுநன்." (திருமங்கை யாழ்வார்), "உருப்பிணி நங்கையணி நெடுந்தோள் புணர்ந்தான்.." (நம்மாழ்வார்) என இறைவனுக்கே இல்லறத்தைக் கற்பித்துப் பாடியுள்ளமை நோக்கத்தக்கது. இல்லறம் மனிதவாழ்க்கைக்கு அடிப்படையானது என்ற உண்மையையும், இல்லறத்தின் சிறப்பையும் துறவு மேற்கொண்ட மக்களுக்கு எடுத்துரைத்து அவர்களைச் சமூக மயப்படுத்தினர். இவ்வாறு இல்லறத்தின் ஏற்றத்தைப் பக்தி இலக்கியம் பலவாறாக போற்றிப் பாடியுள்ளதைப் பதிகங்களிற் கண்டு கொள்ளலாம்.

பெண்கள் சமய வாழ்வுக்குத் தடையான-வர்கள் எனச் சமணமும் பௌத்தமும் போதித்தன. அத்துடன் நாலடியார் முதலிய அறநூல்களிலும் பாடி வைத்தனர். சமணமும் பௌத்தமும் இழித்து ஒதுக்கிய பெண்களைப் பக்தி இயக்கம் மேன்மைப்படுத்தியது. பெண்களும் ஆண்களைப் போன்று சமய வாழ்க்கைக்கு உரியவர்கள், ஆற்றல்

மிக்கவர்கள் என்பதைத் தம் பாடல்களில் எடுத்துக் காட்டியதோடு, தங்களது பரப்புரை நிகழ்வுகளில் பெண்கள் ஆடவும் பாடவும் இடமளித்தனர். பண்டைத் தமிழர் பண்பாட்டிற் பெண்கள் சமூக வாழ்விலும் கலைத் துறைகளிலும் பெற்றிருந்த முக்கியத்துவத்தை மீண்டும் தம் பாடல்களினூடாகப் பக்தி நெறியில் அகத்திணை மரபையும் கையாண்டு பாடினர். சான்றாக "முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள், மூர்த்தி அவனிருக்கும் ஆரூர் கேட்டாள்..." என வரும் பாடலும், "சிறையாரும் மடக்கிளியே இங்கே வா..." எனத் தொடரும் பாடலும் இதுபோன்ற பல பக்திப் பாடல்களும் சங்க இலக்கிய அகப்பொருள் மரபினைத் தழுவியனவாகும். காரைக்காலம்மையாரைச் சிவனே "அம்மையே" என்றழைத்தமை, ஆண்டாள் "சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாள்" எனப் போற்றப்பட்டமை, திலகவதியார், மங்கையர்க் கரசியார் மக்கள் போற்றும் சைவ அடியார்களாக விளங்கியமை யாவும் பெண்கள் சைவ - வைணவ பக்தி இயக்கத்தில் பங்குகொண்டமை என்பன சமய இயக்கத்தில பெண்களின் முக்கியத்துவத்தைச் சான்றுபடுத்துவன. திலக வதியார், பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியார் ஆகிய இருவரும் பக்தி இயக்கத்தில் முன்னின்று போராடியவர்கள் என்பதையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

பல்லவர் காலத்திலே தமிழ்மொழி அரசியலிலும் கோயில் வழிபாட்டு முறைகளிலும் புறக்கணிக்கப்பட்டன. பல்லவரும், சமண பௌத்தரும், அந்தணரும் வடமொழி தேவபாஷை என்றும், வடமொழி வேதங்களே உயர்வானவை முக்தி தருபவை என்றும் மக்களுக்குப் போதித்தனர். (அ.ச. ஞானசம்பந்தன். 1999). இந்நிலையில் மக்களுக்குத் தமிழ் மொழியின் பெருமையையும் சிறப்பையும் எடுத்துக்கூறி அவர்களை வைதீகநெறிக்கு ஆற்றுப்படுத்த வேண்டிய கடமை பக்தி இலக்கியகாரருக்கு இருந்தது. இத்தகைய பண்பாட்டு விழிப்புணர்வை மக்களுக்கு ஊட்டி எழுச்சி பெறச்செய்யும் பணியில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் தீவிரமாக ஈடுபடலாயினர். சமயமும் மொழியும் மக்கள் போராட்ட உணர்வுகளை மிக எளிதில் தட்டியெழுப்பும் தன்மை கொண்டவையாகும். எனவே பக்தி இயக்கத் தலைவர்களான நாயன்மார்களும் ஆழ்வார்களும் தாம் மேற்கொண்ட சமயப் பிரச்சார நட வடிக்கைகளுக்குத் தமிழ் மொழியையும் தமிழிசையையும் ஆற்றல் மிகுந்த கருவியாகப் பயன்படுத்தித் தங்கள் பக்திப் பாடல்களைப் பாடலாயினர். அதுமட்டுமல்லாது தமிழால் இறைவனைப் பாடினால் நிச்சயம் இறைவன் அருளைப் பெறலாம் என்ற உறுதிமொழிகளையும் வழங்கிப் பிரச்சாரம் செய்தார்கள்.

பக்தி இயக்க இலக்கியகாரர்களில் சம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோர் அகத்திணை மரபில் மானுடக் காதலைத் தெய்வீகக் காதலாகப் பாடினர். தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்தின் ஓர் இன்றியமையாத கூறாக இதனைக் கருத வேண்டும். தமிழ்ப் பக்தி இயக்கம் வெறும் சமய இயக்கம் மட்டுமன்று என்பதற்கு இதுவுமொரு சான்று என்கிறார் அ. அ. மணவாளன் (2004:பக்.22). ஆடலும் பாடலும் பிரச்சாரத்திற்கு மிகவும் உகந்தவையாகும். அவ்வகையில் தாம் பண்ணோடு பாடிய பக்திப் பாடல்களுக்குத் துணையாகப் பண்டைத் தமிழரின் யாழ், வீணை, மத்தளம். சல்லரி, முழவு முதலான பல்வகை இசைக்கருவிகளையும் பயன்படுத்தி, ஊர் ஊராகச் சென்று, அவ்வவ் ஊர்களிலுள்ள கோயில்களில் பக்திப் பாடல்கள் பாடி இசைவழி மக்களை எழுச்சியடையச் செய்தனர். தேவாரப்பாடல்களுக்கும் ஆழ்வார் பிரபந்தங்களுக்கும் பண்ணும் தாள ராகங்களும் வகுத்து ஏடுகளில் குறிக்கப்பட்டிருத்தலைக் காணுமிடத்து இசைக் கலையின் மீட்சிக்குப் பக்தி இயக்கம் ஆற்றிய தொண்டின் சிறப்பு இனிது விளங்கும் என்றும் அ. அ. மணவாளன் கூறுவது (மேலதுːபக். 23) நோக்கத்தக்கது. "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயும்....." எனத் தொடங்கும் தேவாரம் இறைவனை நடராஜனாகவே படைத்துக் காட்டுவதிலிருந்து, கூத்து, நடனம் ஆகிய கலைகளுக்கும் பக்தி இயக்கம் உயிர்ப்பு அளித்துள்ளமை புலனாகின்றது.

துணை நூல்கள்: 1.அ. அ. மணவாளன்., தமிழ்ப் பக்தி இலக்கியம், புதுதில்லி, 2004.
2.அ. ச. ஞானசம்பந்தன்,பெரியபுராணம் ஓர் ஆய்வு, கங்கை புத்தக நிலையம், சென்னை 1999.

கவிஞனும் பக்தனும்

மகாகவி கம்பர் ஒரு வைணவர் என்கிறார்கள். திருமாலின் பத்து அவதாரங்களுள் ஒன்றான ஸ்ரீ ராமனின் கதையைப் பாடியதோடு மட்டுமன்றி அவரது ஏனைய கதாபாத்திரங்களைக்கொண்டு ஸ்ரீராமனை மூவர்க்கும் முதல்வன் என்று போற்றவும் வைக்கின்றார். இத்தகைய ராமபக்தி உடைய ஒருவர் மற்றைய வைணவப் புலவர்களைப்போல் கடவுள் வாழ்த்துப்பாடலில் மகாவிஷ்ணுவை அல்லவா போற்றிப் பாடியிருக்கவேண்டும். ஆனால் கம்பர் யாரைச் சரண் அடைகின்றார். உலகம் யாவற்றையும் படைப்பதுவும் அவற்றை நிலைநிறுத்துவதும் பின்னர் அவற்றை அழிப்பதுவும் ஆகிய தீராத ஒரு விளையாட்டை நிகழ்த்தி நிற்கும் தலைவர் யாரோ அவருக்கே தாம் அடைக்கலம் என்கிறார் கம்பர்.

உலகம் யாவையும் தாம்உள வாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகு இலா விளையாட்டு உடை யாரவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே.

படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழிலையும் செய்துநிற்கும் அந்தப் பரம்பொருளை எந்தப்பெயராலும் கம்பர் அடையாளம் காட்ட முற்படவில்லை என்பது முக்கியமாக இங்கே கவனிக்கப்படவேண்டிய ஒன்று. இங்கே கம்பர் "பேர் அறியா அந்தப் பெருஞ்சுடர் ஒன்றுக்குப் பேர் வைக்க முடியாது" என்ற கொள்கை உடையவராய் இருந்திருக்கலாம். மானுடம் வென்றதைப் பாடவந்த கம்பர் எடுத்த எடுப்பிலேயே தம்மை ஒரு மதச் சார்பு உள்ள கவிஞனாக அடையாளம் காட்ட விரும்பாமலும் இருந்திருக்கலாம்.

சிவனடியார் அறுபத்துமூவரின் வரலாறுகளைத் தொகுத்துக் கூறவந்த சேக்கிழாருக்கோ இந்த விடயத்தில் எந்தக் குழப்பமும் இல்லை. சைவநீதி உலகமெலாம் விளங்கும் நோக்கில் திருத்தொண்டர் புராணம் பாடியவர் அவர். சேக்கிழார் ஒரு சிவபக்தர் என்பதில் எவருக்கும் எந்தவித ஐயமும் கிடையாது. அதேபோல் சேக்கிழாருக்கும் முழுமுதற்கடவுள் அந்த அம்பலத்து ஆடும் சிவபிரான் ஒருவனே என்பதில் எள்ளளவும் சந்தேகம் கிடையாது.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு உரியவன்
நிலாவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

கடவுள் வாழ்த்தான முதற்பாடலிலேயே கம்பரை மதச்சார்பற்ற ஒரு கவிஞராகவும் சேக்கிழாரை ஒரு சிவன் அடியாராகவும் இனங்கண்டு கொள்ளமுடிகின்றது.

கவிதையில் ஒரு முழுமையைத் தேடுபவர் கம்பர். சேக்கிழாரோ எங்கும் எதிலும் சிவனருளைத் தேடுபவர். இக்கூற்றை நியாயப்படுத்துவதற்குக் கம்பராமாயணத்தில் ஒருபாடலையும் பெரியபுராணத்தில் ஒரு பாடலையும் எடுத்துக்கொள்ளலாம். இரண்டு பாடல்களுமே ஒப்பற்ற ஓர் அழகுக்கு உவமை தேடுவன.

இலக்குவன் முன்செல்ல சீதையை நடுவில் நடக்கவிட்டு ராமன் பின் தொடரும் அந்த வேளையில் இராமபிரானின் கரிய மேனியின் அழகை வர்ணிக்க வார்த்தைகளைத் தேடுகின்றார் கம்பர்.

வெய்யோன் ஒளிதன் மேனியின் விரிசோதியின் மறைய
பொய்யோ என்னும் இடையாளோடும் இளையானோடும் போனான்
மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ
ஐயோ இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகுடையான்

இராமனின் கரிய நிறத்துக்கு உவமையாகக் கூறக்கூடியவற்றை ஒன்றொன்றாய்

அடுக்குகின்றார். கருநிறம் என்றதும் கம்பருக்கு முதலில் நினைவுக்கு வருவது பெண்களின் கண்களை அழகுபடுத்தும் மை. கம்பன் வாழ்ந்த காலத்தில் "மை" என்றால் அது மங்கையர்கள் கண்களுக்குத் தீட்டும் அஞ்சனத்தைத்தான் குறிக்கும். அழகுக்கு அழகு ஊட்டும் வெறும் அலங்கார சாதனத்தை இராமனின் அழகுக்கு உவமையாகக் கொள்வதா? பொருந்தாதே.

அப்படியானால் "மரகதம்" என்று கூறலாமா? எத்தனை பேர் மரகதக் கல்லைப் பார்த்திருக்கமுடியும். ஏழைக்கும் அருள்புரியும் இராமனை செல்வந்தர்களுக்கு மட்டுமே கிடைக்கக் கூடிய மரகதத்துடன் ஒப்பிடலாமா? நியாயம் இல்லையே.

நீண்டு பரந்து கிடக்கும் நீலத்திரைக்கடலை அவன் அழகுக்கு உவமையாகக் கூறலாம். ஆனால் கடலில் காணும் நீலநிறம் கடலுடையதல்லவே. சுய ஒளி ஒளியுடன் கூடிய, நினைக்கும்போதே இனிக்கும் இராமனோடு வானத்தின் நிறத்தைப் பிரதிபலிக்கும், உப்புக்கரிக்கும் கடலை ஒப்பிட நினைக்கவும் கூடாதே.

மழைநீரைச் சுமந்துவந்து கொடுத்து மண்ணுலகில் உயிர்களை வாழவைக்கும் கார்முகிலுக்கு ஒப்பிடலாம் என்றால் தேவைப்படும்போது வராமல் ஏமாற்றிவிடும் மழைமுகிலுடன் கேட்டதும் கொடுத்துவிடும் ஸ்ரீராமமூர்த்தியை ஒப்பிடுவதும் தவறாயிற்றே.

ஐயோ! இவனது அழியா அழகுக்கு இதில் எதுவுமே பொருத்தமாய் இல்லையே என்று பாட்டை முடிக்கின்றார் கம்பர். தனது கற்பனைத்திறனைக் காட்டச் சேக்கிழாருக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

தம்பிரான் தோழன் என்று அழைக்கப்பெற்ற சுந்தரர் திருவாரூர் கோயிலை நோக்கி நடந்து கொண்டிருக்கின்றார். உருத்திரகணிகையர் குலத்தில் பிறந்து தேவரையும் ஈர்க்கும் அழகுடன் திகழும் பரவை என்னும் அந்தப் பருவப்பெண்ணும் தன் தோழியருடன் கோயிலை நோக்கிச் செல்லுகின்றாள். கோயில் வீதியில் சுந்தரரும் பரவையாரும் ஒருவரை ஒருவர் காண்கின்றனர். சுந்தரருக்குத் தாம் கண்ட காட்சியை நம்பமுடியவில்லையாம். சேக்கிழார் சொல்லுகின்றார். சுந்தரர் மூலமாகப் பரவையின் அழகுக்கு உவமை தேடுகின்றார்.

கற்பகத்தின் பூங்கொம்போ காமன் தன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல் சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேன் என்றதிசயித்தார்

"கேட்டதெல்லாம் கொடுக்கும் கற்பகதரு என்று ஒரு விருட்சம் தேவருலகில் இருப்பதாகச் சொல்லுகின்றார்களே. அந்தக் கற்பகத்தின் பூக்கள் நிறைந்த கிளையொன்று இங்கு வந்ததோ? அல்லது நான் காண்பது காதல் தேவன் மன்மதனின் தோழி இரதியோ? அழகு செய்த புண்ணியத்தின் பலனாகத் தோன்றிய புண்ணியத்தின் ஒரு வடிவமோ? கருமேகத்தை (கருங்கூந்தலை) உச்சியில் சுமந்துகொண்டு வில் (புருவம்) குவளை (கண்) பவளம் (வாய்) முழுமதி (முகம்) என்பவற்றை மலர்களாகப் பூத்திருக்கும் நறுமணக் கொடியோ? இது அற்புதமோ அல்லது சிவன் அருள் தானோ?" என்று அதிசயித்து நின்றாராம் சுந்தரர்.

சேக்கிழாரைப் பொறுத்தவரையில் சிவபிரானின் அருளிலும் மேலான பேரழகு என்று எதுவுமே கிடையாது. அதற்கு மேலும் அழகுக்கு ஓர் உவமை தேடவேண்டிய அவசியம் சேக்கிழாருக்கு இருக்கவில்லை. கம்பரைப்போல் ஐயோ என்று அங்கலாய்க்கவேண்டிய நிலை சேக்கிழாருக்கு ஏற்படவும் இல்லை. இங்கேதான் தம்மை ஒரு உண்மையான சிவனடியாராகச் சேக்கிழார் தம்மை வெளிப்படுத்துகின்றார். இராமனின் அழகுக்கு மண்ணுலகில் உவமை தேடிக் களைத்த கம்பர் முழுமையான ஒரு கவிஞர். பரவையின் அழகுக்கு விண்ணுலகில் தேடியும் சிவனருளுக்கு மேலான உவமை ஒன்றைக்காணாத சேக்கிழார் உண்மையான ஒரு பக்தர்.

முனைவர் பால. சிவகடாட்சம் B.Sc.Hons (Peradeniya), B.Ed (Toronto), Ph.D (London)

இறைபுகழ் பாடும் ஆடல் மரபு

கலாநிதி கௌசல்யா சுப்பிரமணிய ஐயர்

தமிழரின் ஆடல்மரபு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு கொண்டதாகும். இது பற்றிய ஆய்வுகள் ஏறத்தாள ஒரு நூற்றாண்டுக் காலமாகவே நடைபெற்றுவருகின்றன. மேற்படி ஆடல்மரபின் வரலாற்றில் இறைபுகழ்பாடும் முறைமையில் நிலவிவந்துள்ள ஆடல்மரபுக் கூறுகளை - குறிப்பாகச் சைவம்சார் ஆடல்கள் தொடர்பான முக்கிய செய்திகளை - மையப்படுத்திய கட்டுரை, இது.

வேத இலக்கிங்களில் சாராம்சமாக அமைந்த உபநிடதங்களிலொன்றான சாந்தோக்கிய உப நிடதம் வைதிகக் கல்விப் பரப்பில் ஒருபகுதியாக 'நுண்கலை'களைப் பற்றிப் பேசுகிறது. என்பர். 'தேவஜ்ஞான வித்யா', வேதஇலக்கியங்களில் 'சைலூஷ' என்பது நடிகனைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுகிறது. வேதகாலத்தில் இசை, நடனங்கள் போன்றவை வேள்விகளிலும் சமயக்கிரியைகளிலும் மக்களை மகிழ்விக்கப்பயன்பட்டன.

இதிகாசக்கதைகளான இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றில் அவை எழுந்த காலத்திலிருந்த கலைகளைப் பற்றிய செய்திகள் பல காணப்படுகின்றன. இராமாயணத்திலே லவனும் குசனும் தங்கள் பெற்றோர்களான சீதை-இராமர் கதையின் வரலாற்றை பாடலாகவும் ஆடலாகவும் நடத்திக் காட்டியதான வரலாறாற்றுச் செய்தி இடம்பெற்றுள்ளது.

இந்தியமண்ணிலே இசை மற்றும் நடனம் சார்ந்த இலக்கண ஆக்கமாக எமக்குக் கிடைக்கும் முதலாவது நூல் பரதமுனி என்பவரால் எழுதப்பட்ட நாட்டிய சாஸ்த்திரம் என்ற வடமொழி நூலாகும். இது கி.மு.200க்கும் கி.பி.200க்கும் இடைப்பட்ட காலப்பகுதி சார்ந்த நூலாகக் கருதப்படுகிறது. இந்நூல் இசை நடனம் என்பவற்றுடன் நாடகத்தையும் இணைத்தே இலக்கணம் கூறுகின்றது. கலை வரலாறுகளின் ஆரம்பநிலையிலே ஆடல், பாடல், நடிப்பு என்பன ஒன்றிணைந்தே பயின்றுவந்தன என்பதை இங்குநாம் நினைவிற் கொள்ளலாம்.

இயற்கையை வழிபடும் சூழ்நிலைகள், வெற்றிக்கொண்டாட்டங்கள், வீரர் புகழ் பாடும் சூழ்நிலைகள் மற்றும் இறைபுகழ்பாடுதல் போன்றவற்றில் இயல்பான மனஉந்துதல்களின் வெளிப்பாடுகளாகவே ஆடல், பாடல், நடிப்பு போன்ற கலைகள் முகிழ்த்தெழுந்தன என்பதையே கலைவரலாறுகள் எமக்குக் காட்டிநிற்கின்றன. நாளடைவில் இவை வளர்ச்சிகண்டு செவ்வியல் நிலையை அடையும் பொழுது இவற்றிற்கு இலக்கணங்கள் வகுக்கப்படுகின்றன. இவ்வாறு இலக்கணம் வகுக்கப்பட்டபின் அக்கலைகளும் இலக்கணங்களும் பேணிப்பாதுகாக்கப்படுகின்றன. இவ்வாறான கலை வரலாற்றுச் செயற்பாடு தொடர்பான செய்திகளைச் சங்ககாலம் முதல் தொடங்கித் தொடரும் தமிழிலக்கிய பாரம்பரியம் நமக்குத் தெளிவாகவே உணர்த்திநிற்கின்றது.

சங்ககாலத்தில் பயின்ற கூத்துமரபுகளை பேராசிரியர் சு.வித்யானந்தன் அவர்கள் நான்கு வகைகளாகச் சுட்டுவர். அவை: 'நாட்டுக்கூத்து', 'சமயச்சடங்குக்குரிய ஆடல்', 'பேய்ஆடல்', 'போர்க்கள ஆடல்' என்பவைகளாகும்.

நாட்டுக்கூத்துக்கள்: 'வள்ளிக்கூத்து', 'குரவைக் கூத்து'
சமயச்சடங்குக்குரிய ஆடல்: 'வேலன் வெறியாட்டு'.
பேய்மகளிர் ஆடும் ஆடல்: 'துணங்கைக் கூத்து'
போர்க்கள ஆடலகள்: துணங்கை மற்றும் குரைவை

துணங்கை மற்றும் குரவை என்பன வெவ்வேற சூழல்களுக்கு ஏற்றவகையில் ஆடப்பட்டு

வந்தமையை மேற்படி விளக்கத்தில் புரிந்துகொள்ளமுடிகின்றது.

சங்கப்பாடல்களை அடுத்து எழுந்ததான சிலப்பதிகாரம் பொதுமக்களின் நிலம்சார் நடனங்களாக குரவை, வெறியாட்டு, துணங்கை என்பவற்றைச் சுட்டுகின்றது. அதனுடைய வேட்டுவவரி, ஆய்ச்சியர்குரவை மற்றும் குன்றக்குரவை ஆகிய காதைகள் இவ்வாறான ஆடல்களைக் காட்சிப்படுத்துகின்றன. மேலும், சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றுகாதையிலும் இந்திரவிழவூர் எடுத்த காதையிலும் மாதவியின் ஆடல்கள்பற்றிய விபரங்களும் இடம்பெற்றுள்ளமையைக் காண்கிறோம். இவற்றில் அரங்கேற்ற நிகழ்வானது செவ்வியல்தன்மை கொண்டதான முறைமையில் தகுதிவாய்ந்த கலைஞர்கள் மத்தியில் நிகழ்வதாகும். 'தலைக்கோல்' பெறுவதற்கான தகுதியை முன்னிலைப்படுத்தி இது ஆடப்படுகிறது. இதனை வேத்தியல் எனப்படும். இந்திரவிழாவில் நிகழும் ஆடலானது பொது மக்கள் நிகழ்வாகும். அதனால் இது பொதுவியல் ஆகும்.

மாதவியால் ஆடப்பட்ட மேற்படி பொதுவியல் நிகழ்வை சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோவடிகள் பின்வருமாறு விளக்குகிறார். மாயோன் ஆகிய திருமாலுக்குரிய 'தேவபாணி'ப் பாடலை முதலில் பாடி, அதன்பின் நால்வகை வருணபூதர்கள், நிலவு ஆகியவற்றின் மீதுள்ள 'பஞ்சசந்தி கௌத்துவ'த்தை(எவ்வித குறைவும் வராதிருக்க) பாடி ஆடியபின் தனது 11வகை ஆடல்கள் மாதவியின் கவனத்திற்கு வருகின்றன.

11வகை ஆடல்களாவன: சிவனார் ஆடிய கொடுகொட்டி, பாரதி ஆடிய பாண்டரங்கம், திருமால்ஆடிய அல்லியம், திருமால் ஆடிய மல்லாடல், முருகன் ஆடிய துடி, முருகன் ஆடிய குடையு, திருமால் ஆடிய குடமாடல், காமன் ஆடிய பேடிஆடல். உமையவள் ஆடிய மரக்கால் ஆடல். திருமகள் ஆடிய பாவை ஆடல், இந்திராணி ஆடிய கடைசியர் ஆடல் என்பவையாகும்.

இவற்றை விதிமுறை மாறாமல் ஆடினாள் என இளங்கோவடிகள் கூறுகிறார. மேற்கூறிய ஆடல்களில் பல தெய்வங்களால் ஆடப்பட்டவையாகும். .உ-ம்: கொடுகொட்டி, பாண்டரங்கம், அல்லியம், மல்லாடல், துடி முதலியன. கொடுகொட்டியானது சிவனாரால் ஆடப்பட்டது என்ற தகவலானது சிலப்பதிகார காலத்திலேயே சிவபிரானை "ஆடவல்லா"னாகக் காணும் முறைமை தொடங்கிவிட்டமையை உணர்த்துவதாகும். இவ்வகை ஆடல்கள் அக்காலங்களில் கோவிலை மையப்படுததியனவாகக் காட்டப்படவில்லை என்பதும் பொது அரங்குகளிலேயே நடைபெற்று வந்தன என்பதும் நமது கவனத்துக்குரியன. இவற்றில் பயின்ற பாடல் மற்றும் ஆடல்முறைமை பற்றிய தகவல்கள் நிறைவாக எமக்குக் கிடைத்தில.

தொடர்ந்தமைந்த பல்லவர் காலத்தில் கலையம்சங்கள் யாவையும் கோவிலிலுள்ள இறைவனை மையப்படுத்தி வளர்ந்தன எனலாம். இதனைத் தொடக்கி வைத்தவர் என்ற முறைமையில் நாயன்மார்களுக்கெல்லாம் மூத்தவரான காரைக்காலம்மையார் வரலாற்றில் முக்கியத்துவம் உடையவராகிறார். சைவ பக்திமார்க்கத்திற்கு வித்திட்டவராக இவரைக் கொள்ளலாம். இவர் முதலிற் பாடியதான அற்புதத்திருவந்தாதி என்ற ஆக்கம் வெண்பாயாப்பில் அந்தாதி முறைமையில் 101பாடல்கள் கொண்டமைந்ததாகும். அடுத்துப்பாடிய திருவிரட்டை மணி-மாலை என்ற ஆக்கம் கட்டளைக் கலித்துறை மற்றும் வெண்பா ஆகிய யாப்புவகைகளில் அமைந்ததாகும். மூன்றாவதாகவமைந்த மூத்ததிருப்பதிகம் இரண்டும் இசைத்துப்பாடுதற்கேற்றதான விருத்தயாப்பில் அமைந்துளது. அம்மையார் கையாண்ட இந்த விருத்த முறைமையினைப் பின்பற்றியே நாயன்மார்களும் ஆழ்வார்களும் பண்சுமந்த பதிகங்களைப் பெருந்தொகையில் பாடினார்கள்.

பதிகமுறைமைக்கும் அம்மையாரரின் இப்பதிகங்களே தோற்றுவாயாக அமைந்ததாலேயே இவை 'மூத்த' என்ற அடைமொழியுடன் பெயர் சுட்டப்பட்டுள்ளன. இவ்வகையிலான சிறப்புகளைக் கொண்ட மூத்த திருப்பதிகப்பாடல்கள் சுடலையிலாடும் இறைவனைக் காட்சிப்படுத்துவனவாக

அமைந்தனவாகும். முதலாம் திருப்பதிகத்தில் ஒவ்வொரு பாடலிலும் இறுதியடித்தொடரானது "......ஆடும் எங்கள் அப்பனிடம் திருவாலங்காடே." என அமைந்துள்ளது. சான்றாக ஒருபாடல்:

துத்தம் கைக்கிளை விளரி தாரம்
உழை இளி ஓசை பண்கெழுமப்பாடிச்
சச்சரி கொக்கரை தக்கையோடு
தகுணிதம் துந்துபிதாளம் வீணை
மத்தளம் கரடிகை வன்கை மென்தோல்
தமருகம் குடமுழ மொந்தை வாசித்
தத்தனை விரிவினோடாடும் எங்கள்
அப்ப னிடம்திரு ஆலங் காடே. (பாடல்:9)

பேய்களுக்கிடையில் மண்டையோட்டு மாலையணிந்து சுடலைச் சாம்பலைத் தனது திருமேனியில் பூசிக்கொண்டு வேகமாக ஆடும் சிவனது தோற்றத்தினையே அம்மையார் மனக்கண்ணில் தரிசித்துப் பாடுகிறார். அவற்றுள் தானும் ஒரு பேயாக இறைவனுடன் இருப்பதான கற்பித நிலையில் இப்பாடல்கள் அமைந்திருத்தலைக் காண்கின்றோம். அம்மையாரின் காலமான ஏறத்தாள கி.பி.5ஆம் நூற்றாண்டிலே காபாலிகம், காளமுகம் முதலான சில சைவப்பிரிவுகள் சிவனைச் சுடலைப் பின்புலத்தில் தரிசித்து வழிபட்டவையாகும். வாழ்க்கைபற்றிய வெறுப்புணர்வு முனைப்புற்றிருந்த சூழல், அது. அப் பின்புலத்தையே அம்மையாரின் மூத்த திருப்பதிகப் பாடல்களும் நமக்குக் காட்சிப்படுத்தியுள்ளன.

அம்மையார் சுடலையிலாடுகின்ற சிவனைத் தரிசனத்துக்கு இட்டுவர, அவருக்குப் பின்வந்தவரான திருநாவுக்கரசர் தில்லையிலே ஆனந்தத் தாண்டவம் ஆடும் சிவபிரானை - நடராசப்பெருமானை - எமக்குக் காட்சிப்படுத்துகிறார்.

"குனித்த புருவமும் கொவ்வைச்செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனிதற்ப்பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே" (திருமுறை: 4:81:4)

இனிமைதரும் ஆனந்தத் தாண்டவத் திருக்கோலத்தை பார்ப்பதற்குக் கிடைக்குமென்றால் எத்தனைமுறை வேண்டுமானாலும் மனிதற் பிறவியை இப்பூவுலகில் மீண்டும் எடுக்கலாம் என்பது நாவுக்கரசர் கருத்தாகும். இங்கே வாழ்க்கை பற்றிய விழிப்புணர்வு தளிர்விட்ட நிலையைக் காண்கிறோம். சிவபிரானுடைய நடனக்கோலம் தொடர்பான சிந்தனையில் அம்மையாருக்குப் பின்னர் நிகழ்ந்துள்ள முக்கியமாற்றம் இது எனலாம்.

இவ்வாறு இறைவனின் தோற்றம் மட்டுமல்லாது புராண இதிகாசக்கதைகளில் காணப்படும் இறைவனின் திருவிளையாடல்கள் ஆகமங்களில் காணப்படும் இறைவனின் வழிபாட்டுமுறைமைகள் போன்ற பலவற்றையும் பற்றி எடுத்துக்கூறும் பாடல்கள் தொடர்ந்து வந்த பல நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்களால் பாடப்பெற்றுள்ளன. இப்பாடல்கள்யாவும் இறையுணர்வுடன் பலர் கூடி ஆடுவதற்கும் பாடுவதற்கும் உகந்தவகையில் அமைந்தவையாகும். இதனை,

"காந்தாரம் இசையமைத்துக் காரிகையர் பண்பாடக் கவினார் வீதித்
தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார் நடமாடும் திருவையாறே."
(திருமுறை:1:190:6)

என்பனவாக அமைந்த சம்பந்தர் தேவராரப் பாடற்பகுதிகள் மூலம் அறியலாம். இவ்வாறான தேவார அகச்சான்றுகள் மட்டுமல்லாது சோழமன்னர்களின் சாசனக்குறிப்புகளாலும் கோவில்களில் தேவாரப்பாடல்களுக்கு ஆடல் மகளிர் ஆடி அபிநயித்த செய்திகளை அறியமுடிகிறது.

தேவாரப் பாடல்கள் மூலம் சிவனது தாண்டவங்கள் 7என்றும் அவன் ஆடிய சபைகள் ஐந்து என்றும் அவன் எட்டு இடங்களில் வீரத்துடன் செயல்பட்டான் என்றும் ஏழு இடங்களில் விடங்கராய் இருந்து எழுவகை நடனங்கள் செய்தான் என்றும் அறிகின்றோம். சிவனின் ஏழு தாண்டவங்களும் 'ஸ ரி க ம ப த நி' என்னும் ஏழு இசைகளிலிருந்து தோன்றிய செய்திகளும் காணப்படுகின்றன. இறைவனை இசையுடன் தொடர்புபடுத்தும் பாடல்கள் திருமுறைகளில் பரவலாகக் காணப்படுகின்றன. இதற்குத் திருநாவுக்கரசரின் "ஓசை ஒலியெலாமானாய் நீயே...." என்ற தேவாரத்தையும் சுந்தரமூர்த்தி நாயனாரின் "ஏழிசையாய் இசைப்பயனாய்...." என்ற தேவாரத்தையும் உதாரணமாகக் கொள்ளலாம்.

சிவனின் ஏழு தாண்டவங்களில் காளிகாதாண்டவம்(முனிதாண்டவம்): படைத்தல் தொழிலைக் குறிப்பது, திருநெல்வேலியிலுள்ள தாமிர(செப்பு) சபையில் நடைபெறுகின்றது. இறைவனின் காத்தல்(இன்பக்காத்தல்) தொழிலுக்குரிய சந்தியா தாண்டவம் மதுரையிலும்(வெள்ளியம்பலசபை) துன்பக்காத்தலைக் குறிக்கும் கௌரீதாண்டவம் பாண்டிநாட்டுத் திருப்புத்தூர் சிற்சபையிலும் அழித்தலைக்குறிக்கும் சம்ஹார தாண்டவம் நள்ளிரவில் சுடலையிலும் இடம்பெறும். மறைத்தலைக் குறிக்கும் திரிபுர தாண்டவம் திருக்குற்றாலத்தில் சிற்சபையிலும் இடம்பெறும். அருளுதலைக்குறிக்கும் ஊர்த்துவதாண்டவம் ரத்தின சபையிலே ஆலங்காட்டில் இடம்பெறுவ தாகும். இறைவனின் ஐந்தொழிலையும் ஒருங்கே காட்டும் ஆனந்த தாண்டவம் சைவ உலகின் கோவிலாக விளங்கும் சிதம்பரத்திலுள்ள பொன்னம்பலத்திலே கனகசபையிலே நடைபெறுவது. இவ்வாறாக ஆடற்கலையானது இறைபுகழ்பாடும் மரபுடன் இணைந்து செயற்பட்டு வந்த வரலாறறுச் சூழலிலே கூத்து மற்றும் இசை சார் இலக்கணநூல்கள் இவ்வாடல் மரபுகள்பற்றிய பல செய்திகளை எடுத்துரைக்கமுற்பட்டுள்ளன. கூத்த நூல் என்ற ஆக்கமானது சிவபிரானின் 108 வகைத் தாண்டவங்கள் பற்றிக் கூறுகிறது. இவற்றில் 12 சிறந்தவை என்றும் அந்நூல் கூறுகின்றது. பஞ்சமரபு என்ற இசையிலக்கண நூல் 16தாண்டவங்களைக் கூறுகின்றது.(காரைக்காலம்மையார் ஊர்த்துவ தாண்டவத்தை மட்டுமே குறிப்பிட்டிருந்தார் என்பது இங்கு நமது சிந்தனைக்குரியதாகும்.)

மேற்சுட்டியவாறு கூத்தநூல் மற்றும் பஞ்சமரபு ஆகியன சுட்டிய தாண்டவ மரபுகள் பிற்காலத்தில் இடைக்காலத்திலே வழக்கிழந்த நிலையிலே தேவாரம் சுட்டும் எழுவகைத் தாண்டவங்களே நடனவரலாற்றில் முக்கியத்துவப்படுத்தப்பட்டுப் வந்துள்ளன. "சித்" ஆகிய ஆகாயத்தை உள்ளடக்கிய லிங்கமாக சித் அம்பரம் விளங்கி, ஆன்மாக்களின் உள்ளமாகிய ஆகாயத்தில் இறைவனின் ஆனந்தக் கூத்து எப்பொழுதும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றதைக் காட்டுகின்றது. (திருப்புத்தூர் புராணம் - தமிழ் புராணம் - இதில் கௌரி தாண்டவச் சருக்கம் உளது- இது 7 தாண்டவங்கள் பற்றிக் கூறுகிறது.)

தேவாரப்பாடலால் சிறப்புப் பெற்ற திருவையாறு, திருவாரூர், திருவெண்காடு முதலாய தலங்களிலிருந்து ஆடல்கலையிலும் இசையிலும் திறமைமிக்க ஆடல் மகளிரை முதலாம் இராஜராஜசோழன் (கி.பி.985-1014) தெய்வீகமான ஆடற் கலைப்பணிக்காக தஞ்சைப்பெரிய கோவிலில் நியமித்திருந்தான். ஆலயவிழாக்களில் இறைவனைப் பாடியாடிப்பரவுதல் இவர்களது முக்கிய பணியாகும். அதற்குரிய ஆகமவிதிமுறைமைகளும் பத்ததி முறைமைகளும் கோவில்களில் இருந்தன. ஆடற்கலையில் நன்கு தேர்ச்சிபெற்ற தலைக்கோற்பட்டம் பெற்ற மகளிர் ஒருவர் பெயர் "சிவஞானசம்பந்தத் தலைக்கோலி" என்பதாகும். இவர் சம்பந்தர் பாடல்களை அபிநயித்துப்பாடிய சிறப்பிற்காக இப்பட்டம் பெற்றிருக்கலாம். ஆடற்கலையில் சிறந்து விளங்கிய தேவரடியார்களே தேவாரம் பாடுவதிலும் சிறந்து விளங்கினார்கள் என்பதும் சாசனங்கள் மூலம் அறியப்படும் முக்கிய செய்தியாகும்.

மேற்சுட்டியவாறாக இறைபுகழ்பாடும் நிலையில் ஆடல்மரபு வளர்ச்சிபெற்று வந்துள்ள பக்திக்காலகட்டச் சூழலிலே அதனைத் தத்துவநிலைப்படுத்தும் சிந்தனைகளும் உருவாகிவந்தன. குறிப்பாக, ஆடவல்லான் எனப்படும் நடராஜதிருவுருவத்தை அப்பெருமானின் ஐந்தொழிலின்

குறியீடாக அடையாளம் காணும் சிந்தனை உருவாகியது. இத்தொடர்பிலான முக்கியமான இரு சான்றுகளை இங்கு குறிப்பிடுவது அவசியமாகிறது. ஒன்று 10ஆம் திருமுறையான திருமந்திரத்தில் இடம்பெற்றதாகும். மற்றது, சைவசித்தாந்த நூல்களிலொன்றான உண்மைவிளக்கத்தில் இடம்பெற்றுள்ளதாகும. அவை வருமாறு:

"அரன்துடி தோற்றம் அமைப்பில் திதியாம்
அரன் அங்கி தன்னில் அறையில் சங்காரம்
அரன் உற்று அணைப்பில் அமரு திரோயிதாயி
அரன் அடி என்றும் அனுகிரகம் என்னே." (திருமந்திரம்:)

"தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு" (உண்மைவிளக்கம்:)

இப்பாடல்கள் உணர்த்தும் ஐந்தொழில் நிலைகள் வருமாறு:

படைத்தல் - வலதுகையிலுள்ள உடுக்கு,
காத்தல் - வலதுகை காட்டும் அபயகரம்,
அழித்தல்(சங்காரம்) - இடது கையிலுள்ள நெருப்பு
மறைத்தல் - ஊன்றிய வலப்பாதம்,
அருளுதல் - தூக்கிய இடப்பாதம்

இவ்வாறாக தத்துவநிலைப்படுத்தப்பட்டதான நடராஜவடிவமானது பின்னாளில் இசை மற்றும் நடனம் சார்ந்த கலைஞர்களுக்கு மிகப்பெரும் அருட்டுணர்வை ஏற்படுத்தியுள்ளமையை வரலாறு உணர்த்தி நிற்கிறது. வாக்கேயகாரர்கள் பலர் இத்தத்துவ அம்சத்தை மையப்படுத்திக் கீர்த்தனைகள் புனைந்துள்ளனர். குறிப்பாக முத்துத்தாண்டவர், அருணாசலக் கவிராயர், மாரிமுத்தாபிள்ளை, கோபாலகிருஷ்ண பாரதியார், சுத்தானந்த பாரதியார், நீலகண்டசிவன், பாபநாசம் சிவன் முதலானவர்கள் இவ்வகைக் கீர்த்தனைகளை இயற்றியுள்ளனர். இவ்வாறு பாடப்பட்ட கீர்த்தனைகள் நடனங்களுக்கும் பயன்படுத்தப்பட்டுவந்துள்ளன.

மேற்படி நடராஜ திருவுருவம் தொடர்பான சிந்தனைகள் வாக்கேயகாரர்களை மட்டுமன்றிக் கலையியல் ஆய்வாளர்களின் கவனத்தையுங்கூடப் பெரிதும் கவர்ந்துள்ளன என்பதும் இங்கு குறிப்பிடப்படவேண்டிய முக்கிய செய்தியாகும். கலாயோகி ஆனந்த குமாரசுவாமி, பேராசிரியர் கா.கைலாசநாதக்குருக்கள் மற்றும் கலாநிதி வ்றிட்ஸ் ஒப்காப்ரோ முதலியோர் இந்த நடராஜ திருவுருத்தைப்பற்றி மிகஉயர்வாகக் கூறியுள்ளார்கள். காலம், இடம், மதம், மொழி கடந்த நிலையில் அனைத்து சமூகங்களையும் சார்ந்த பாமரரும் தத்துவஞானிகளும் தமது தீய எண்ணங்களை அகற்றிப் பேரானந்தப் பெருவாழ்வு பெறுதற்கு ஏற்றவகையில் அறிவியல் மற்றும் கலையியல் நுட்பங்களுடன் அமைக்கப்பட்ட ஒரு தலையாய திருவடிவமாக நடராஜத் திருவடிவத்தை இவர்கள் தரிசித்துள்ளனர்.

THE FIRST COUPLET OF THIRUKKURAL

Kumar Punithawel


The great leader of India Dr. Abdul Kalam in his book, 'You are unique' in the last page mentioning the five books that has made a difference in his life was led by Thirukkural (1). Thirukkural has one hundred and thirty-three chapters and each chapter has ten couplets making it a necklace of thousand three hundred and thirty gems.. The first chapter is titled 'The praise of God'. In it the first couplet goes as follows:

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

A, as its first of letters, every speech maintains;
The 'Primal Deity' is first through all the world's domains. Translated by Rev U.G Pope.

sound is emitted. This amply justifies the reason why Thiruvalluvar mentioned this first of 'all letters' as the primordial sound.

There is another great reason to bring it as the first letter on this great book Thirukural. The Tamil letter 'Ah' consists two other letters namely 'Ou'(உ) and 'Ma' (ம). Please look at the attached figure 1.Thiruvalluvar from Tamil Nadu was influenced by the religious philosophy of the land called 'Sithantham'. This philosophy says there are three fundamentals entities in this world. They are God, soul and Maya which is the world referred to as an illusion. These in their terminology it is called as Pathi (பதி), Pasu (பசு) and paasam (பாசம்).



It should be noted, the first letter in every language known is A, or as pronounced in Ah. Likewise says Thiruvalluvar, God is the first in this world of all living being.

The reason for the letter 'A' to be the first is, because it the primordial sound, which when a person opens the mouth to utter any

The straight line on right extreme of the letter represents formless form of God. The letter 'c' the soul is extending its horizontal line towards one the formless form God. ? the Maya is hanging on the Soul upside down and dragging it away from the God. What a great way to express the concept of God world and man. Frequently treating world as Maya or illusion is ridiculed by many.

However I would like to point the conclusion made by the modern scientists as explained by Dr. Abdul Kalam the former president of India (2).

'The greatest thing that Max Plank and his quantum physics did for the spiritually minded person was to show that the world -as the senses tell us and as the Newtonian scientists had been telling us-is not a solid thing. Physicists went to the heart of the matter and were astounded by what they saw. Matter was not solid at all as our senses tell us but merely energy in motion. In fact, matter is composed subatomic particles that have no design or shape and do not follow any stranded order. Sometimes they behave like waves and sometimes like particles. And some time they behave like both, as well as many things at the same time. Hence these physicists actually proved **Maya** in a scientific way.

Hence it is very appropriate to conclude as mentioned in the first couplet the maya or illusion the world that draws the man from the realization of the God.

Though Rev U. G Pope had translated the words 'ஆதி பகவன்' as Primordial God it is interesting in his book 'THE SACRED KURRAL OF THIRUVALLUVA NAYANAR first published in 1886 in its chapter introduction he mentions as follows (2); 'A wild and utterly incredible tradition assigns him a Brahman father and no-caste mother. Even to this date there is a school of thought assigning (ஆதிபகவன்), Aathi as his no-caste mother and Bahavan as his Brahman father. However this thought was well ridiculed by great Tamil scholar Dr.Ke. Aa. Pe. Visvanatham D.Lit.who is honored with the title Thamil Marai Kaavalar in his address to 'Thiruvalluvar padipakathar' in 1953 (4) he has mentioned that, in his 35 years of research, he had traveled all over Tamil Nadu and had never come across a Brahmin caste man with the name Bahavan or low caste woman with the name Aathi. Hence we can conclude his parents were not known and the words must have referred to God or more appropriately ancient / primordial God.

As an anecdotal delicacy we may observed instead of being a no cast woman's son there is evidence in Purananooru a Sangam literature dating between 4Bc and 4CE, in the songs 137 to 140, the name Nanjil Valluvar, meaning Valluvar from Nanjil Nadu. Like Siddhartha a prince became a saint Buddha, so is our Valluvar a person very high in ranks had became a saint Thiruvalluvar.

Thiruvalluvar in his epic book never mentioned any of the deities that were worshiped during his time. Instead he used the generic terms like Theivam for God. Another notable deviation is his using terms expounding the attributes of God when referring to God. Such endeavour gave a universal appeal to his book. We may call it spiritual and not religious!

On the second couplet he addresses God by the word 'Vaalarivan' (வாலறிவன்) which has a connotation 'purely wise' the suffix 'an' in the end of the word in Tamil means it's of masculine gender. For female gender the suffix is 'aal' that is used as suffix. In the sixth couplet St. Valluvar uses the term 'Aiynthavithan' (ஐந்தவித்தான்) which has a connotation as one who has quenched the effects of the five senses. Again in the eighth couplet he uses the term 'Enkunathan' (எண்குணத்தான்) meaning one with eight attributes which are 1.Absolute independence 2.Absolute purity 3.Absolute self-knowledge, 4.Absolute freedom 5.Boundless grace 6.Boundless happiness, 7.Omniscience 8.Omnipotence.

Finally coming to the first couplet, in the word Athi Bahavan, the term Aathi (ஆதி)we can accept as ancient or primordial. pahavan (பகவான்) has two connotations. The first is according to Ke Vaa Jaganthan (5), it is one who poses paham (பகம்). Paham refers to six attributes which are 1, Ieswariam (Wealth), 2. Veeriam (Valour), 3. Puhal

(praise) 4. Thiru (Sainthood), 5.Gnanam (Wisdom), 6. Vairakiyam (resolve). Hence the meaning should be Primordial God with these five attributes.

However, I noticed another spin in the word pahavan . The suffix 'an' (md;) is added to a verb to show the masculine gender performing the action in discussion. When we add the suffix an to the word alaku (Beauty) we get the word alakan meaning beautiful male. Similarly we can sow the following examples: **moF + md; = mofd;** (alaku + an= alakan) (beautiful man).

muR + md; = murd;	arasu+an= arasan (King)
FUL + md = FUld;	kurudu+an=kurudan (blind man)
fa;T + md; = fatd;	kaivu+an=kayavan
$j;J + md; = $j;jd;	kuthu+an=kuthan

If one focus on the word Athi pahavan meaning of the word aathi is ancient or primordial, however pahavan is the combination of the Tamil words pahu (gF) and an (md;) giving the word pahavan. பகு + **md;= gftd;**. The word pahu which is from pahuthal meaning separate or categorise separately. This leads to the question what was separated. Though creation is an intriguing question of all time Stephan Hawking accepted as greatest living scientist has this to say in his book A Brief History of Time (6): "In 1929 Edwin Hubble made the land mark observation that where ever you look, distant galaxies are moving rapidly away from us. In other words, the universe is expanding. This means that at an earlier time objects would have been closer together. In fact, it seemed there was a time, about ten or twenty thousand millions years ago, when they were all at exactly the same place and when, therefore the density of Universe was infinite. This discovery finally brought the question of the beginning of the Universe into realm of science.

Hubble's observations suggested that there was a time called the big bang, when the universe was infinitesimally small and infinitely dense". Whoever caused this Big-bang is the primordial cause and the most appropriate reference to God. One cannot avoid becoming awe struck to see the first couplet having so much insight in scientific ethics. Each couplet is a gem and there one thousand three hundred and thirty of them.
The more appropriate translation for the first couplet should be:

As A in the forefront of letters;
Primordial causer in forefront of world

Reference:

1. You Are Unique published by Punya Publishing 2012 ISBN 81-89534-18-1
2. Transcendence My Spiritual Experience with Pramukh Swamiji, HarperCollins Publishers ISBN: 978-93-5177-405-1 (Page 135)
3. THE SACRED KURRAL OF THIRUVALLUVA NAYANAR BY Asian Educational Services sixth print 1999. ISBN: 81-206-0022-3.
4. Valluvarum Kuralum Published by Paari nilayam 13th edition in 1990 page 13.
5. Thirukural Aarachi pathipu By Ke Vaa Jaganathan published by Ramakrishna Mission Vithyalayam second edition dated February 2004
6. A BRIEF HISTORY OF TIME by: Stephen Hawking Published by Bantam Books.1988 ISBN: 0-553-10953-7

சமயஇலக்கியங்களும் தமிழும்

கலாநிதி எஸ். சிவநாயகமூர்த்தி

உலகில் இறைவனால் போதிக்கப் பட்ட மொழி தமிழென புராணங்கள் கூறுகின்றன. உலகின் முதல் மொழி தமிழேயென ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். தமிழ் சைவத்தின் மொழியாக மட்டுமன்றி வேறு பல சமயங்களின் வளர்ச்சிக்கும் அவற்றின் தமிழ் இலக்கிய பணிகளுக்கும் மூலாதாரமாகவும் அமைந்துள்ளது. உலகில் பல சமயங்களின் வளர்ச்சிக்கு தமிழ் மொழி போல வேறெந்த மொழியும் உதவவில்லை. உலகிலுள்ள ஒப்பரிய சமயங்களெல்லாம் ஒன்று சேர்ந்து தத்தம் சமய இலக்கியங்களை இயற்றி மகிழ்ந்த ஒரு மொழி உண்டெனின் அது தமிழேயாகும்.

சைவம். வைணவம், சமணம், பௌத்தம், இஸ்லாம், கிறீஸ்தவம்என்னும் வேறுபட்ட சமயங்கள் ஆறும் ஒருமையுற்று அரிய சமய இலக்கியங்களைப் படைத்து அருந்தொண்டாற்றி உள்ளன. தமிழிலுள்ள இலக்கியங்களைக் கூர்ந்து நோக்கினால் சமயச் சார்பில்லாத இலக்கியங்களே இல்லை யெனலாம். திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், ஆகிய நாயன்மார்களின் தேவாரங்களும், மாணிக்க வாசகர் அருளிய திருவாசகமும், சேக்கிழார் பிரானின் பெரிய புராணம் மற்றும் சைவ சித்தாந்த இலக்கியங்களும் சைவம் தந்தவை. ஐம் பெரும் காப்பியங்களை நோக்கினால் அவை சமணமும். பௌத்தமும், அளித்தவை.

பதினெண் கீழ்க் கணக்கில் பல நூல்கள் சமணந் தந்தவையாகவேயுள்ளன. ஆழ்வார்கள் பாடிய திவ்விய பிரபந்தமோ வைணவம் வழங்கியது. கம்பராமாயணம் வைணவத்தின் மிகப் பெரியசொத்தாக விளங்குகின்றது.

ஆறுவகைச் சமயங்களில் சைவமும் வைணவமும் தமிழகத்தில் இருந்தவை. சமணமும் பௌத்தமும் வடக்கேயிருந்து வந்தவை. இஸ்லாமும் கிறீஸ்தவமும் பிறநாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்டவை. இவ்வாறான சமயங்கள் யாவும் தமிழுக்குப் பல இலக்கியங்களை வழங்கியள்ளன.

ஆறு வகையான இந்தசமயங்களில் சைவமும் வைணவமும் முரண்பட்டவை. சமணமும் பௌத்தமும் பகைமைமிகக் கொண்டவை. இஸ்லாமும், கிறீஸ்தவமும் பிறவற்றை வெறுப்பவை. இரண்டும் எதிரானவை. இவ்வாறு வேறுபட்ட சமயங்களெல்லாம் தமிழ் இலக்கியப் பணியில் பகைமைமறந்து வேற்றுமை நீங்கி ஒன்றி ணைந்து செயற்பட்டுள்ளமையைக் காணலாம். இவ்வாறு இச்சமயங்கள் இணைந்து இலக்கியப் பணியாற்றியமைக்குத் தமிழ் மொழியின் சிறப்பே காரணமாகும். இச்சமயங்களில் சைவமும் வைணவமும் தவிர ஏனைய சமயங்கள் தமிழின்பால் அன்பு கொண்டோ தமிழுக்குத் தொண்டாற்ற வேண்டுமென்றோ தமிழிலக்கியப் பணிபுரிந்தன வெனக் கூறமுடியாது. அச் சமயங்களுக்கு எல்லாம் தமிழகத்தில் காலூன்றி தத்தமது சமயங்களை வளர்க்கத் தமிழின் துணையின்றி முடியாது என்பதனை அறிந்தே தமிழின் துணை கொண்டுதத்தம் சமய இலக்கியங்களைப் படைத்தனர். அவ்வாறு செய்யப்பட்ட பணிகளே தமிழுக்கு இலக்கியப் பணிகளாக அமைந்தன. இவ்வாறு சைவம் தந்த பன்னிரெண்டு திருமுறைகளும், சைவ சித்தாந்த இலக்கியங்களும் சேக்கிழார் அருளிய பெரிய புராணமும் சைவ இலக்கியங்களில் சிறப்பாக விளங்குகின்றன. அவ்வாறே திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்ட வைணவமும், பன்னிரு ஆழ்வார் களால் 108 தலங்களுக்குச் சென்று பாடப் பெற்ற பாடல்களின்தொகுப்பான “நாலாயிரம் திவ்விய பிரபந்தம்” எனப் போற்றப்படும் நூலை தங்களின் சமயச் சொத்தாகக் கொண்டுள்ளார்களா. அவையே வைணவசமய இலக்கியங்களாகவும் உள்ளன.

இஸ்லாம் மதத்தைத் தழுவிய முகமதியர்களான தமிழ் மக்கள் தமிழ் பேசினர். தமிழிலே இலக்கியங்களையும் படைத்தனர். அவர்களியற்றிய இலக்கியங்களும் தமிழுக்கு வளமூட்டுவனவாகவே அமைந்துள்ளன. அவை இஸ்லாம்மத இலக்கியங்களாயினும் மரபு நிலை மாறாத தமிழ் இலக்கியங்களாகவே காணப்படுகின்றன. சீறாப்புராணம் இஸ்லாமிய இலக்கியங்களில் முதன்மையானதும் சிறந்த காப்பிய இலக்கியமாகவும் விளங்குகின்றது. இந்தக் காப்பிய இலக்கியம் நபிநாயகத்தின் வரலாற்றைக் கூறுகிறது. இதனை இயற்றியவர் உமறுப்புலவர்

அடுத்ததாக திருமணிமாலை என்னும் இஸ்லாமிய இலக்கிய நூலைக்கூறலாம். இதை இயற்றியவர் சேகனாப் புலவர் என்பவராவார். இவரது முழுப்பெயர் செகப்துல் காதர் நெயனார் என்பதாகும் இந்நூல் நபி இப்ராகிம் அவர்களின் புனித வரலாற்றைக் கூறுவதாகும். இவரே முகிய்யித்தின எனபவரின் வரலாற்றை 1330 பாடல்கள் கொண்ட குத்பு நாயகம் என்னும் பெயர்கொண்ட புராணத்தையும் இயற்றினார்.

காசிம் புலவர் இயற்றிய திருப்புகழ் என்னும் இலக்கிய நூலானது அருணகிரிநாதரின் திருப்புகழ் போல் சிறப்புடையதாகும்.

இவற்வைவிட சவாதுக் கவிஞரின் இலக்கியங்கள், மஸ்தான் சாகிபு ஆகியோரின் பாடல்களும் தமிழ் இலக்கியதற்கு வளம் சேர்த்துள்ளன. இவர்களைவிட வேறும் இஸ்லாமியக்கவிஞரகளின் இலக்கியங்களும், பாடல்களும் தமிழ் இலக்கியத்துற்கு மேலும் வலுவூட்டியுள்ளன.

கிறீஸ்தவ இலக்கியங்களை நோக்குவோமாகில் வணிகம் செய்ய வந்த ஐரோப்பியர்கள் அனைவரும் தங்கள்சமயத்தை நிலை நிறுத்த விரும்பினார்கள் அதனால் தங்களுடன் தொண்டுள்ளம் படைத்த பாதிரிமார்களையும் அழைத்து வந்தனர். அப்பாதிரிமார்கள் தமிழகத்தில் தங்கள் கிறீஸ்தவ சமயத்தைப் பரப்ப விரும்பினார்கள் அதன் காரணமாகத் தமிழைப் பயின்றதோடு அதில் சிறந்த புலமையும் பெற்றனர். சமயப் பணியோடு தமிழ்ப்பணியும் ஆற்றினர.

இவர்களில் இத்தாலி நாட்டிலிருந்து கிறீஸ்தவத் தொண்டாற்ற வந்தவரான வீரமா முனிவர் என்பவர் தமிழைத் திறமையாகக்கற்று, கவிபாடுவதிலும், சொல்லாற்றலிலும் வல்லவராக விளங்கினார். தமிழுக்குச்சிறந்த பணிகளைச் செய்தார். தமிழில் முதன்முதலாக அகராதியை வெளியிட்டார். தேம்பாவணிக் காப்பியம், திருக்காவலூர்க்கலம்பகம், கித்தேரி அம்மாள் அம்மானை,அன்னை அழுங்கல் ஆகிய இலக்கியங்களை இயற்றினார்.இவர் இயற்றிய தேம்பாவணி என்னும் காப்பியம் தேன்போன்று இனிமையானதுடன் சிந்தாமணி, கம்பராமாயணம் போன்று கற்பனை வளமும், கவி நயமும் கொண்டு சிறந்து விளங்குகின்றது.

அடுத்து சிறப்பாகவிளங்கும் இரட்சணிய யாத்திரிகம் என்ற நூலானது கிறீஸ்தவ சமயக் காப்பிய இலக்கியங்களுள் சிறந்து விளங்கும் காப்பியங்களில் ஒன்றாகும்.இதனை இயற்றியவர் ஏச். ஏ. கிருஷ்ணபிள்ளை என்பவராவார். இவர் ஆரம்பத்தில் வைணவ சமயத்தவராகவிருந்து பின்னர் மதம் மாறினார்.தமிழ் ஆசிரியராகவும் பணியாற்றியவர் பின்னரும் பல கிறீஸ்தவர்கள் பல கிறீஸ்தவக் கவிகளையும் நூல்களையும் தமிழில் எழுதி வெளியிட்டுத் தமிழ்ப் பணியாற்றியுள்ளனர். இவ்வாறு பல சமயத்தவர்களும் தம் சமயத்தைத் தமிழ் மொழிமூலம் பரப்பியதோடு தமிழ் இலக்கியத்திற்கும் சிறந்த தொண்டாற்றி உள்ளனர். பல சமய இலக்கியங்களையும் படைக்க உதவிய பெருமை தமிழ் மொழிக்கேயுரிய தனிச் சிறப்பாகும்.

ஆண்டாள் அருளிய திருப்பாவையும் ஆளுடைய அடிகள் அருளிய திருவெம்பாவையும்

மா. க. ஈழவேந்தன்

"இந்த உலகினில் எல்லா மனிதரும்
சுகம் பெறும் வழியினைச் சொல்லித்
தருகிற பித்தர்களும் சிலர் பிறந்துள்ளார்கள்
அவர்களுள் ஒருவரே அருள் மணிவாசகர்
இதயங்களுக்கிடையே பாலமாய்
உணர்வுகள் போய்வர உதவுவதற்கு
மொழியென ஒன்று முளைத்ததனலே தெளிவுறப்
பெற்றோம் திருவாசகத்தை"

என்று தமிழகத்தின் தலை சிறந்த பெண் கவிஞர் சௌந்தரா கைலாசம் மணிவாசகரின் மாண்பு பற்றியும் தித்திக்கும் திருவாசகத்தின் தன்மை பற்றியும் பாடிச்சென்றுள்ளர். நம் கவிஞர் கண்ணதாசன் அவர்களோ "ஆண்டாள் ஆண்ட தமிழ்" என்று தனது "அர்த்தமுள்ள இந்துமதம்" என்ற நூலில் ஆண்டாளை வியந்து போற்றியுள்ளார்.

ஆண்டாளின் திருப்பாவையின் திறத்தினை பல்வேறு அறிஞர்கள் பாராட்டிச் சென்றுள்ளனர். ஆனால் நம் ஆண்டாளோ எம் சூடிக்கொடுத்த நாச்சியரோ திருப்பாவை ஓதுவதனால் நாம் பெறும் பேறுகள் யாவை என்பதை பின்வரும் முறையில் எல்லோரும் ஏற்கும் வகையில் உள்ளம் உருக எடுத்துரைகின்றார்

"வங்க கடல் கடந்த மாதவனைக் கேசவனை
திங்கள் திருமுகத்து சேயிழையார் சென் றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட ஆற்றை அணி பதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர் பிரான் கோதை சொன்ன
சங்கத்தமிழ் மாலை முப்பதுந்தப்பாமே
இங்கு இப்பரிசுரைப்பார் ஈரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய்"

இப் பாடலில் தாம் பாடிய சங்கத் தமிழ்ப் பாடல் முப்பதையும் தப்பாமல் பாடுவோர் திருமால் அருளைப் பெற்றே தீருவார் என்று அறுதியிட்டுக் கூறியிருப்பது உவந்து போற்றுதற்குரியது. இனி தீஞ்சுவைமிக்க திருவெம்பாவை எங்கு அருளிச் செய்யப்பட்டது என்ற கேள்வி எழுகின்றது. திருவாலவாயுடையார் திருவிளையாடல் புராணம் இப்பாடல்கள் திருபெருந்துறையில் அருளிச் செய்யப்பட்டன என்று கூறப்படுகின்றது. ஆனால் திருவாதவூரர் அடிகள் புராணம் திருவண்ணாமலையில் அருளிச் செய்யப்பட்டது என்று மொழிகின்றது. எனினும் எமக்கு கிடைத்த அகச் சான்றுகள் இப்பாடல்கள் திருவண்ணாமலையில் எழுந்தன என்பதை வலியுறுத்தி நிற்கின்றன. குறிப்பாக "மாலறியா நான் முகனும் காணா மலையினை" என்றும் "அண்ணாமலையான் அடிக்கமலம் சென்று இறைஞ்சும் விண்ணோர்" என்றும் வரும் வரிகள் சான்றாய் அமைகின்றன.

திருவெம்பாவை எழுத தூண்டிய நிகழ்ச்சி

மாணிக்கவாசகர் திருவெம்பாவைப் பாடல்கள் பாடுவதற்கு தூண்டுகோலாய் விளங்கிய நிகழ்ச்சி யாது என்பதனை சிறிது ஆராய்வோம். சிவன் கோவில்களை வழிபட்டு திருவண்ணாமலையில் சிறிது காலம் தங்கியிருக்கும் வேளையில் முன்பனிபருவத்தை உணர்த்தும் மார்கழித் திங்கள் வந்தது. அவ்வேளையில் பருவமடைந்த பாவையர் பலர் வைகறையில் துயில் எழுந்து தோழிகளுடன் இறைவன் புகழ்பாடி நீராடச் சென்ற காட்சியினைக் கண்டார் மாணிக்கவாசகர். கவியுணர்ச்சியும் கடவுளுணர்ச்சியும் மிக்க மாணிக்கவாசகரை இக்காட்சி மிகவும் கவர்ந்தது. இதன் விளைவு இறையுணர்வினை ஊட்டும் இன் தமிழ் திருவெம்பாவைப் பாடல்களின் தோற்றம்.

"மாதர்கொண் மாதரெல்லாம் மார்கழிதிங்கள் தன்னில்
ஆதிரை முன்னீரைந்தேயாகிய தினங்களெல்லாம்
மேதகு மனைகள் தோறும் அழைத்திருள்விடிவதான
போதிவர் தம்மிற் கூடிப் புனற்றடம் ஆடல்செய்வார்" எனவும்
"அன்னவர் இயல்பு கண்டார் ஆங்கவர் புகன்றதாக
மன்னிய திருவெம்பாவை பேசி"

எனவும் வரும் வாதவூரடிகள் புராணப்பாடல் இதனை வலியுறுத்தி நிற்கிறது. பாவைப் பாடல்களின் வளர்ச்சி "திருவெம்பாவை பாடல்களினை நான்கடிக்கு பத்தடி வரையும் கொச்சகம்" என்று பேராசிரியர் மொழிகிறார். ஆகவே எட்டடிகளாக வந்த தரவினை கொச்சகக்கலிப்பாவாக இப் பாடல்களைச் சொன்னால் பொருத்தமுடையது. 5 வயது தொடங்கி 12 வயது வரையுள்ள கன்னிப் பெண்கள் திருவாதிரை தொடங்கப் பத்து நாட்களுக்கு முன் துயிலெழுந்து தோழிப் பெண்களை அழைத்துச் சிவன் புகழ் பாடித் தாமரைத் தடாகத்தில் நீராடி உமையம்மையை மணலில் உருவகம் செய்து வழிபடும் வழிபாட்டைத் திருவெம்பாவைப் பாடல்கள் ஓதுகின்றன. சைவத்துக்கும் வைணவத்துக்கும் பொதுவாய் விளங்கிய இப் பாவைப் பாடல்கள்காலப்போக்கில் சமண, புத்த மதங்களிலும் இடம்பெற்றன என்பதற்கு "யாப்பெருங்கலவிருத்தி" என்ற நூல் சான்றாய் விளங்குகின்றது.

பாவைப் பாடல்களில் காணப்படும் ஒருமைப்பாடு

இனித் திருப்பாவை திருவெம்பாவையூடாக ஆண்டாளுக்கும் ஆளுடைய அடியார்க்கும் உள்ள நெருங்கிய ஒருமைப்பாட்டைப் பார்ப்போம். ஆண்டாளை அடுத்து வாழ்ந்தவர் ஆளுடைய அடிகள் ஆகவே நீலமேனியுடைய திருமாலை முன்னவர் வழிபட்ட போதும் செம்மேனியுடைய சிவனை பின்னவர் வழிபட்ட போதும் அவர்களிடையே கருத்தொற்றுமை மட்டுமன்றி பாடல்வரிகளிலும் நெருங்கிய ஒற்றுமையை காணக்கூடியதாக இருக்கின்றது. எடுத்துக் காட்டாகப் பின்வரும் வரிகளை எடுத்துக் கூறுவது ஏற்புடையதாகும்.

"எல்லாரும் போந்தாரே போந்தார் போந்தெண்ணிக்கொள்" (திருப்பாவை - 15)

"வண்ணக்கிளி மொழியர் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொடுள்ளவா சொல்லுகோம்" (திருவெம்பாவை - 4)

"எங்களை முன்னம் எழுப்புவான் வாய் பேசும்
நங்காய் எழுந்திராய்" (திருப்பாவை - 14)

"மானே நீ நென்னலை நாளை வந்துங்களை
நானே எழுப்புவன் என்றலும்" (திருவெம்பாவை - 6)

"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்
உந்தன்னோடு உற்றோமே
யாவோம் உமக்கே நாமாட்செய்வோம்" (திருப்பாவை - 2)

"உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள் பணிவோம்
ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார்" (திருவெம்பாவை - 9)

"ஆழி மழைக் கண்ணா ஒன்று நீகைகரவேல்
ஆழியுட்புக்கு முகந்து கொடுஆர்த்தேறி
ஊழிமுதல்வ னுருவம் போல் மெய்கறுத்துப்
பாழியந்தோளுடைய பற்பநாபன் கையில்
ஆழி போல் மின்னி வலம்புரி போல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சர மழை போல்" (திருப்பாவை - 4)

"முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிவேல்
பொன்னம் சிலம்பிற் சிலம்பிற திருப்புருவம்" (திருவெம்பாவை - 16)

மேற்குறித்த பாடல்கள் தவிர்ந்த "திறவேலோர் எம் பாவாய்" "எமக்கேலோ எம்பாவாய்" முதலிய தலைப்புக்களில்கூட நெருங்கிய ஒற்றுமையைக் கண்டு நாம் இன்புறலாம். ஆண்டாளின் தீவிர பக்தி

"ஊனுடைய யாழி சங்கு தமர்க்கென்
றுன்னித் தெழுந்த வென் தட முலைகள்
மானிடவர்க்கென்று பேச்சுப்படில்
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே"

என்று இயம்பி கண்ணன் மீது தீராக்காதல் கொண்டு வாழ்ந்த எம் சூடிக்கொடுத்த நாச்சியார் மற்றுமோர் இடத்தில் கண்ணன் மீது தனக்குள்ள எல்லையற்ற காதல் உணர்வினை தன் உள்ள உறுதியைப் பின்வருமாறு கூறுகிறார்.

"அவரைப் பிராயம் தொடங்கி என்றும்
ஆதரித்து எழுந்த என் தடமுலைகள்
துவரைப் பிரானுக்கு என்றே சங்கற்பித்துத்
தொழுது வைத்தேன் எல்லை விதிக்கிற்றியே"

இக் காரணங்கள் கொண்டு போலும் "அஞ்சு குடிக்கொரு சந்ததியாய் ஆழ்வார்கள் தஞ்செயலை விஞ்சி நிற்கும் தன்மையளாய்- பிஞ்சாய்ப் பழுத்தாளை ஆண்டாளை பக்தியுடன் நாமும் வழுத்தாய் மனமே மகிழ்ந்து" என்று ஆண்டாளால் ஆட்கொள்ளப்பட்ட அன்பர் ஒருவர் உள்ளம் உருக மொழிகிறார். மற்றுமொரு திருமால் அடியவர் தன் பக்தி நிலை உச்சத்தை புலப்படுத்தும் முறையில் கொஞ்சம் கோபத்தோடு "பாதங்கள் தீர்க்கும் பாமழை காட்டும் வேதம் அனைத்துக்கும் வித்தாகும்- கோதைத் தமிழ் ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை வையம் சுமப்பது வம்பு" என்று சுவைபட மொழிந்துள்ளார்.

திருப்பாவையின் தனித்திறன்.

ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவை ஆழ்ந்த பொருளின் உள்ளடக்கமாய் விளங்குவதனால் அதற்கு எளிதில் பொருள் உரைப்பது இயலாது என்பதை ஒரிரு திருப்பாவைக்கு அர்த்தம் அருளிச்செய்ய வேண்டும் என்று பெருமானரை வேண்டிய போது "திருப்பல்லாண்டுக்கு ஆள் கிடைப்பினும் திருப்பாவைக்கு ஆள் கிடையாது என்று அருளிச் சென்றார்" என்று திருப்பாவை ஈராயிரப்படி அவதாரிகை கூறுவதிலிருந்து தெரிய வருகிறது.

நாகராயன் நவிலும் நற்கருத்து

திருப்பாவைப் பாடல்களில் ஊறித்திளைத்து அவற்றுக்கு தன் உள்ளத்தை பறிகொடுத்த திரு.கே. எஸ். நாகராயன் அவர்கள் பின்வருமாறு ஆழமான பக்தி உணர்ச்சியுடன் அழகுமிக எடுத்துரைக்கிறார்.

"Thirupphavai containing 30 verses is apparently a morning song to wake up the youthful Virgin from bed. But it is the towering presence of a Vision and the harmony of unique imaginative experience which is thought sensation, feeling all at once, that their greatest charm lies. Thiruppavai is such an incomparable work that not a word will be found in which is devoid of some spiritual import. The central teaching, however, is that one should rose up his soul early in life, shake off ignorance purify one self both internally and externally and begin to practice intense love or selfless devotion to god"

30 பாடல் கொண்ட திருப்பாவை கற்புடைய இளம் கன்னிகளை, துயில் எழுப்பும் பாடல்களாக அமைந்துள்ளன. ஆனால் இப்பாடல்களில் மேலோங்கி நிற்கும் பண்பு யாதெனில் உணர்ச்சி, எண்ணம், எழுச்சி என்பவற்றை உள்ளடக்கி இணைக்கின்ற கற்பனை அனுபவமும் இறை நோக்கமும் ஆகும். தெய்வீக ஆற்றல் அற்ற ஒரு சொல்லைக்கூட நாம் காணமுடியாதளவு ஒர் ஒப்புயர்வற்ற படைப்பாக திருப்பாவை விளங்குகின்றது. எனினும் இப் பாடல்களில் மையமாக விளங்கும் மெய்ப்பொருள் யாதெனில் வைகறையிலே எம் உயிரை (ஆன்மாவை) துயில் எழுப்பி அறியாமையை அகற்றி எம்மை உள்ளேயும் வெளியேயும் தூய்மைப்படுத்தி தன்னலமற்ற தீவிர இறையன்பில் ஆட்படுத்துவதாகும்.

திருவெம்பாவையின் உள்ளடக்கம்

இனி திருவெம்பாவைப் பாடல்களின் உள்ளடக்கத்தைச் சுருக்கி ஆராய்வோம். திருவெம்பாவைப் பாடல்களில் நடைபெறும் உரையாடல் 9 கன்னிப் பெண்களுக்கிடையில் நடைபெறுகின்றது. 9ஆம் பாடலிருந்து 20ஆம் பாடல் வரை பெண்கள் எல்லோரும் பேராயிரம் உடைய பெம்மான் பேரருளை வியந்து ஒன்று சேர்ந்து பாடிய தன்மை காட்டப்பட்டுள்ளது. 10வது பாடலில் சொற்களால் எடுத்தியம்ப முடியாத சொற்பதம் கடந்த இறைவனின் ஒப்பற்ற தன்மை ஓம்பப்படுகின்றது. 15வது பாடலில் எம் பித்தனாம் இறைவன் மீது பித்துப் பிடித்த ஒரு பேரணங்கின் இயல்பு இனிது இயம்பப்படுகிறது. 19ம் பாடல் "உன் கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம்" என்று கூறும் அடைக்கலப் பாடலாக விளங்குவதோடு "எம் கை உனக்கல்லாது எப் பணியும் செய்யற்க" என்று உறுதி கூறி தன்னை இறைவனுக்கு முற்றாக ஒப்படைக்கும் பாடலாக ஒளி விடுகிறது. இறுதிப் பாடலில் ஆதி, அந்தம், தோற்றம், போகம், ஈறாம் முதலிய ஆழ்ந்த பொருளுடைய சொற்கள் கையாளப்பட்டு இறைவனின் ஐந்தொழில் விளையாட்டு அழகுற உணர்த்தபடுகின்றது.

அம்மை அப்பனின் வழிபாட்டின் விளக்கம்.

திருவெம்பாவைப் பாடல்கள் அனைத்தையும் யாம் துருவி ஆராய்கின்ற போது அவை அனைத்தும் அம்பலவாணன் புகழ் பாடுவதை உணரத்தக்கதாய் இருக்கிறது. சான்றாக பின்வரும் 3 இடங்களில் சீதப்புலனாடிச் சிற்றம்பலம் பாடி நற்றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தன் "தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலதுள் ஈசனார்க்கன்பார் யாம்" என்ற வரிகளில் சிற்றம்பலம் என்ற சொல் எடுத்தாளப்பட்டிருப்பது ஈண்டு நினைவில் கொள்ளத்தக்கது. மற்றும் சக்தியை வியந்து பாடப்பட்டது இப் பாடல்கள் என்று கூறப்படுவதற்குச் சான்றாய் அம்மை அப்பன் வடிவில் அர்த்த நார்ச வடிவில் இறைவனை வழிபட்டார் என்பதற்குப் பதின்மூன்றாம் பாடலில் வரும் "எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த பொங்கு மடுவில் புகப் பாய்ந்து நம் சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்ப" நீராடியதாக வரும் வரிகள் துணை நிற்கின்றன. மற்றும் "பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை தன் பாதத்திறம் பாடி" என 14வது பாடலில் வரும் வரியும் "முன்னியவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே என்னப் பொழியாய் மழை" என 16வது பாடலில் வரும் சொற்றொடரும் யாம் முன்னே கூறிய கருத்துக்கு வலுவூட்டுக்கின்றன.

கதிர்மணி கதிரேசன் செட்டியார் கழலும் கருத்து

திருவாசகத்திற்கு உரை எழுதியோர் பலர், அவர்களுள் எம் இதயத்துள் இடம் பெற்றோர் சிலர். அவர்களுள் ஒருவர் தான் கதிர்மணி விளக்கம் தந்த கதிரேசன் செட்டியார் அவர்கள். அவர் பெருமையை.

"வையகம் போற்று திருவாசகத்தின் உட்பொருளைக் கையிற் கனியாகக் கொண்டு காட்டினல்- செய்ய தமிழ் பேராசிரியர்பெருமால் கதிரேசன் ஆராய்ந்த முற்றும் அறிந்து" எனக் கவி-மணி அவர்கள் கனிந்த தமிழில் வாழ்த்துகிறார். இத்தகைய பெருமை மிக்க பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்கள் தனது திருவெம்பாவை விளக்க நூலில் திருவெம்பாவை வரலாறு என்ற பகுதியில் பின்வருமாறு திருவெம்பாவையின் உட்பொருளை எம் உள்ளம் தொடும் முறையில் உணர்த்தியுள்ளார். இத் திருவெம்பாவையில் ஆன்ம நாயகனாகிய இறைவனை அடைவதற்குரிய பக்குவம் முதிர்ந்த உயிர்களையே கன்னிப் பெண்களாகவும் ஆணவ மல இருளில் பிணிக்கப்படிருத்தலையே உறங்கிக் கிடத்தலாகவும் மலவாற்றலொழியப் பெறும் நிலையே துயில் நீர்த்தெழும் நிலையாகவும் மல பரிபாகம் உயிர்கள் உடைய அஃதில்லாத உயிர்களை உணர்த்தி உணர்ச்சி அன்பு நெறிப்படுத்தி இறையருளிற் தோய்வித்தற்கு அழைத்தலையே நீராட அழைத்ததாகவும் இஃது அருளிச் செய்யப்பட்ட தென்க இந்நுண் பொருள்"

"மலவிருளிற் றுறங்காமல் மன்னுபரிபாகரருள் செலமுழுக வருகவென செப்பல் திருவெம்பாவை" என்னும் திருவாசக உண்மையில் தெரிவிக்கப்பட்டிருந்த்தல் அறிக பரமான் மாவாகிய இறைவனைத் தலைமகனாய்ப் பெற்று மணந்து பேரின்ப வாழ்க்கையிற் தலைப்படுவதற்கு விரும்பும் கன்னிப் பெண்களுள் தம்மையும் ஒருத்தியாக அடிகள் கொண்டு கூறியபடியாம்.

இரத்தினா நவரத்தினம் இயம்பும் இனிய கருத்து

திருவசகத்திற்கு ஆங்கில உரை கண்டோரில் டாக்டர் ஜி. யூ போப் திருவாசகமணி கே எம் பாலசுப்பிரம்ணியம், வான்மீக நாதன்,ஈழத்துப் பெண்மணி திருமதி இரத்தினா நவரத்தினம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுள் இறுதியில் குறிப்பிடப்பட்ட திருமதி இரத்தினா நவரத்தினம் அவர்கள் தனது திருவாசக உரை நூலில் திருவெம்பாவையின் உட்பொருளையும் காலம் கடந்து விளங்கும் அதனின் கடவுட் தத்துவத்தையும் பின்வருமாறு சுவை படக் கூறுகிறார்.

'in beauty of thought and expression stanza 9 and 19 considered a gem in Thiruvachakam> it is the prayer of love. The damsels bow to serve none but the true devotees of the Lord…'the poet uses symbols and practices prevalent in his time to convey his thoughts and feelings on one of the most entrancing manifestations of the Lord 'grace'. He reveals in this lyric the profundity of his great Vision. Like Blake he had to speak meaning of eternity in the language of his in consistent with the religious practices of his day'.

திருவெம்பாவையில் உள்ள 9ம் 19ம் பாடல்கள் எண்ணத்திலும் எடுத்து இயம்பும் தன்மையிலும் மாசில்லா மணியாக மலர்ந்து விளங்குகின்றன. இப் பாடல்களில் வரும் இளம் நங்கைகள் இறைவனோடு ஒன்றிய அடியவர்க்கேயன்றி வேறு எவர்க்கும் எப்பணியும் செய்யோம் என்று உறுதி பூண்டவர்களாகக் காட்சியளிக்கிறார்கள். இறைவனின் ஈர்த்து இழுக்கும் அருட் திறனில் வெளிக்கொணர்வு மீதான தன் உள்ள உணர்ச்சியை எடுத்துகாட்ட தான் வாழ்ந்த காலத்தில் வழக்கில் இருந்த உருவகங்களையும் நடைமுறைகளையும் பயன்படுத்தியுள்ளார்.

கவிஞர் பிளேக் அவர்கள் போன்று தான் வாழ்ந்த காலத்தில் நிலவிய சமய நடைமுறைகளுக்கேற்ப அக்கால மொழியின் ஊடாக என்றும் அழியாத காலத்தின் உட்பொருளைப் பற்றியும் மணிவாசகர் பேச வேண்டியிருந்தது.

பக்திக்குரிய மொழி பைந்தமிழில் எழுந்த திருப்பாவையும் திருவெம்பாவையும்

சுருங்கக் கூறின் கண்ணன் புகழ்பாடும் சூடிக்கொடுத்த சுடர்கொடியாம் ஆண்டாளின் 30 பாடல்கள் கொண்ட திருப்பாவையும் முக்கண்ணன் புகழ்பாடும் அழுது அடி அடைந்த அன்பராம் ஆளுடைய அடியாரின் இருபது பாடல்கள் கொண்ட திருவெம்பாவையும் பக்திக்குரிய மொழி பைந்தமிழ் என்பதை பாருக்கு பறை சாற்றி நிலமிசை நிலைத்து நிற்கும் அருட் பனுவல்கள் என்பது எம் முடிந்த முடிபு. ஆண்டாளும் ஆளுடை அடியாரும் எம் அகத்தே என்றும் வீற்றிருக்கப் பேரொளிப் பிழம்பாக விளங்கும் பேராயிரமுடையானை வாழ்த்துவோமாக.



ஆகமம் கூறும் ஆவநீதி வழிபாடு

"ஒண்சுட ரானை உலப்பிலி நாதனை
ஒண்சுட ராகி உன்உள்ளத்து இருக்கின்ற
கண்சுட ரோன்உல கேழும் கடந்த அத்
தண்சுடர் ஓமத்தலைவனும் ஆகும்."

(திருமந்திரம் - 221)

திருக்கோயில்களில் நிகழும் கிரியை களையும் அவற்றின் விதிமுறைகளையும் நன்குணர்ந்து அனுஷ்டித்தால் பன்மடங்கு பலன் பெறலாம் என்பது அனைவரும் அறிந்ததே ஆகும். கோவில்களில் நிகழும் கிரியைகளில் ஹோமவழிபாடுகள் மிகவும் முக்கிய இடத்தைப் பெறுகிறது. அக்னியானது பஞ்ச பூதங்களுள் மூன்றாவதாகிய தேயு என்னும் பெயருடையதாய் ஒளிப்பொருளாய் மற்ற வஸ்துக்களை சுத்தமாக்குவதோடு தானும் "ஸீஸி": என்ற நாமமுற்று மிகப் பரிசுத்தமுடையதாய் விளங்குகிறது. அத்தோடு தன்னிடத்தில் ஆவநீதி செய்யப்படும் பொருட்களைத் தாங்கிச் சென்று உரிய தேவர்களிடம் சமர்ப்பிப்பதால் "ஸதவஹ:" எனும் பெயர் உடையதாய் விளங்குகிறது.

மஹா யாகங்கள் நடைபெறும் வேளையில் ஏகாக்னி, பஞ்சாக்னி, நவாக்னி என ஆகம சாஸ்திரங்களுக்கு அமைய அக்னி வழிபாடு விரிந்து செல்வதைக் காணமுடிகிறது. ஏகாக்னிக்கு மேல் அக்னி வழிபாடு விரிவடையுமாயின் மஹா யாகத்தில் ஒவ்வொரு திக்குகளிலும் உள்ள அக்னி குண்டங்களுக்கு உரிய மூர்த்திகள், அதன் அங்கங்கள், மந்த்ரங்கள் மற்றும் சமித்து, தான்யம் என தனித்தனியே சிவாகமங்கள் கூறி நிற்கிறது.

மேலும் சமித்து வகை, அன்னவகை, பழவர்க்கம், நெற்பொரி, நவதானியம் முதலியவற்றை ஹோமம் செய்து நெய் ஆஹுதியாக மந்த்ர தர்ப்பணம் (மந்த்ரங்களை திருப்தி செய்தல்) மந்த்ர தீபனம் (மந்த்ரங்களை ஒளி பெறச் செய்தல்) என தர்ப்பண தீபன ஆஹுதிகளும் நிகழும். அத்துடன் தேசாபாதனம் (தேச வேறுபாடு) காரணமாக வரும் குறைகளை நீக்கி நற்தேசமாக்கும் பொருட்டும் காலாபாதனம் (கால வேறுபாடு) அதனால் வரும் குறைகளை நீக்கி நல்ல காலமாக ஆக்கும் பொருட்டாம். அதாவது விதிக்கப்படாத இடத்தில் ஹோமம் நடாத்துவதும், விதிக்கப்படாத காலத்தில் ஹோமம் செய்தல் ஆகிய குறைகளைத் தீர்த்தலும், துர்நிமித்த சாந்தி சுவர்க்கம், இடையிலுள்ள அந்தரிக்ஷம், பூமி ஆகிய இவற்றிலுண்டாகும் துர்நிமித்தத்துக்கு உரிய சாந்தியின் பொருட்டும், "நிமித்தா பாதனம்" முற்கூறிய சுவர்க்கம், அந்தரிக்ஷம், பூமி இவற்றின் நலனுக்காக செய்யப்படும் ஆஹுதிகளை நிகழ்த்தி நிறைவாக மஹா பூர்ணாகுதி இடப்படுகிறது.

ஆகம வழியில் ஹோமத் திரவியங்களின் வகை

காமிகம், பூர்வகாரணம், உத்தர காண்டம், அஜிதம், அம்சும தந்திரம், வாதுளம், வீரம், சுப்ரபேதம், மகுடம் போன்ற ஆகமங்கள் ஹோம வழிபாடுகள் பற்றி மிகவும் விரிவாகச் சுட்டி நிற்கிறது.

26 வகையான அவிர்ப் பொருட்களைக் கொண்டது ஷட்விம்சதீ திரவிய ஹோமம் என்றும் 86 வகையான ஹோமப் பொருட்களைக் கொண்ட ஹோம வழிபாடு ஷட்அஸுதி திரவிய ஹோமம் என்றும், 96 வகையான திரவியங்களைக் கொண்ட வழிபாடு ஷண்ணவதி திரவிய ஹோமம் எனவும் பிரதிஷ்டா கிரியா ஜாரிஜையின் பிரகாரம் 108 திரவியங்கள் கொண்ட ஹோமம் எனவும் மேலும் 214 திரவியங்கள் கொண்ட ஹோமம் எனவும், 139 திரவியங்கள் கொண்ட ஹோமம் எனவும் பல ஆஹுதி வழிபாடுகளை ஆகமங்கள் விளக்கி நிற்கிறது.

ஹோமப் பொருட்களை அக்னி பகவா னிடத்தே ஆஹுதியாக சேர்க்கப்படும் இடத்து, அவை அக்னி பகவானின் நாக்குகளின் ஊடாக இறைவனைச் சென்றடைகின்றது என சாஸ்திரங்கள் கூறும். ஹோம குண்டத்தில் எழுந்தருளும் அக்னி பகவானுக்கு ஏழு நாக்குகள் இருப்பதாகவும், அவை ஒவ்வொன்றும் தனித்தனியே யாகத்தின் பலனைக் கொடுக்கக்கூடியதாகவும் அமைந்திருக்கின்றது. அவை முறையே உறிரண்யா, கனகா, ரக்தா, கிருஷ்ணா, சுப்ரா, அதிரக்தா, பஹுரூபா என நாமங்களைக் கொண்டதாகவும் விளங்குகிறது.

சிவஸ்ரீ. என். பிரசாந்தக் குருக்கள்
உடுக்கைவளை மகாகணபதி திருக்கோவில்
வட்டுக்கோட்டை

ஆதித் திராவிடர் சமயம் சைவமே

த. சிவபாலு எம். ஏ.

தமிழர் உலகில் தோன்றிய மக்களில் நாகரீக வளர்ச்சியில் முன் நிற்பவர்கள். திராவிட நாகரீகமாம் சிந்து வெளி நாகரிகத்தைத் தோற்றுவித்தவர்கள் தமிழர்கள். திராவிட மொழிகளுள் மிகப் பழமை வாய்ந்த மொழி தமிழ் எனக் கொள்ளப் படுகின்றது. தமிழர் பின்பற்றிய சமயம் சைவம். சிந்து வெளி நாகரீகத்தின் தொட்டில் எனப்படும் இந்து கங்கைச் சாரலில் மொகஞ்சதாரோ, ஹராப்பா ஆகிய இடங்களில் 1920ம் ஆண்டு தொடங்கப்பட்ட அகழ்வாய்வின் பயனாக திராவிட நாகரீகத்தின் உண்மையும், உயர்வும் உலகுக்கு வியப்பை தரத்தக்க பல செய்திகளையும், தகவல்களையும் தந்துள்ளது. இன்றும் காஸ்மீரப் பகுதியில் சைவசமயத்தவர்கள் வாழ்ந்து வருவதோடு அதனை காஸ்மீரியச் சைவம் என்றே அழைக்கின்றனர். சைவம் தோன்றியது எப்போ என்பது கேள்விக்குறியாக இருப்பினும் ஆரிய இனத்தினர் நாடோடிகளாக, மந்தை மேய்ப்பவர்களாக கைபர் கணவாய் ஊடாக இந்திய உபகண்டத்தில் நுளையும் முன்னர் சைவசமயம் வேரூன்றியுள்ளது என்பது வெளிப்படை.

சைவசமயமே சற்சமயம், சைவசமயமே அனாதியானது என்றெல்லாம் ஆய்வுகள் வலியுறுத்துகின்றன. சைவத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமான் என்றும், சிவ வணக்கம் உலகின் பல பாகங்களிலும் பரவி இருந்தது என்றும் ஆராய்ச்சிகள் நிறுவுகின்றன. சேயோன், மாயோன் என பழந்தமிழ் இலக்கண நூலாம் தொல்காப்பியம் இறைவன் பற்றிக் குறிப்பிடுகின்றது.

மாயோன் மேய காடு உறை உலகமும்
சேயோன் மேய மை வரை உலகமும்
வேந்தன் மேய தீம் புனல் உலகமும்
வருணன் மேய பெரு மணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையான் சொல்லவும் படுமே...... தொல்..பொருள். அகத்திணை 5

மாயோன் சேயோன் என்பதற்கு திருமால் எனவும், முருகன் எனவும் பொருள் கொள்கின்றார்கள் உரையாசிரியர்கள். மாயோனைத் திருமால் எனவும், சேயோனை முருகன் எனவும், வேந்தன் என்பது இந்திரன் எனவும், வருணன் பாலை நிலத்திற்குரிய மழைக்கான தெய்வம் எனவும் கொள்ளுவர். தமிழர் இயற்கையை வழிபட்டவர்கள், நடுகல் வைத்து வணங்கியவர்கள் என்னும் கருத்துக்களும் முன்வைக்கப்படுகின்றன. இவை இயற்கையின் வழி வந்த தெய்வங்களாகவும் கொள்வாரும் உளர். மலைப்பிரதேசத்திற்குரிய தெய்வம் குறிஞ்சிக் குமரன் எனவும் திருமால் எனவும் கொள்ளப்படுகின்றது. ஆனால், தமிழர்கள் போருக்கான வெற்றித் தெய்வமாக கொற்றவையை வழிபட்டமைக்கான ஆதாரங்களையும் சங்க இலக்கியங்களில் இருந்து அறியமுடிகின்றது. இதிலிருந்து தமிழர்கள் கடவுட் கொள்கையுடையவர்கள், இறைவழிபாட்டை நோற்றனர் எனக் கொள்ள முடிகின்றது. திருமால் கருமை நிறத்தன். திராவிடர் தெய்வமாக இருந்திருத்தல் வேண்டும் எனக்கொள்வாரும் உளர். ஆரியரின் தெய்வமாக கருமை நிறத்தினையுடைய தெய்வம் இருந்திருக்கமுடியாது என்பது சிலரின் வாதமாகும். "கண்ணா, கருமை நிறக் கண்ணா" என்னும் பாடலில் கருமையின் அழகு வெளிப்படுகின்றது. கம்பன் கூட இராமனின் மேனி அழகினை கருமைநிறத்திலிருந்து சூரியனைவிட பன்மடங்கு ஒளிவீசுவாதாக மிதிலையில் கண்ட இராமனை வர்ணிக்கின்றார். பழமைமிக்க இலக்கியமான தொல்காப்பியத்தில் புறத்திணை பற்றிக் குறிப்பிடுவதில் காமம் பற்றிப் பேசும்போது கடவுளும் என்னும் பதம் பயன்படுத்தப்பட்டுள்ளமை கண்கூடு.

காமப் பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர் (தொல். பொருள். புறத்திணை 81

இவ்வடிகளில் கடவுள் என்னும் சொல்லும் பயன்பாட்டில் இருந்துள்ளமையை எடுத்துக்காட்டுகின்றது. கடவுள் என்பதற்கு எல்லாவற்றையும கடந்தவன் என்ற பொருளை உணர்த்துகின்றது. எல்லாவற்றிற்கும் மேலானவன் இறைவன் என்பதனை பண்டைய தமிழர் கொண்டிருந்தமைக்கு இது தகைசார்ந்த சான்றாக அமைகின்றது.

கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்ந்ததொடு கண்ணி வருமே (பொருள். புறத்திணை 85)

அதாவது தமிழர் இறையில் வழி சமயம் சார்ந்து நின்றனர் எனக்கொள்ளலாம். இதற்கு திருக்குறளையும் சான்றாகக் கொள்ளலாம். திருக்குறளில் பல்வேறு இடங்களிலும் இறைவன் பற்றிய சொல்லாடல் இடம்பெறுவதினைக் காணலாம். இறைவணக்கம் என்ற அதிகாரமே இதற்கு கோடிட்டுக்காட்டுவதனைக் காணலாம்.

அகரமுதல எழுத் தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு - (குறள் 1)

ஆதி பகவனை இறைவனாகக்க காட்டுவதோடு. பிறவிப் பயனை நீங்குதற்கு இறைவனை வழிபடலே முறையானது விடுதலை தரத்தக்கது என்றும் கூறிப்போந்தார்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார் - (குறள் 10) என்னும் குறள் இறைவன் உள்ளான் அவனை வழிபட்டால் எம்மிடர்நீங்கும் பிறப்பெடுத்ததன் பயனைப் பெறலாம் என்கின்றார் எனின் தமிழர்களிடம் சமயம் இருந்ததிலலை என்று வாதிடுவது பொருத்தமா? என்ற கேள்வி எம்முன்னே தோன்றுகின்றது. இதனை விட அந்தணன் என்றும் இறைவனை அழைக்கும் வழக்காறும் வள்ளுவர் காலத்தில் பயின்று வந்துள்ளமையை நாம் காணலாம்.

அறவாழி அந்தணன் தாழ்சேர்தார்க்க கல்லால்
பிறவாழி நீத்தல் அரிது (குறள் - 8)

சிவ வணக்கம் ஒரு காலத்தில் இந்தியா முழவதும் நிலவியதோடன்றி, சீனா, ஜப்பான், இந்துக்கடல் தீவுகள், பசுபிக் கடல் தீவுகள், ஆபிரிக்கா, பாபிலோன் (ஈராக், ஈரான், ஆப்கானிஸ்த்தான்) , கிறீஸ் ஆகிய நாடுகளிலும் நிலவியது என்பது ஆய்வாளர்களின் முடிவாகும். எகிப்தில் பிரமிட்டுக்களின் சுவர்களளிலும், கீறீசில் விசா என்னுமிடத்திலும், அயர்லாந்தில் கிறிஸ்தவ ஆலயங்களிலும், இங்கிலாந்திலும், ஸ்காட்லாந்திலும் கண்டெடுக்கப்பட்ட புதைபொருட்களிலும் சிவலிங்கங்கள் காணப்படடதாகக் கூறப்பட்டுள்ளது.

சிந்து சமவெளியில் சிவலிங்கம் காணப்பட்டுள்ளது. இங்ஙனமே யோக வடிவிலான பல உயிர்களால் சூழப்பட்ட ஆண் தெய்வச் சிலையும் காணப்பட்டது. இங்ஙனம் உலகமெல்லாம் பரவி இருந்த சைவசமயம் தமிழர்க்கே உரியதென்பதாகும். சைவத்தில் இருக்கும் ஆரியக் கலப்பால் சைவம் வடக்கிருந்து வந்தது என்பாரும் உள்ளனர். ஆனால் சைவம் தமிழருடையது. பழந்தமிழர் கொள்கையே சைவசமயம் என மறைமலை அடிகள் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் போன்றோர் கூறியுள்ளனர்.

சைவசமயத்தின் அடிப்படைக்கோட்பாடுகளைச் சைவ சித்தாந்தம் என வழங்கப்படும். சைவத்தையும் சைவ சித்தாந்தத்தையும் பற்றி ஆய்ந்த பல மேனாட்டு அறிஞர்கள் கூறியுள்ள முடிவுகள் சைவத்தின் மேன்மையையும் தொன்மையையும் வன்மையையும் தன்மையையும் காட்டுவதாகும்.

“தென்னிந்தியாவிற்குரிய சைவ சித்ததாந்தம் தமிழர் அறிவுத்திறனால் விளைந்ததாகும். அது

தமிழரின் தத்துவமேயாகும்`` என்றார் ஜான். எச். பியட். “சைவ வழிபாடு இந்தியா முழுவதும் பரவியுள்ள தொன்மை வாய்ந்த தொன்றாகும்'' என்றார் திரு.பாய்.
இதனை சங்க இலக்கியப்ப பாடல்கள் மூலம் அறிய முடிகின்றது

பால்புரை பிறைநுதல் தொலிந்த சென்னி
நீலமணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே. . . (புறம் 91) என்னும் செய்யுள் வரிகளிலும்

நன்றாய்ந்த நீணிமிர்சடை
முது முதல்வன் (புறம் 166) என்னும் செய்யுள் வரிகளிலும் காணமுடிகின்றது.

கலித்தொகை

“சமய உலகில் இந்தியாவிலுள்ள மிகத் தொன்மையான சமய நெறிகளின் வாரிசாகச் சைவ சித்தாந்த முறை அமைந்துள்ளது. அது தமிழரின் சமயமாகும். வேறு அனைத்தும் தமிழர்கட்கு அயன்மை உடையதாகும். பெரும்பான்மையான மக்களால் பின்பற்றப் படுவதாலும். அதன் சில கூறுகளின் பழைமையினாலும். அது பிற எல்லாச் சமயங்கட்கும் மேலானதாகும்,`` என்பார் திரு. டபிள்யூ. கௌடி.

“இந்தியச் சமயங்களில் சைவ சமயம் ஒன்றே கடவுள் தத்துவத்தைத் தெளிவாகவும். திட்ட வட்டமாகவும் கூறுகின்றது. எனவே. இது மிகச் சிறந்த சமயமாகக் கருதப்படுகிறது`` என்கிறார் என். மாக்னிக்கால். மேற்கண்டவை மட்டுமல்ல. மேலும் பலர் கூறியுள்ளனர். இன்னமும் ஆய்வுகள் நடை-பெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஒன்னார்த் தெய்வர் முன்னின்று விலங்கி
ஒளிறு ஏந்து மருப்பின் களிறு எறிந்த வழிந்ததெனக்
கல்லே பரவின் அல்லது
நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே“ - புறநானூறு 335

என்னும் பாடல் சிவலிங்க வழிபாடு தமிழர்களிடம் இருந்துள்ளது என்பதனைக் காட்டுகின்றது. சிவலிங்க வழிபாடு நடுகல் வழிபாட்டின் வாயிலாகத் தோன்றியிருக்கலாம் எனக் கொள்வாரும் உளர். பண்டைத் தமிழர்களிடையே இந்தக் கல்லாக வழிபடப்பட்ட தெய்வங்களிடம் ஏதோ சக்திகள் இருப்பதாகக் கருதியதன் விளைவாகவும் சிவலிங்க வழிபாடு தோன்றியிருத்தல் கூடும் எனவும் சிலர் கருதிக் கொள்கின்றனர். நட்ட கல்லுகள் சிவலிங்க வடிவமாக உள்ளமையையும் தற்செயலாக ஏற்பட்டதெனக் கொள்ளவியலாத தொன்றெனக் காரணம் காட்டுகின்றனர். சிவலிங்கம் மனிதப் பிறவியின் இனப்பெருக்கத்தோடு தொடர்பு படுத்தப் படுகின்றது. சக்தியும் சிவமும் என்பதனைப் பிரதிபலிப்பதே லிங்கமும் ஆவுடையாரும் என்னும் கருத்தினை முன்வைக்கப்படுகின்றது. அதாவது ஆண்குறி லிங்கத்தையும் பெண்குறி ஆவுடையாரையும் குறிப்பிடுகின்றது. ஆண்வடிவம் ருத்திரபாகம். விஷ்ணுபாகம். பிரம்ம பாகம் என முப்பிரிவுகளை உள்ளடக்கியதாகவும் சக்திபாகம் கீழ்ப்பாகத்தில் உள்ள பெண்குறிபோலக் காணப்படும் பாகம் சக்தி பாகம் எனவும் கொள்ளப்படுகின்றது.

ஆனால் சிவலிங்க வழிபாட்டுமுறை மனிதனின் அகத்தேயே உள்ளதாகவும் கொள்ளப்படுகின்றது. உள்ளம் பெருங்கோயிலாகக் கொள்ளும் தத்துவமே சிவதத்தும் எனக் கண்டனர் சித்தர்கள்.

மானுட ராக்கை வடிவு சிவலிங்கம்
மானுட ராக்கை வடிவு சிதம்பரம்
மானுட ராக்கை வடிவு சதாசிவம்
மானுட ராக்கை வடிவு திருக்கூத்தே (திருமந்திரம் 1726).

சைவத்தினது லிங்க வழிபாடு பற்றி ஒருமித்த கருத்தில்லை. எனினும் சிந்துவெளியில்

கிடைத்த சிவலிங்கம் பற்றிய ஆய்வின்படி அது திராவிடர்களுக்கு உரியது என்கிறார்கள் அறிஞர் ஈரசாஇ டாக்டர் சிலேட்டர் ஆகியோர்.
மிகப்பழமை வாய்ந்த சமய நூலாகக்கருதபப்படும் திருமந்திரம் சிவபெருமானையே முழுமுதற் கடவுளாகப் போற்றி ஏற்றுகின்றது.

சிவனொடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை
அவனொடொப் பார்ரிங்கும் யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமைர யானே (திருமந்திரம் 5) என்னும் பாடல் வரிகளை நோக்கும்போது சிவனை முதனிலைப் படுத்துவதனைக் காணமுடிகின்றது. உலகனைத்தையும் கடந்தும் அடிமுடி தேடமுடியாத ஒளிப்பிளம்பானவன் இறைவன் என்பதனை எடுத்துக்கூறுவதன் வழி சிவனின் முதன்மை தெளிய வைக்கப் படுகின்றது. சமய குரவர்கள் எனப்படும் அப்பர், ஆளுடைபிள்ளை, சுந்தரன், மணிவாசகர் ஆகியோர் சிவனையே முழுமுதற் கடவுளாக ஏற்று போற்றிப் பாடி வந்துள்ளனர்.

மெய்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தைவித்திப்
பொய்மையாம் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப்பாய்ச்சித்
தம்மையம் நோக்கிக் கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பாராகில் சிவகதி விளையு மாறே. (திருநாவுக்கரசர் பா.2)

சரியை முதலிய உண்மையான பக்திவழியில் சென்று தொண்டுகளை ஆற்றி, விருப்பம் என்னும் வித்தை விதைத்து, பொய்மை எனப்படும் இடர்பாடுகளாகிய களைகளைக் களைந்து, பொறுமை என்னும் நீரைப் பாய்ச்சி சிவஉருவ வழிபாட்டால் ஆன்ம தரிசனத்தையும், சிவதரிசனத்தால் ஆன்மசித்தியும் பெற்று, தூய்மை நிறைந்த உள்ளம், திருநீறு முதலிய சிவவேடங்கள் முதலிய வேடங்களைத் தாங்கி அவற்றை அரணாகக் கொண்டு சிவதியானத்தில் நிற்பாராகில் சிவகதி தானே வந்தடையும். அந்தப் பயிர் தானே வளர்ந்து பயனைத் தரும்,

இந்த உலகம் உயிரும் சடமும் ஆகக் காட்சியளிக்கிறது. இக்காட்சியின் தோற்றமே படைப்பு ஆகும். ஆனல் உயிர்கள் படைக்கப் படவுமில்லை, அவை அழிக்கப்படவுமில்லை, தோற்றங்களின் வளர்ச்சியும் பரிணாமமானது. அதனை, "புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி" என்று மாணிக்கவாசக சுவாமிகளே சிவ புராணத்தில் பாடியுள்ளார். உயிரற்ற பொருளாகிய இவ்வுலகம் காலத்தின் இறுதியில் நுண் பொருளாய்ப்பின் ஆற்றலாய் மாறி ஒடுங்கிவிடும் என்பது விஞ்ஞானம் கண்ட உண்மை. இதனையே பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய சைவத்தின் தத்துவம் கொண்டுள்ளது என்பது அதன் உண்மைத்துவத்தைக் காட்டி நிற்கின்றது.

இறைவன் தனித்து நிற்கிறான். உயிர்களிடத்தில் அவன் கலந்தும், சடப்பொருள்கள் இடத்தில் விரவியும் உள்ளான். இம் மூன்றையும் இறைவன் ஒன்றாயும், வேறாயும், உடனாயும் உள்ள நிலைகளாகவே சைவம் கொள்கின்றது. சைவ சித்தாந்தம் இதனைப் பசு, பதி, பாசம் என்பதனால் அதன் உண்மையையும் இயல்புகளையும் பல்வேறு தடை வினைகளால் விளக்குவது வியப்பிறந்த செயலாகுமென அறிஞர்கள் கூறுவர்.

இறைவனின் இயல்புகளாகச் சைவ சித்தாந்திகள் கூறுவது சிந்தனைக்கு உரியதாகும். இறைவனே மேலான பொருள், குணமும் குறியும் அவனுக்கு இல்லை. அவன் ஒருவனே ஆவான். இப்படிப் பல. சித்தாந்திகளின் சிந்தனைகள் வியப்பூட்டுவன வாகும். அறிவியல் அறிவோடு இணைந்து செல்கின்றன.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்க் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே (திருமந்திரம் 1823)

சைவ சித்தாந்தம் என்பது தமிழ் நாட்டில் மட்டுமே பெருவழக்காக உள்ளது. காஷ்மீரச் சைவமும், மைசூர் வீரசைவமும் பலவகையில் அதிலிருந்து வேறுபடுகின்றன. சைவ சித்தாந்தக் கொள்கைகளைக் கூறும் மூத்த நூல்கள் யாவும் வடமொழியிலேயே உள்ளன எனச் சிலர் சொல்வர். ஆனால், மறைமலை அடிகள், கா. சுப்பிரமணியபிள்ளை ஆகியோர், "ஆதியில் வேதங்களும் ஆகமங்களும் தமிழிலும் இருந்தன, இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என இன்று வழங்கும் இதே பெயர்களோடு நான்கு வேதங்கள் இருந்தன. அவற்றுள் ஒன்றாகிய சாமவேதம் இராவணனால் பாடப்பட்டது. காலப் போக்கில் தமிழ் வேதாகமங்கள் அழிந்துவிட்டன, வடமொழி வேதாகமங்கள் நிலைத்து விட்டன. அவைகளைத் தமிழரும் தமது பிரமாண நூல்களாகத் தலைப்படடு விட்டனர், வேறு சிலர் தமிழில் மட்டுமே முன்பிருந்த வேத உபநிடதங்களை வடமொழியாளர் தம் மொழியில் பெயர்த்து எழுதிக்கொண்டனர்" என்பர்.

சைவ சித்தாந்தக் கருத்துக்கள் சங்க இலக்கியங்களிலும் இடையிடையே காணப் படுகின்றன. நான்காம் நூற்றாண்டுக்கும் பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தவையாகிய திருமுறைகளும் சைவத்தின் பழமையையும் சிறப்பையும் விளக்குகின்றன.

எனவே தமிழர் சமயம் என்பது சைவம். தமிழரின் பழமை வாய்ந்த கொள்கை கோட்பாடுகளே சைவம், சிவபெருமானே சைவத்தின் முழுமுதற் கடவுள் என்பதனை வரலாற்றால் தெளிந்து, சைவர்களாக, சிவபக்தர்களாகத் தமிழர்கள் விளங்கிட வேண்டும்.

ஆரியக் கடவுளர்களை நாம் வழிபடத்தொடங்க முன்னர் எம் மக்கள் மத்தியிலே நடுகல் வழிபாடு முறை நிலைத்திருந்துள்ளது. வெற்றி பெற்ற நினைவுகளை நடுகல் அறிவுறுத்தி நிற்கின்றது. "யாதும் ஊரே யாவரும் கேளிர், நன்றும் தீதும் பிறர்தர வாரா" என்பது கணியன் பூங்குன்றனாரின் தமிழியல் கருத்தை உலகுக்குப் பறைசாற்றி நிற்கின்றது. தமிழரின் பாரம்பரிய பழக்க வழக்கம் மரபு சார்ந்த ஒன்றாக அதனைக் கொள்ளலாம். தமிழர் சமயம் என்பது தமிழரின் பண்பாட்டோடு ஒட்டிப் பிறந்து வளர்ந்து வந்துள்ளது. குன்று தோறும் இருந்திடும் குமரனை வழிபடும் முறை நிலவி வந்துள்ளது. ஐயன், வன்னியிற் தெய்வம் என இன்றும் போற்றப்படும். சிவன் மிகப் புனிதமானவனாகப் போற்றப்பட்டு வந்துள்ளான். தமிழரின் துன்பத்தைக் களைந்து இன்பமான வாழ்வினைப் பெறுவதற்கு அருள்பாலிப்பவனாகப் போற்றப்பட்டு வந்துள்ளான். தமிழர் மத்தியிலே நிலவி வரும் "ஐயன்" வழிபாடு, இன்று எம்மவர் பின்பற்றும் கேரள மாநிலத்து "ஐயப்பன்" வழிபாட்டை ஒத்ததல்ல. ஐயனார் கோயில் என்பது சிவவழிபாட்டைக் குறித்து நிற்கின்றது. சிவனை முழுமுதற்கடவுளாக வழிபடும் முறையைக் கொண்டது சைவம்.

வெற்றிக் களிப்பைக் கொண்டாடும் முகமாக உயிர்ப்பலி கொடுக்கப்படும் முறை தமிழர்களிடையே பின்னர் மருவி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆடு போன்ற விலங்குகளை கொன்று அதன் இறைச்சியைப் படைத்து உண்டு கழிக்கும் முறை பிற்காலத்தில் வேள்வியாக மாறியுள்ளது. தீபாவளித் தினத்தில் மாமிசம் உண்டு கழித்தல் திராவிட மக்களிடம் காணப்படும் ஒரு வழக்கமாக உள்ளது. இது அவர்களின் பாரம்பரியத்தோடு எப்படி ஒட்டிக்கொண்டது என்பது கேள்விக் குறியே. சிந்துவெளி நாகரிகம் தரும் சான்றுகள் சிவலிங்க வழிபாட்டுமுறை, மாடுகளின் உபயோகம் என்பனவும் பெண் தெய்வ வழிபாட்டிற்கான சான்றுகளும் இடம்பெற்றுள்ளன எனக் கொள்ளக் கிடக்கின்றது. ஆனால் சிவலிங்க வழிபாடு நடுகல் வழிபாட்டு முறைமையை அடிப்படையாகக் கொண்டதாக அமைந்திருத்தல் கூடும். சிவ லிங்கம் மனித உருவமற்ற வழிபாட்டு முறையினைக் குறித்து நிற்கின்றது. சிவனை அருவமும் உருவமும் ஆனாய் போற்றி என மணிவாசகர் பாடுமாற்றல் அதனை உணர்ந்து கொள்ளலாம். உருவமற்றவன் இறைவன் என்பதும் அவன் சோதி வடிவினன் என்பதும் முன்வைக்கப்படுகின்றது. இஸ்லாமியர் கடவுளை யாரும் காணமுடியாது, அவனுக்கு உருவம் கிடைக்காது என்னும் கருத்தினைக் கொண்டுள்ளனர். இறைவனைக் கண்டவரும் இல்லை விண்டவரும் இல்லை என்கின்றது சைவம். மனிதனுள்

சிவத்தைக் காண்கின்றது சைவம். திருமூலர் இதனை மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றார்.

சிவன்முதல் மூவரோ டைவர் சிறந்த
அவைமுதல் ஆறிரண் டொன்றொடொன் றாகும்
அவைமுதல் விந்துவும் நாதமும் ஓங்கச்
சவைமுதற் சங்கரன் தன்பெயர் தானே. (திருமந்திரம் 77)

யான் சிவனை இச்சக்கரத்தின் வழியே கண்டு உயர்வு பெற்றேன் அதனால், பின்பு அவனை நான் எனது உள்ளத் தாமரையிலே அடங்கிக் கொண்டு மேலும் உயர்வு பெற்றேன் ஆகவே, இனித் தன் இயல்பு கெடாத பதிஞானத்தின் வழியே சென்று அழியாத அன்புடன் திருவைந்தெழுத்தைச் செபிக்கும் பேற்றினைப் பெறுதல் திண்ணம். என்னும் கருத்தினைக் கொண்டதாகத் திருமூலர் வழி சைவத்தைத் தமிழ்ர்கள் போற்றி வருகின்றனர். தமிழர்கள் சமயம் சைவமாகவே காணப்பட்டுள்ளது என்பது தமிழையும் சமயத்தையும் ஆய்தறிந்த சான்றோர் கருத்தாக உள்ளது.

எட்டு வரையின்மேல் எட்டு வரைகீறி
யிட்ட நடுவுள் இறைவன் எழுத்தொன்றில்
வட்டத்தி லேஅறை நாற்பத்தெட் டும்இட்டுச்
சிட்டஞ் செழுத்தும் செபிசீக் கிரமே.

செங்குத்தாக எட்டு நேர்க்கோடு கிழித்து அவற்றின் மேல் குறுக்காக எட்டுக் கோடுகளை இழுக்க நாற்பத்தொன்பது அறைகள் உண்டாகும் அவற்றுள் நடு அறையில் இறைவன் எழுத் தாகிய சிகாரம் அமையுமாறு மேல் (906) மேற்கூறியபடி திருவைந்தெழுத்தை ஐந்து வகையாக மாற்றி முறையே இருபத்தைந்து அறைகளில் பொறித்தபின் நடு அறையொழிந்த நாற்பத்தெட்டு அறைகளிலும் எழுத்துக்கள் இருக்கச்செய்ய வேண்டும் அஃதாவது எஞ்சிய இருபத்து நான்கு அறைகளிலும் பிற எழுத்துக்களைப் பொறிக்க வேண்டும். அவ்வாறு செய்தவுடன் சக்கரத்தை வழிபட்டுத் திருவைந்தெழுத்தைச் செபிக்கத் தொடங்கலாம். இது, "ஆகருடணம்" என்னும் வித்தை கூறுகின்றது. உயிர்ப் பொருளாயினும், உயிரல் பொருளாயினும் தொலைவில் உள்ளவற்றைத் தான் இருந்த இடத்தில் இருந்தே வரவழைத்தல் "ஆகருடணம்" என்னும் வித்தையாம். இதற்குப் பலகை வெண்ணாவல் மரப்பலகை. மந்திரம் மேற்கூறிய ஐந்தெழுத்து மாறலில் யகராம் முதலாக அமைவது யகாரம் முதலாக உள்ளது முதல் ஐந்து தொடர்களையும் முறையே ஐந்து வரிசை அறைகளில் பொறித்து, ஓலையிலும் அவ்வாறே எழுதி, அதன்மேல் யாதேனும் ஒரு வெண்பூச்சினைப் பூசி வியாழக் கிழமையில் மேற் சொன்ன பலகை மேல்வைத்து வழிபட்டு அன்று முதலாக மேற்கு நோக்கி அமர்ந்து அம் மந்திரங்களை அசபாமந்திரத்தோடே எண் ஆயிர உரு விரும்பிச் செபித்தால், "ஆகருடணம்" என்னும் வித்தை கைவரும்.

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொள்ளும் சமயமே சைவம் ஆகும். இதனை வரையறைப் படுத்துவதற்காக முன்வைக்கப்பட்டதே "சைவ சித்தாந்தம்" என்னும் தத்துவப் பிரிவு என்பர். சித்தாந்தம் என்பது சிந்தித்துக் கண்டறிந்த முடிந்த முடிவு எனப்படுகின்றது. "வேதாந்தம் என்னும் மரத்தில் காய்த்துப் பழுத்த கனி" என்கிறார் குமர குருபர். இதனை ஜீ.யு.போப் அவர்களும் திராவிட அறிவின் சிறந்த வெளிப்பாடு" என்கின்றார். சைவ சித்தாந்தம் வேதங்களையும் ஆகமங்களையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. சைவ சித்தாந்தத்தை விளக்கும் நூல்களில் சிவஞானபோதம் முதன்மை பெறுகின்றது. மெய்கண்ட சாத்திரங்கள் என வழங்கப்படும் 14 நூல்கள் சைவ சித்தாந்தத்தை விளக்குவன ஆகும். இவை இறைவனை அடையும் மார்க்கத்தைக் குறிப்பனவாகவே அமைந்துள்ளன. இறைவன், உயிர், மலங்கள் என்பனபற்றிய விளக்கத் தெளிவ-ினை சைவசித்தாந்தம் உணர்த்துகின்றது.

ஞானமே வடிவாகிய முருகப்பெருமான் அருணகிரிநாதர் சுவாமிகளுக்கு அருள்புரிந்த திருத்தலம் வயலூர்

"ஞானமலது கதி கூடுமோ" என்கிறார் தாயுமானவர். ஞானம் ஒன்று தான் முத்திக்கு ஏதுவாகும். சரியை, கிரியை, யோகம் என்பவை ஞானத்தை விளைவிக்கின்றன.

இத்தகைய ஞானம் விளையும் திருத்தலம் வயலூர் என்ற புனித திருத்தலமாகும். ஞானமே வடிவாகிய முருகப் பெருமான் இங்கு கோயில் கொண்டு, அருணகிரிநாதருக்கு மயில் மிசை காட்சி கொடுத்து திருப்புகழ் பாடும் அதியற்புதமான ஆற்றலை அருள்புரிந்தார். ஞானவரோதயர் என்ற ஒரு சிறந்த அடியார்க்கு அருள் புரிந்த திருத்தலம் வயலூர் ஆகும். ஞானவரோதையர் கந்தபுராணத்தில் ஏழாவது காண்டமாகிய உபதேசகாண்டம் பாடியவர்.

தமிழ் நாட்டில், திருச்சி மாவட்டத்தில் வயலூர் ஓர் அழகிய சிறிய கிராமம். பெயருக்கேற்றாற்போல் வயல்களும், வாழை மற்றும் தென்னந்தோப்புகளும் சூழ பசுமையான மன மகிழ்ச்சி தரும் சூழ்நிலையில் இத்திருத்தலம் விளங்குகிறது. வயலூர் திருக்கோயிலின் தல விருட்சம் வன்னி மரம். இது ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான மரம். குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருப்பான். குறிஞ்சி நிலக் கடவுளான முருகப் பெருமான் மருத நிலமான வயலூர்ப் பகுதியில் கோயில் கொண்டிருப்பது இதன் தனிச் சிறப்பாகும்.

இத்திருத்தலம் வயலூர், அதிகுமார வயலூர், அக்னீசுவரம் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. இங்கு கந்தவேல் வேலினால் ஒரு திருக் குளத்தை உண்டாக்கி, சிவபெருமானை வழிபட்டார். இத் தீர்த்தம் சக்தி தீர்த்தம் எனப்படும். அக்னி தேவனும் வழிபட்டதால் அக்னீஸ்வரர் என்பது சுவாமியின் பெயர். ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரும் ஜோதியை அக்னி வடிவாகப் போற்றி ஆலயம் அமைத்து, அரசர்களும் நம்முன்னோர்களும் வழிபட்டு வந்திருந்தார்கள்.

சித்தத்தைச் சிவன்பாலே வைத்துச் சித்தர்கள் தேடிவந்து கூடிய இடம் வயலூர். திருக் கோயிலைச் சார்ந்த தோப்புக்குச் சித்தத்தூர் தோப்பு என்று இன்றும் பெயர் வழங்கி வருகின்றது.

சைவத்திற்கு நால்வர் தேவாரப் பாடல்களைப் பாடினார்கள். வைணவத்திற்குப் பன்னிரு ஆழ்வார்கள் மங்கள சாசனம் செய்தார்கள். கவுமாரத்திற்கு தான் தனித்து நின்று செய்த தூயபணி, மாபெரும் அருளாளர் அருணகிரிநாத சுவாமிகள்.

தமிழ் கல்லாதவர்களும், மொழி அறியாதவர்களும், அதன் ஓசை நயத்தாலே உள்ளம் கசிந்து, உணர்வு பெற்று சிந்தை குளிர, செவிகுளிர கேட்டு மகிழும் சிறப்புடையது அருணகிரிநாதர் சுவாமி தந்த திருப்புகழ். இத்தகைய ஈடு இணையற்ற திருப்புகழ் பாடல் பெற இறைவன் அருள்பாலித்த இடம் வயலூர்த் திருத்தலம்! இதனை, "சும்மா இரு சொல்லற" என்று முருகப் பெருமான் முன்னின்று மொழிய, தீது நீங்கிய திருமேனியின் சித்தத்தைச் சேவற் கொடியோன் திருப்பாதக் கமலத்தில் பதித்துத் தன்னை வென்று, மறந்து, ஆனந்த பரவசராக அருணகிரிநாதர் நின்ற போது, அருணகிரி! "நாடு அறிய நம் புகழ் நீ பாடு" என்று முருகப் பெருமான் பணித்தார். முத்திக்கொரு வித்துக் குருபரன், வயலூர் வடிவேலன் நெஞ்சில் அமர, ஆயிரமாயிரமாக அருணகிரியார் வாயிலிருந்து அற்புதத் திருப்புகழ் பெருக்கெடுத்தது!

அருணகிரிநாத சுவாமிகள் பாடிய திருப்புகழ் பாடல் எத்தனையோ! வயலூர் பற்றிய திருப்புகழ் பாடல் எத்தனையோ யாம் அறியோம். இன்று கிடைத்திருப்பது 18

பாடல்கள் தான். அருணகிரிநாதர் பல நாட்கள் தங்கி, முருகப் பெருமான் சந்நிதியில் நின்று கனிந்து, கனிந்து பாடிப் பரவசம் அடைந்த இடம் வயலூர்த் திருக்கோயில். திருப்புகழ் என்னும் செந்தமிழ் தேன் அமிர்தத்தை உலகிற்குத் தந்தது வயலூர்த் திருக்கோயிலேயாகும்.

அருணகிரிநாதர் சுவாமிகளின் புனித பாதம் பட்ட இடம் வயலூர் திருக்கோயில். திருப்புகழ் உள்ளவரை அருணகிரிநாதர் புகழும், வயலூர்ப் புகழும் நின்று நிலைக்கும்.

“வயலி நகரில் அருள் பெற மயில்மிசை
உதவு பரிமள மதுகர வெகுவித
வனச மலரடி கனவிலு நனவிலு மறவேனே.”

- அருணகிரிநாதர் சுவாமிகள்

ஓம் முருகா சரணம்!

சிவதொண்டன்,
திரு. தில்லையம்பலம் சிவயோகபதி,
உலக சைவப் பேரவை - கனடா

நாங்கள் நடந்து போகும் பாதையில் சாணம் அல்லது நீர் தேங்கி நின்றால் அதனை விலத்தியே நடக்கின்றோம். அது போல தேவையற்றனவற்றை அகற்றி விட்டு நல்லனவற்றை கைக்கொள்ளல் வேண்டும்.

எமது அக விழிப்பின் மூலம் சந்தோஷத்தைத் தேடிக் கொள்ள வேண்டும் என்பதே இறைவன்பால் எமது வழிபாடு இருக்க வேண்டுமே ஒழிய மேலும் சேகரிக்க வேண்டும் என்ற அவாவினால் ஆல்ல

நாங்கள் கடவுளை வணங்கும் போது அண்ணாந்த மேலே பார்த்து வணங்குகிறோம். ஆனால் கரமாவை ஆற்றத் தொடங்கும் போது கீழே பூமியைத்தான் பார்க்கிறோம். ஏனெனில் கர்மா ஆற்ற வேண்டியது பூமியில் தான்.

ஆகம வழிபாட்டு முறைகள்

மண்ணுலகில் வாழும் ஆன்மாக்களை நல்வழிப்படுத்தி மேலான நிலையை அடையச் செய்வது வழிபாடாகும். நல்வழிகள் வாழ்வின் உயர்ந்த இடத்திற்குக் கொண்டு சேர்க்கின்றன. அவ்வாறான நல்வழிகளையும் சைவவழிபாட்டு முறைகளையும் நெறிப்படுத்தச் சிறந்த இடம் ஆலயமாகும். ஆலய அமைப்பையும் வழிபாட்டு முறைகளையும் இருபத்தெட்டு ஆகமங்கள் கூற அதன் விளக்க முறைகளைப் பன்னிரண்டு சைவத்திருமுறைகள் எடுத்துரைக்க அவையிரண்டும் ஆலயங்களில் இன்றியமையாததாகிறது. ஆகமங்களுக்கும் திருமுறைகளுக்கும் உள்ள தொடர்பு மிக நெருக்கமானது.

ஆகமங்கள் இறைவனால் அருளப்பட்டது எனும் பெருமையைத் தெளிவாக விளக்கும் நூல்களுள் திருமுறைகளே முதலிடத்தைப் பெறுகின்றன. இறைவனே உமையம்மைக்குக் குருவாக இருந்து உபதேசம் செய்த வரலாறு திருமுறைகளில் பேசப்படுகிறது.

"மன்னு மாமலை மகேந்திர மதனில் சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்" எனவும்

"பாவேட்டாகிய ஆகமம் வாங்கியும் மற்றவை தம்மை மகேந்திரத்திருந்து உற்ற ஐம்முகங்களால் பணித்தருளியும்" என மாணிக்கவாசகர் குறிப்பிடுகிறார்.

"மகேந்திரப் பொன் மலையால் மலைமகளுக்கு அருளும் குரு நீ" எனத் திருவிசைப்பாவில் திருமாளிகைத் தேவர் குறிப்பிடுகிறார்.

பெரியபுராண ஆசிரியர் சேக்கிழார் பின்வருமாறு கூறுகிறார்.

"நங்கை உள் நிறை காதலை நோக்கி நாயகன் திருஉள்ளத்தில் மகிழ்ந்தே அங்கண் எய்திய முறுவலுந் தோன்ற" அடுத்த தென்கொல் நின் பால்"எனவினவ, "இங்கு நாத! நீ மொழிந்த ஆகமத்தின் இயல்பினால் உனை அர்ச்சனை புரியப், பொங்குகின்ற தென் ஆசை"என்றிறைஞ்சிப் போக மார்த்த பூண்முலையினாள் போற்ற" எனவும்

"எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம்விரும்பும்
உண்மையாவது பூசனை என உரைத்தருள
அண்ணலார் தமை அர்ச்சனை புரிய ஆதரித்தாள்
பெண்ணில் நல்ல வளாயின் பெருந்தவக் கொழுந்து"
(திருக்குறிப்புத் தொண்டர் புராணம்)

இவ்வாறு இறைவியே சிவனைப் பூசனை செய்த சிறப்புக் கூறப்படுகின்றது.

இறைவனே ஆகமமாகியும் அதனை மொழிபவனாகவும் இருக்கிறான் என்பதைத் திருமுறைகள் தெளிவாகத் தெரியப்படுத்துகின்றது.

"ஆகமச் செல்வனார்" - சம்பந்தர் (திருவொற்றியூர்ப் பதிகம்)
"அண்டர் தமக்காக ஆகமநூல் மொழியும் ஆதி" - சுந்தரர்
"ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க." - மணிவாசகர்
"எண்ணில் ஆகமம் இயம்பினான் ஈசன்." - திருமந்திரம்
"பூக்கையாலாட்டிப் போற்றியென்னாத
இவ் ஆக்கையால் பயனெனே." - அப்பர்
"விண்டமாமலர் கொண்டு விரைந்து நீர்
அண்ட நாயகன் தன்னடி சூழ்மின்கள்
பண்டுநீர் செய்த பாவம் பறந்திடும்
வண்டு சேர்மொழில் வான் மியூரீசனே." - அப்பர்

ஆலய வழிபாட்டிலே அபிஷேகம் மற்றும் தீபாராதனை மிக மிக முக்கியமானதொன்றாகும். ஒரு நிறைவான பூசையால் அபிஷேகமும் தீபாராதனைகளும் நிறைந்திருப்பதே சிவாகம வழிபாட்டு முறை. அபிஷேகத்திற்குப் பெரும்பாலும் பசுவினால் உண்டாகும் பால், தயிர், நெய் என்பன முக்கியமாகக் கருதப்படும். திருமுறைகளில் இதன் சிறப்பு பலவாறு பேசப்படுகின்றது.

"பாலினால் நறு நெய்யாய் பழத்தினாற் பயின்றாட்டி" - சம்பந்தர்
"ஆடினாய் நறுநெய்யொடு பால் தயிர்
அந்தணர் பிரியாத சிற்றம்பல நாடினாய்
மறையோடும் பல்கீதமும்
பல் சடைப்பணிகால்கதிர் வெண்டிங்கள்." - சம்பந்தர்
"ஆவாகி ஆவினிலைந்துமாகி" - அப்பர்
"செய்ய மேனியன் தேனொடு பால், தயிர்
நெய்ய தாடிய நீலக் குடியான்" - அப்பர்
"பாவமும் பழிப்பற்றற வேண்டுவீர்
ஆவின் ஐஞ்சுகந்தாகும் வன்கழல்" - அப்பர்
"ஆவின் மேவியஐந்து அமர்ந்தாடுவான்
தூவெண் ணீறு துதைந்த செம்மேனியான்
மேவ னூல்விரி வெண்ணியின் தென்கரைப்
பூவ னூர்புகு வார்வினை போகுமே." - அப்பர்

ஆலயங்களில் தீபாராதனை வழிபாடு முக்கியமாகக் கருதப்படுகிறது. நாயன்மார்கள் சோதியாக இறைவனைக் கருதி வழிபட்ட முறைகளைப் பாடல்கள் மூலமாக அறிய முடிகிறது.

"சோதியே சுடரே சூழ் ஒளிவிளக்கே" - மணிவாசகர்
"ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதியை"- மணிவாசகர்
"தேச விளக்கெலாமானாய் நீயே" - அப்பர்
"ஒளி வளர் விளக்கே" - திருவிசைப்பா
"கற்பனைக் கடந்தசோதி" - பெரியபுராணம்

ஆலய வழிபாட்டு முறைகளில் அக்னி வழிபாடு சிறப்பானதொரு இடத்தைப் பிடிக்கின்றது. இறைவனை யாக வழிபாட்டின் மூலமாக ஆன்மாக்களின் துன்பம் அகற்றப்படும் என்பது சம்பந்தர் வாக்கு.

"கற்றாங் கெரியோம்பிக் கலியைவாராமே" - சம்பந்தர்
"புந்தியினான் மறைவழியே புற்பரப்பி நெய்சமித்தை கையில் கொண்டு"
வேந்தழலின் வேட்டுலகின்மிக அவிப்போர் வேரும் மிழலையாமே." - சம்பந்தர்
"வேதியர் வேள்வி ஒழியாது மறைநாளும்
ஓதி அரன் நாமம் உணர்த்திடும் நள்ளாரே." - சம்பந்தர்
"பூமென் கோதை உமையோடுபாகனை
ஓமம் செய்தும் உணர்மின்கண் உள்ளத்தால்" - அப்பர்
"அந்தணர் வேள்வியும் அருமறைத்துழனியும்
செந்தமிழக்கீதமும் சீரினால் வளர்தர" - சம்பந்தர்
"வட்டக்குண்டத்தில் உரிவளர்த்து ஓம்பி மறை பயில்வார்"- சுந்தரர் (7, 18, 2)
"நாத்திறன் மறையோர்ந்து ஓமகுண்டத் துநறுநெய்யால் மறையவர் வளர்த்த
தீத்திறள் அருள்பும் பெரும் பற்றுப புலியூர் - திருவிசைப்பா

சைவத்திருக்கோயில் வழிபாட்டில் முதலில் நம்மைத் தூய்மைப் படுத்தி இறைவனைத் தூய்மையாக வழிபடவேண்டும் என்பது நமது பாரம்பரிய முறை. அதனை ஆகமங்கள் நன்கு வலியுறுத்துகின்றன. நம்மைச் சிவனாகப் பாவனை செய்து நமக்குள் இருக்கும் ஆன்மாவை பரமாத்மா என உணர்வதற்காகவே உடலையும் உள்ளத்தையும் தூய்மையடையச் செய்கிறோம்.

திருநாவுக்கரசர், "காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி லிங்கமாக," எனவும்,

திருமூலர், "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்" - திருமந்திரத்தில் எனவும் குறப்பிட்டுள்ளனர்.

ஆலய வழிபாட்டிலே விபூதி, பஞ்சாட்சரம், உருத்திராக்கம், சிவ நந்தி வழிபாடுகள் முதன்மைப் படுத்தப்பட்டுள்ளன. ஒருவரது ஆன்ம ஈடேற்றத்துக்கு அவை மிகவும் முக்கியமான-தாகக் கருதப்படுகின்றது. சைவ நாயன்மார்கள் அவற்றைப் பெருமைப்படுத்திக் கூறிப் பெருமை கொள்கின்றனர்.

"பூசஇனியது நீறு" - சம்பந்தர்
"பூசுவதும் வெண்ணீறு" - மாணிக்கவாசகர்
"வேதம் நான்கினும் மெய்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே" - சம்பந்தர்
"நற்றுணையாவது நமச்சிவாயவே" - அப்பர்
"திருநீறும் ஐந்தெழுத்தும் செப்பாராகில்" - அப்பர்
"நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே" - சுந்தரர்
"நமச்சிவாய வாழ்க" - மணிவாசகர்
"கங்காளன் பூசும் கவசத் திருநீறு" - திருமந்திரம்

இவ்வாறு பல இடங்களில் திருநீறு, திருவைந்தெழுத்தின் பெருமைகளைக் கூறும் திருமுறைகள் சிவலிங்க வழிபாட்டையும் சிறப்பாகப் பேசுகிறது.

பெரியபுராண ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள் "காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய், நீணாகம் அணிந்தார்க்கு நிகழ் குறியாம் சிவலிங்கம்" (சாக்கியநாயனார் புராணம்)

"மலர்ந்த அயன்மால் உருத்திரன் ஈசன்
பலந்தரும் ஐம்முகன் பரவிந்து நாதம்
நலந்தரும் சக்தி சிவன் வடிவாகிப்
பலந்தரு லிங்கம் பராநந்தியாமே." - திருமந்திரம் தந்திரம் 07

மேலும் லிங்க வழிபாட்டில் ஆன்மார்த்தமாக வழிபாடு செய்வதற்கு இலகுவாகக் கிடைக்கக் கூடிய பொருட்களைச் சிவலிங்கமாகக் கொள்ளலாம் எனவும் திருமூலர் குறிப்பிடுகிறார்.

"துன்னும் தயிர், நெய், பால், துய்யமெழுகுடன்
கன்றியசெம்பு, கனல், இரதம், சந்தம்
வன்றிறல் செங்கல், வடிவுடை வில்வம், பொன்
தென் திருக் கொன்றைதெளி சிவலிங்கமே."

இறைவன் பஞ்சபூதங்கள் எனப்படும் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாசம் என்னும் ஐந்துடனும் தொடர்பு கொண்டுள்ளான் என்பதை ஆகம வழிபாட்டு நெறிகளில் காணலாம்.

இறைவனைப் பஞ்ச பூதங்களோடு தொடர்புபடுத்துகிறார் அப்பர் சுவாமிகள்.
"இருநிலனாய் தீயாகி நீருமாகி இயமானனாய் எரியும் காற்றுமாகி" - அப்பர்
"நிலம்நீர் நெருப்புயிர் நீர் விசும்பு நிலாப்பகலோன் புலனாயமைந்தனொடு எண்புணர்ந்து

நின்றானே" என்றும், "வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி" என்றும் கூறுகிறார் மணிவாசகர்.

இறைவனை வழிபடுவதற்கு பூவும் நீரும் சிறப்பானதாகும்.
"கற்றுக் கொள்வனவாயுள, இட்டுக் கொள்வன பூவுள நீருள" - அப்பர்
"சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்" - அப்பர்

இறைவனை நாளும் துதித்து வழிபாடு செய்யும் இறைநாமங்களின் சிறப்பைச் சைவத் திருமுறைகளில் காணலாம்.

"பூ நாளும் தலைசுமப்ப புகழ் நாமம் செவி கேட்ட
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே." - சம்பந்தர்

"பூவ னூர்ப்புனி தன்திரு நாமந்தான்
நாவில் நூறுநூ றாயிர நண்ணினார்
பாவ மாயின பாறிப் பறையவே
தேவர் கோவினுஞ் செல்வர்க ளாவரே." - அப்பர்

"ஒருநாமம் ஒருஉருவம் ஒன்றுமில்லாற் காயிரம்
திருநாமம் பாடி நாம் தெள்ளேணங் கொட்டாமோ." - திருவாசகம்

எனவே இவ்வாறு ஆகம வழிபாடுகளில் காணப்படும் இன்னோரன்ன சிறப்பான விடயங்களை எல்லாம் சைவத்திருமுறைகள் எமக்குச் சிறப்பாகவும், தெளிவாகவும் எடுத்துக் காட்டியுள்ளது. ஆதலால் தான் இன்றும் ஆலய ஆகமக் கிரியை வழிபாட்டு முறைகளையும் திருமுறைகள் ஓதும் நெறிகளையும் பிரிக்க முடியாத ஒன்றாகத் திகழ்கிறது எனலாம்.

சிவஸ்ரீ ஸ்ரீநிவாச குகனேஸ்வரக் குருக்கள்
கனடா, சாரதாபீடம்

பெற்றோரை கனம் பண்ணவும்.
முதியோரை பராமரியுங்கள்.
குருவை எப்போதும் வணங்கவும், பணிவுடன் இருக்கவும் .
கடவுளுக்கு நிவேதிது உண்ணவும்.
தினமும் ஒரு நல்ல சேவையைச்செய்யவும்.
வாழ்க்கையில் தியாக மனப்பான்மையை வளருங்கள்.

பட்டணத்தடிகள் வாழ்க்கைத் தத்துவம்

நா. க. சிவராமலிங்கம்

தெய்வத் திருநாடாம் செந்தமிழ் நாட்டில் நாயன்மார்களும், ஆழ்வார்களும், சித்தர்களும், முனிவர்களும், ஞானிகளும் சிறப்புற்றிருந்தனர். பாடும்பணியே பணியாகக் கொண்டு கூடும் அன்பினால் ஆடும் பெருமானின் அருளை நினைத்து வீடுபெற்ற அருளாளர்கள் மலிந்த நாடு அது. அத்தகைய அருளாளர்கள் அருளிய ஆயிரம், ஆயிரம் பாசுரங்கள் இன்றும் நிலைத்து நிலவி வருவது அவர்களது மாட்சியை உணர்த்துவதாகும்.

அன்னை எத்தனை எத்தனை அன்னையோ
அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ
பின்னை எத்தனை எத்தனை பெண்டிரோ
பிள்ளை எத்தனை எத்தனை பிள்ளையோ
முன்னை எத்தனை எத்தனை சென்மமோ
மூடன் ஆம் அடியேனும் உணர்ந்திலேன்
இன்னும் எத்தனை எத்தனை சென்மமோ
என் செய்வேன் கச்சி ஏகம்பனே

புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி என்ற சங்கிலித் தொடரான பிறவித் தொடரில் பங்கப்படும் உயிர் பிறவி வேரற திங்கள் சூடிய பெருமானை தியானிக்க வேண்டுமென்கிறார்.
கள்வன் என்று கருதி, காவலன் கழுவேற்ற முனைந்தது முன்செய்த தீவினையின் மொத்தப்பயன் என்ற முடிவிற்கு வருகின்றார் பட்டணத்தார்.

என் செயல் ஆவது யாது ஒன்றும்
    இல்லை இனித் தெய்வமே
உன் செயலே என்று உணரப்
    பெற்றேன் இந்த ஊன் எடுத்த
பின் செய்த தீவினை யாதும் ஒன்றும்
    இல்லை பிறப்பதற்கு
முன் செய்த தீவினையோ இங்ஙனே
    வந்து மூண்டதுவே

நடப்பது எல்லாம் தலையெழுத்தேயாகும். விதி வலிது. அதை மாற்றுவது என்பது முடியாத காரியமாகும். விதியை மதியால் வெல்லலாம் என்று கூறப்பட்டாலும் முடிவில் விதி தனது கோர விளையாட்டைக் காட்டிவிடுகின்றது.

அழுதால் பயன் என்ன நொந்தால்
    பயன் என்ன ஆவது இல்லை
தொழுதால் பயன் என்ன நின்னை
    ஒருவர் சுட உரைத்த
பழுதால் பயன் என்ன நன்மையும்
    தீமையும் பங்கயத் தோன்
எழுதாப்படி வருமோ சலி
    யாதிரு என் ஏழை நெஞ்சே

இல்லறம் நல்லறம் எனினும் அது பல்வேறு பிரச்சனைகளை ஏற்படுத்தி மனிதனை அல்லலுக்கு உட்படுத்துகின்றது என்பதே அடிகளாரின் கருத்தாகும்.

நாப்பிளக்க பொய் உரைத்து நவநிதியம் தேடி

நலன் ஒன்றும் அறியாத நாரியரைக் கூடி
பூப்பிளக்க வருகின்ற புற்றீசல் போலப்
புலபுல எனக் கலகல எனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகை அறியீர், கைவிடவும் மாட்டீர்
கவர் பிளந்த மரத் துளையில் கால் நுழைத்துக் கொண்டே
ஆப்பதனை அசைத்து விட்ட குரங்கதினைப் போல
அகப்பட்டீர் கிடந்துழல அகப்பட்டீரே!

தாய்மையின் தயவையும், தண்ணளியையும் தியாகத்தையும், சேவையையும், சீலத்தையும் பின்வருமாறு பாடுகின்றார் பட்டணத்தார். தலைப்பிள்ளை ஆணாய் இருந்தால் வாழ்வில் தன்னை நிலை பெறச் செய்து மலை விளக்காய் ஒளி பகர்ந்து நிலையாய் நிற்கும் பெருமை அடைவான் என்று தாயுள்ளம் கனாக் காண்கின்றது.

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்று
பையல் என்ற போதே பரிந்து எடுத்து செய்ய இரு
கைத் தலத்தில் ஏந்தி கனக முலை தந்தாளை
எப்பிறப்பில் காண் பேன் இனி

வீடுவரை உறவு, வீதி வரை மனைவி, காடுவரை பிள்ளை கடைசிவரை ஒருவருமில்லை என்று பின்வரும் பாடல் குறிப்பிடுகின்றது. உயிர் உடலை விட்டு பிரிந்து செல்லும் தனி வழிக்கு துணையாவார் எவருமில்லை.

கட்டி அணைத்திடும் பெண்டிரும்
மக்களும் காலத் தச்சன்
வெட்டி முறிக்கும் மரம் போல்
சரீரத்தை வீழ்த்தி விட்டால்
கொட்டி முழக்கி அழுவார்
மயானம் குறுகி அப்பால்
எட்டி அடி வைப்பரோ இறைவா
கச்சி ஏகம்பனே!

ஆடி அடங்கும் வாழ்வில் கூடி மகிழ்ந்து குதூகலிப்பதையே அதிகமானோர் நாடி நிற்கின்றனரேயன்றி இறைபரம் பொருளைத் தேடி உய்தி பெறவேண்டும் என்று சிந்திப்போர் இல்லையே என்று ஆதங்கப்படுகின்றார் பட்டிணத்தார்.

ஐயும் தொடர்ந்து விழியும் சொருகி அறிவு அழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போது வேண்டுவன்யான்
செய்யும் திருவொற்றி ஊர் உடையீர் திரு நீறும் இட்டுக்
கையும் தொழப்பண்ணி ஐந்தெழுத்து ஓதவும் கற்பியுமே

மனிதப்பிறவி மகத்தானது. மாண்புடையது. எனவே தனித்துவமுடைய அப்பிறவியை பெற்ற நாம் நனி சிறந்து வாழ்வதற்கு குனித்த புருவமுடையானைக் கூடுவதே குறிக்கோள் என்கின்றார்.

பிறந்து மண் மீதில் பிணியே
குடிகொண்டு பேரின்பத்தை
மறந்து சிற்றின்பத்தின் மேல் மய
லாகிப் பின் மாதருக்குள்
பறந்து உழன்றே தடுமாறிப் பொன்
தேடி அப்பாவையர்க் கீந்து
இறந்திடவோ பணித்தாய் இறைவா
கச்சி ஏகம்பனே!

சைவமும் தமிழும்

குரு அரவிந்தன்

சைவ சமயம் என்பது சிவபெருமானை முழுமுதற்கடவுளாக வணங்கும் சமயமாகும். சிவனை வழிபாட்டால் அதைச் சிவநெறி என்றும் சைவநெறி என்றும் கூறலாம். சைவசமயத்தினை சுருக்கமாக சைவம் என்று அழைக்கின்றார்கள். இம்மதத்தினை சிவமதம் என்றும் சிலர் குறிப்பிடுவர். பக்தி இலக்கிய காலத்தில் சைவம் தமிழுக்கு பெரும் சேவை செய்து சைவத்தமிழ் என்று பெயர் கொண்டது. அதேபோல தமிழ் மொழியும் சைவசமய வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றியிருக்கின்றது. இதனால்தான் சைவமும் தமிழும் ஒன்று என்றனர். தமிழ் மொழி மீதும் சைவசமயத்தின் மீதும் அதிக பக்தி கொண்டவர்கள் சைவமும் தமிழும் தங்கள் இரு கண்கள் என்று சொல்வதுமுண்டு. பிறமதங்களின் ஆதிக்கம் தென்னிந்தியாவையும், இலங்கையையும் பாதித்தபோது, சைவசமயம் அழிக்கப்பட்டு விடுமோ என்ற பயம் எல்லோர் மனதிலும் ஏற்பட்டது. அக்கால கட்டத்தில் சைவமும் தமிழும் வளர்வதற்கு நாயன்மார்களும், சமயக் குரவர்களும் பெரும் உதவி செய்தனர். அவர்களுடைய தன்னலமற்ற தொண்டுகளால் சைவமும் தமிழும் இன்றும் நிலைத்து நிற்கின்றது. சைவத்தையும் தமிழையும் புலம்பெயர்ந்த கனடிய மண்ணில் நிலைநிறுத்துவதற்காக, அடுத்த தலைமுறையிடம் கொண்டு சேர்ப்பதற்காகப் பல தன்னார்வத் தொண்டர்கள் பல சங்கங்களையும், கோயில்களையும் அமைத்துப் பாடுபட்டு வருவது பாரட்டத்தக்கது

சைவசமயத்தைப் பற்றிக் குறிப்பிடமுன் இந்து சமயத்தைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். இந்து சமயம் என்பது மிகப் பெரிய சமுத்திரமாகும். இதில் நான்கு முக்கியப் பிரிவுகள் அல்லது சமயப்பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவுக்கும் நம்பிக்கைகள், புனித நூல்கள். சமயத் தலைவர்கள் மற்றும் ஆதீனப் பாரம்பரியம் எனப் பல உண்டு. பக்தியில் கவனம் செலுத்தும் இந்த மதப்பிரிவுகளுக்குச் சொந்தமான கோயில்கள், திருவிழாக்கள் மற்றும் வழிபாட்டு முறைகளும் உள்ளன. இந்த நான்கு பிரிவுகளில் சைவம், வைஷ்ணவம், சக்தியை வழிபடும் சாக்தம் மற்றும் ஸ்மார்த்தம் ஆகியன இதில் அடங்கும். இந்த நான்கு பிரிவினர்களும் வேதங்கள், தர்மம், கர்மவினை, மற்றும் மறுபிறவி முதலியவற்றை நம்புகின்றனர். இதில் முக்கிய மதமான சைவசமயத்தை எடுத்துப் பார்ப்போம்.

சைவசமயத்தவர் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகவும், சக்தியை இறைவ னிடம் இருந்து வெளிப்படும் ஆற்றலாகவும் வழிபட்டாலும், அவர்களிருவரும் ஒருவரேயாவர். இதைவிட சைவர்கள் கணபதியையும் முருகனையும் பெருமான்களாக வழிபடுவது மட்டுமல்ல, திருநீற்றையும் உருத்திராட்சத்தையும் அணிந்து, ஐந்தெழுத்து மந்திரமாகிய நமச்சிவாய மந்திரத்தையும் ஓதுகின்றார்கள். பொதுவாக சைவ அடியார்கள் நெற்றியில் திருநீறு அணிவார்கள். சைவ அருளாளர்களான திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர். மாணிக்கவாசகர் ஆகியோரையும் மற்றும் சமயக் குரவர்களையும் போற்றுகின்றனர். இராமேஸ்வரம், காசிவிஸ்வநாதர், மகாகாளிஸ்வரர், சிதம்பரம் போன்ற பழமை வாய்ந்த பெரிய சிவாலயங்கள் இந்தியாவில் உண்டு. சிதம்பரமும் மற்ற நான்கு கோயில்களும் பூமி, நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ஐம்பூதங்களைப் பிரதிபலிப்பதாகச் சமயச்சான்றோர் குறிப்பிடுவர்.

இந்தியாவுக்கு வெளியே உள்ள முக்கிய சிவாலயங்களில் நேபாளம் நாட்டிலுள்ள பசுபதிநாதர், இலங்கையில் உள்ள திருக்கேதீஸ்வரர், கோணேஸ்வரர், நகுலேஸ்வரர், தொண்டேஸ்வரர், முனீஸ்வரர் ஹாவாயிலுள்ள இறைவன் ஆலயம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். மிகப் பழமை வாய்ந்த பஞ்ச ஈஸ்வரங்கள் என்று சொல்லப்படுகின்ற சிவாலயங்கள் ஐந்தும் இலங்கையில்தான் இருக்கின்றன.

சைவ சமயம் சிறந்த கலாச்சாரத்தைக் கொண்டுள்ளது மட்டுமல்ல, எமக்கு அன்பு, பாசம், நேசம், பக்தி, பொறுமை, பரிவு, சகிப்புத் தன்மை, பணிவு, அர்ப்பணிப்புப் போன்றவற்றையும் போதிக்கின்றது. சைவசமயம் சிறந்த கலைகளைத் தன்னகத்தே கொண்டது. குறிப்பாகக் கோயில்களின் அமைப்பில் இருந்து கட்டடக் கலைகள் பற்றிப் புரிந்து கொள்ள முடியும். ஏனைய கலைகளான பாரம்பரிய சங்கீதம், நாடகம், நடனம் முதலியவற்றையும் கொண்டுள்ளது. சிறந்த தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட சைவசமயம் தினசரி வழிபாட்டிற்கு வழிவகுப்பது மட்டுமல்ல, அவர்களின் சமயவிழாக்களும் குடும்பத்தினர் அனைவருக்கும் மகிழ்ச்சி தருவதாகவும் இருக்கிறது. சமயத் திருமறைகள் நல்ல வாழ்க்கை வாழவும், இறைவனை நேசிக்கவும் உதவுகின்றது. புண்ணியங்களைச் செய்தவர் சுவர்க்க இன்பத்தையும் அனுபவிப்பர் என்று சைவர்கள் நம்புகிறார்கள்.

சைவசமயத்தின் முழுமுதற் கடவுளான சிவனைப் பற்றியே பதினெண் புராணங்களுள் உள்ள பத்து புராணங்கள் முக்கியமாகக் குறிப்பிடுகின்றன. இந்தியா, நேபாளம், இலங்கை, தென்கிழக்காசியா, ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ்ரேலியா, கனடா முதலான எல்லா நாடுகளிலும் சிவன் குடியிருக்கும் சிவாலயங்கள் காணப்படுகின்றன. தேவாரப்பாடல் பெற்ற 274 ஆலயங்களில் 34 ஆலயங்கள் தென்னிந்தியாவ-ின் குடந்தை என்று அழைக்கப்படும் கும்பகோணத்திலும், இரண்டு ஈஸ்வரங்கள் இலங்கையிலும் காணப்படுகின்றன. 1980 களின் பின் ஈழத்தமிழர்கள் எங்கெல்லாம் புலம் பெயர்ந்து வாழ்ந்தார்களோ அங்கெல்லாம் சைவ வழிபாட்டையும் கொண்டு சென்றார்கள். தமிழர்களின் கொண்டாட்டங்கள் எல்லாம் தொடக்கத்தில், பிறமதக் கலப்பு ஏற்படும்வரை சைவமும் தமிழும் கலந்ததாகவே இருந்தது. இக்கொண்டாட்டத் தினங்களில் புலால் உண்பதைத் சைவத்தமிழர்கள் தவிர்ப்பார்கள்.

உலக நாடுகள் சைவசமயத்தையும் “இந்து மதம்“ என்ற பெயருக்குள்ளேயே பொதுவாக அடக்குகின்றனர். இதில் உருவவழிபாடு முக்கிய இடம் பெறுகின்றது. வைசமயத்திலும் பல வகையான பிரிவுகள் இருக்கின்றன. இவற்றின் தத்துவங்கள், கோட்பாடுகள் ஆகியவற்றில் சில வேறுபாடுகள் உள்ளனவாயினும் அவற்றின் அடிப்படைக் கொள்கைகளில் வேறுபாடு இருக்கவில்லை. சைவ சித்தாந்தத்தை தத்துவமாகக் கொண்டு விளங்கும் சித்தாந்த சைவத்தையே பொதுவாக அனேகமான தமிழர்கள் கடைப்பிடிக்கின்றனர். பதி (இறைவன்) பசு (உயிர்) பாசம் (மலங்கள்) ஆகிய மூன்றையும் என்றென்றும் உள்ள நிலைத்த பொருள்களாக ஏற்றுக்கொள்வது சைவ சித்தாந்த தத்துவத்தின் அடிப்படையாகும். இம்மூன்று பொருள்களுக்கும் உரிய தொடர்பினை கீழ்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகின்றது.

“பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில்
பதியினைப் போல் பசு, பாசம் அநாதி
பதியினைச் சென்று அணுகா பசு பாசம்
பதி அணுகிற் பசு பாசம் நில்லாவே”

சைவசமயம்

(சைவப்பெரியார் சைவத்திருவாளர் சு. சிவபாதசுந்தரம், பி. ஏ.)

சைவசமயமே சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள்வெளி காட்டுமிந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந்துழலுஞ் சமயநெறி புகுதவேண்டா முத்திதருந்
தெய்வச்சபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே.

சைவசமய மாட்சி

உலகத்திலேயுள்ள சமயங்கள் பல. அவற்றுள் நமது நாட்டிலே வழங்குஞ் சமயங்கள் நான்கு. அவை சைவசமயம், புத்த சமயம், கிறிஸ்து சமயம், இஸ்லாம் சமயம் என்பன. இவற்றுள் புத்தசமயம் 3000 வருடங்களுக்கு முன் தோன்றியது. கிறித்துவம் 2000 வருடங்களுக்கு முன் உண்டானதாம். இஸ்லாமிய சமயம் 1350 வருடங்களுக்கு முன் உண்டானது. சைவசமயம் இன்ன காலத்திலே உண்டானதென்பது ஒருவராலும் சொல்லிக் கொள்ள இயலாதது. ஐயாயிரம் வருடங்களுக்கு முன் இருந்த அருச்சுனனுக்குப் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னிருந்த இராமர் முதலியோரும் சைவசமயிகளே. ஆதலாற் சைவசமயம் சரித்திர காலங்களுக்கு அப்பாற்பட்டதாய் உள்ளது.

புத்தசமயம் கௌதமபுத்தராலும் அவருடைய சீடராலும் வடஇந்தியாவிலே செய்யப்பட்டதெனச் சரித்திரங்கள் சொல்லுகின்றன. புத்தர் உண்டாக்கிய சமயமாதலால் இதற்குப் புத்தசமயம் என்று பெயர். இஸ்லாம் சமயம் முகம்மது என்பவரால் அராபிய தேசத்திலே உண்டாக்கப்பட்டது. கிறிஸ்து சமயம் கிறிஸ்து என்பவரால் பலஸ்ரைன் என்னும் ஊரிலே உண்டாக்கப்பட்டதென்று பலர் சொல்லுகிறார்கள். கிறிஸ்து செய்த சமயமாதலால் இதற்குக் கிறிஸ்து சமயம் என்று பெயர். சைவசமயம் என்பதற்குச் சிவத்தை அடையச் செய்யும் சமயம் என்பது கருத்து. சிவம் என்பது கடவுள்.

எல்லாப் புண்ணியங்களையும் சொல்லுவது சைவசமயம் ஒன்றே. கள்ளு முதலிய வெறிப் பொருள்களை உண்ணாமையும், தாழ்ந்த உயிர்களையும் கொல்லாமையும், புலால் உண்ணாமையும் புண்ணியங்கள் என்று சைவசமயம் சொல்லும். கிறிஸ்து சமயம் இவைகளில் ஒன்றையாவது புண்ணியம் என்று சொல்லவில்லை. இஸ்லாம் மதம் மேற் சொல்லியவற்றுள் கள்ளுண்ணாமை ஒன்று மாத்திரம் புண்ணியம் என்று சொல்லும். புத்த சமயம் புலால் உண்ணாமையைப் புண்ணியம் என்று சொல்வில்லை. அன்றியும் எல்லாவற்றிலும் சிறந்த புண்ணியமாகிய கடவுள் வழிபாட்டையும் புண்ணியம் என்று இந்தச் சமயம் சொல்லவில்லை. ஆகவே சுத்த புண்ணிய மார்க்கத்தைச் சொல்லுவது சைவசமயம் ஒன்றேயாம். சைவசமயத்தின்படி சரியாய் நடப்பவர்கள் கடவுளை அடைவார்கள். இன்னும் பலவகைகளாலும் சைவசமயம் மற்றைய எல்லாச் சமயங்களிலும் மேலானதாயுள்ளது. அவைகளைப் பின்னே காண்க.

சைவசமயத்தின் பிரமாண நூல்கள்

ஈரைந்து பத்து என்பது ஓர் உண்மை. இது எக்காலத்திலும் உண்மையாயுள்ளது. ஆயிரம் வருடங்களுக்கு முன்னும் ஈரைந்து பத்தேயாம். ஈரைந்து பத்தானது ஒரு குறித்த காலத்திலே அன்று. இப்படியே உண்மைகள் எவற்றுக்கும் தொடக்கமில்லை. ஆதலால் உண்மைகள் எல்லாம் அநாதி என்று சொல்லப்படும். சைவசமயக் கொள்கைகள் உண்மை ஆதலால் சைவசமயக் கொள்கைகள் அநாதி.

ஈரைந்து பத்து என்ற உண்மை விவேகமுள்ள மனிதர் யாவருக்கும் விளங்கும். இதை அறிந்தவர்கள் காலத்துக்குக் காலம் கணக்குப் புத்தகங்களிலே பெருக்கல் வாய்ப்பாட்டிலே எழுதியிருக்கிறார்கள். உபாத்தியாயர்கள் இதைப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள். அதுபோல, கடவுள் அருளிய ஞானத்தைப் பெற்றவர்கள் சைவசமய உண்மையை உணருபவர்கள். அவர்கள் அந்த உண்மையைக் காலத்துக்குக் காலம் மற்றையோர் அறிவதற்காகச் சொல்லியிருக்கிறார்கள். கடவுளும் சைவசமய உண்மையை நேரே உபதேசித்து அருளினார். இப்படியாக ஞானிகளாலும் கடவுளாலும் அருளிச் செய்யப்பட்ட சைவசமய நூல்கள் பல. பலவாறாயிருந்தாலும் அவை சொல்லும் உண்மை ஒன்றேயாம்.

சைவசமய நூல்கள் வேதம், ஆகமம், தேவாரம், திருவாசகம், திருமந்திரம், மெய்கண்ட சாத்திரங்கள் முதலியனவாம். இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்னும் நான்கு வேதங்களும், காமிகம் முதலிய இருபத்தெட்டு ஆகமங்களும் (காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், திச்சவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசரம், கிரணம், வாதுளம்) கடவுளால் அருளப்பட்டவை. இவை வடமொழியில் உள்ளன. ஒவ்வொரு படைப்புக்காலத் தொடக்கத்திலும் பக்குவமுள்ள ஆன்மாக்களுக்குக் கடவுளால் உபதேசிக்கப்படுவன. படைப்புக்குத் தொடக்கமில்லாமையால், ஒவ்வொரு சிருட்டியிலும் உபதேசிக்கப் படுவனவாகிய வேதங்களுக்கும் ஆகமங்களுக்கும் தொடக்கமில்லையாம். தேவாரம் திருநாவுக்கரசு சுவாமிகளாலும், திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளாலும், சுந்தரமூர்த்தி சுவாமிகளாலும் தமிழிலே பாடப்பட்டவை. திருவாசகம் மாணிக்கவாசக சுவாமிகளால் தமிழிலே பாடப்பட்டது. திருமந்திரம் திருமூல நாயனாரால் தமிழிலே பாடப்பட்டது. மெய்கண்ட சாத்திரம் பதினான்கும் தமிழிலே பாடப்பட்டவை. அவற்றின் பெயரும் செய்தவர்கள் பெயரும் வருமாறு:

நூல்கள்	செய்தவர்
1. திருவுந்தியார்	திருவியலூர் உய்யவந்ததேவ நாயனார்
2. திருக்களிற்றுப்படியார்	திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார்
3. சிவஞானபோதம்	மெய்கண்டதேவ நாயனார்
4. சிவஞானசித்தியார்	அருணந்தி சிவாசாரியார்
5. இருபாவிருப.்.து	அருணந்தி சிவாசாரியார்
6. உண்மைவிளக்கம்	மனவாசகங்கடந்த தேவநாயனார்
7. சிவப்பிரகாசம்	உமாபதி சிவாசாரியார்
8. திருவருட்பயன்	உமாபதி சிவாசாரியார்
9. வினாவெண்பா	உமாபதி சிவாசாரியார்
10. போற்றிப்ப.்.றொடை	உமாபதி சிவாசாரியார்
11. கொடிக்கவி	உமாபதி சிவாசாரியார்
12. நெஞ்சுவிடுதூது	உமாபதி சிவாசாரியார்
13. உண்மைநெறி விளக்கம்	உமாபதி சிவாசாரியார்
14. சங்கற்ப நிராகரணம்	உமாபதி சிவாசாரியார்

மேலே சொல்லப்பட்டவை ஞானநூல்கள் ஆகும். இவை சைவசமயத்துக்குப் பிரமாணமாய் உள்ளவை. இவை தவிரப் புராணங்கள் இதிகாசங்கள் என்று இரண்டு வகையான சைவ நூல்கள் உண்டு. இவை பெரும்பாலும் பழைய சரித்திரங்களைச் சொல்லுவன. இவற்றுட் பல, குறைந்த நிலையில் உள்ளவர்களுக்கும் மிக்க நன்மை பயக்கக் கூடியவை.

புராணங்கள் கடவுளுடைய திருவருட் சிறப்பைச் சொல்லுவன. இவைகளைப் படித்தாற் சிவபக்தி வளரும். இவைகளிலே சமய உண்மைகளை விளக்குகின்ற பகுதிகளும் உண்டு. இவ்வுண்மைகள் தனித்தனியே சொல்லப்பட்டால் வாசிக்கின்றவர்கள் இலகுவாய் மறந்து விடுவார்கள். அவை புராணக் கதைகளிலே வரும்போது மனசிலே நன்றாகப் பதிகின்றன. உதாரணமாக, "எவருக்காகவாயினும் பொய் சொல்லல், ஆகாது" என்பது ஒரு சமய உண்மை. இந்த உண்மை தனியே சொல்லப்பட்டால் இதை மறப்பது இலகுவாயிருக்கும். இதை அமைந்திருக்கும் இனிய ஒரு கதை இருந்தால் அது நினைவிலிருக்கும். கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் முதலியன புராணங்களிற் சிறந்தன. இவற்றிற் சில பகுதிகளுக்கு வெளிப்படைப் பொருள் கொள்ளலாகாது. சைவ இதிகாசங்கள் அடியார்களுடைய சரித்திரங்களைச் சொல்லுவன.

சைவாபிமானம்


சைவசமயம் ஒன்றே நம்மைப் பிறவித் துன்பத்தினின்றும் நீக்கிக் கடவுளோடு சேர்க்கத் தக்கதென்று மேலே காட்டப்பட்டது. குழந்தைக்கு இவரே பிதா என்று காட்டுபவள் குழந்தையினுடைய தாய். அது போலக் குழந்தைகளாகிய நமக்குக் கடவுளைக் காட்டுவது நமது அருமையான சைவசமயமாகிய தாயாம். நம்மைப் பெற்ற தாயிலும் பார்க்க அதிகமாக இந்தத் தாயை நாம் நேசித்து இதை யாவரும் அறியச் செய்வது நம்முடைய கடனாகும்.

நமது நாட்டிலே நமது சமயம் பலவிதமான ஏதுக்களால் வருந்தியது. முன்னாளிலே நமது நாட்டை ஆண்டு வந்த பறங்கியர் முதலானவர்கள் சைவசமயமாகிய நமது தாயைப் பலவகையாலும் வருத்தினார்கள். ஆங்கில ராச்சியம் வந்த பின்பு அரசாட்சியாரால் துன்பமுறாமல் இருந்தாலும், வேறு வழியாகப் பெருந்துன்பம் அடைந்தது. ஐரோப்பா, அமெரிக்காக் கண்டங்களில் உள்ளவர்கள் கிறிஸ்து சமயத்தை நாட்டுவதற்காக மிஷனரிமாருக்குச் சம்பளங் கொடுத்து இவ்வூருக்கு அனுப்பியிருக்கிறார்கள். கிறிஸ்து சமயத்தை நாட்டுவது என்றால் கருத்தென்ன? சைவர்களைக் கிறிஸ்தவர்கள் ஆக்குவதுதானே. சைவர்கள் கிறிஸ்தவர்களானாற் சைவசமயத்தை அழிப்பதாக முடியுமல்லவா? எமது நாடு இப்போது எமது ஆட்சியில் வந்து விட்டபடியால் எமது சமயத்தை நாம் இலகுவாக வளர்க்கலாம்.

சைவப் பிள்ளைகளைச் சைவப் பள்ளிக்கூடங்களிற் படிக்கச் செய்ய வேண்டும். வேண்டிய இடங்களிற் சைவப் பள்ளிக்கூடங்கள் அமைக்க வேண்டும். அப்பள்ளிக்கூடங்களிலே ஒவ்வொரு நாளும் சைவசமயத்தைப் போதிக்க வேண்டும். முதியோர்களுக்குஞ் சைவப் பிரசங்கஞ் செய்து வரல் வேண்டும். கோயில்களையும் பள்ளிக்கூடங்களையும் பிழையற நடத்துதல் வேண்டும். அவைகளை நடத்து பவர்கள் பொருள் வரவையும் தமது மகிமையையும் நினையாமற் சைவசமயத்தை வளர்த்துச் சிறப்பிப்பதிலேயே நாட்டம் உள்ளவர்களாய் இருத்தல் வேண்டும்.

நன்றி:

அன்புநெறி மலர் 12-இதழ்-11, 12
மலர் 13 இதழ்-1


TORONTO HONDA
HONDA
CIVIC
FOR ALL
SEDAN
OR DON'T PAY FOR 90 DAYS
HondaOntario.com
Ontario Honda Dealers
HONDA
Akilan Kanagaratnam
Account Executive
Cell: 647-865-4943
HONDA

உ
சிவமயம்

நவராத்திரி காலத்தில் கொலு வைத்தல்

இறைவனிலிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருக்குகம் அருள், "சக்தி" என்று எம்மால் அழைக்கப்படுகின்றது. ஒப்பீடாகச் சொன்னால் சூரியனிலிருந்து வெளிப்படும் ஒளிக்கதிரை பயன்படு நிலையில் வெயில் என்று அழைப்பது போன்று இறைவனிலிருந்து வெளிப்படும் அருட்கதிரை அதன் பயன்படு நிலையில் சக்தி என்று அழைக்கிறோம். பூவுலகில் மட்டுமல்ல ஈரேழு உலகத்திலுமுள்ள ஜீவராசிகள் வசிப்பதற்கு இறையருளாகிய சக்தி அவசியமாகின்றது. சைவசமயம் தெய்வசக்திக்கு பெண் வடிவத்தை உவமை யாக்கி, இதற்கு அம்மன், அம்பிகை, அம்பாள் எனும் பெயர்களையும் கொடுத்துள்ளது.

இறைசக்தி ஜீவராசிகளின் சீவியத்திற்கு மூன்று வகையாகப் பயன்படுகின்றது. அவையாவன இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானாசக்தி என்பனவாகும். இச்சாசக்தியின் மூலம் ஓரறிவு, ஈரறிவு, மூவறிவு கொண்ட ஜீவராசிகளும், இச்சாசக்தி, கிரியாசக்தி ஆகிய இரண்டின் மூலம் நாலறிவு, ஐந்தறிவு, ஆறறிவு கொண்ட ஜீவராசிகளும், இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானாசக்தி ஆகிய மூன்றின் மூலம் ஏழறிவு, எட்டறிவு, ஒன்பதறிவு கொண்ட ஜீவராசிகளும் வாழ முடிகின்றன. இதிலிருந்து அறியப்படும் உண்மை என்னவென்றால், தெய்வசக்தி மனிதனுக்கு மட்டும் உரியதோ அன்றி வேண்டப்படுவதோ அல்ல, அது அத்தனை ஜீவராசிகளுக்கும் உரியதும் வேண்டப்படுவதும் ஆகும். வேறு வார்த்தையிற் சொன்னால், எண்பத்தி நான்கு லட்சம் யோனிவாயிலாகப் பிறந்த அத்தனை ஜீவராசிகளுக்கும் தெய்வசக்தி உரியதும் வேண்டப்படுவதும் ஆகும்.

ஓரறிவிலிருந்து ஒன்பது அறிவு வரை கொண்ட அத்தனை ஜீவராசிகளினதும் வாழ்விற்காக, நலனுக்காக, உயர்விற்காக இறைவனை வணங்கும் ஒன்பது இரவுகள் தான் நவராத்திரி காலமாகும். முதலாம் இரவு விசேடமாக ஓரறிவு கொண்ட ஜீவராசி களுக்கானது. இரண்டாம் இரவு ஈரறிவு கொண்ட ஜீவராசிகளுக் கானது. மூன்றாம் இரவு மூவறிவு கொண்ட ஜீவராசிகளுக்கும் நான்காம் ஐந்தாம் நாட்கள் அந்தந்த அறிவுகளைக் கொண்ட ஜீவராசிகளுக்கும் உரியது. ஆறாம் நாள் ஆறறிவு கொண்ட மனிதர்களுக்கும் தேவர்களுக்குமானது. ஏழாம் எட்டாம் நாட்கள் மகான்களுக்கும் முனிவர்களுக்கும் உரியது. ஒன்பதாம் நாள் முத்தேவியர்களான இலக்குமி, துர்க்கை, சரஸ்வதி தேவியர்களுக்கு உரியதாகும். இவ்வாறு நாட்கள் விசேடமாய் ஒதுக்கப்பட்டிருப்பினும் ஒன்பது நாட்களினதும் வழிபாடு எல்லா ஜீவராசிகளுக்கும் பயன் அளிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஏனெனில் ஒன்பதிற்குள் முதல் எட்டும் அடங்கியுள்ளது.

நவராத்திரி கால வழிபாட்டின் போது எல்லா ஜீவராசிகளுக்குமான வழிபாட்டை உறுதி செய்யும் பொருட்டு ஒன்றிலிருந்து ஒன்பது வரையான அறிவு கொண்ட ஜீவராசிகளின் சின்னங்கள் அடங்கிய கொலு வைக்கப்படுகின்றது. இதன் பொருட்டு ஒன்பது படிகள் கொண்ட கொலுத் தளம் (மேடை) அமைக்கப்பட்டு, அதன் முதலாம் படியில் ஓரறிவு கொண்ட புல், பூண்டு, மரம், செடி, கொடிகளின் சின்னங்கள் வைக்கப்படுகின்றன. இரண்டாவது படியில் ஈரறிவு கொண்ட நந்து, நத்தை, சங்கு என்பனவும் மூன்றாம் படியில் மூவறிவு கொண்ட சிதல், எறும்பு, அட்டை என்பனவும் நான்காம் படியில் நான்கு அறிவு கொண்ட நண்டு, தும்பி, வண்டு என்பனவும் ஐந்தாம் படியில் ஐந்தறிவு கொண்ட மிருகங்கள், பறவைகள், பாம்பு, ஆமை என்பனவும் ஆறாம் படியில் ஆறறிவு கொண்ட மனிதர், தேவர்கள் ஆகியோரும் ஏழாம் படியில் ஏழறிவு கொண்ட மகான்களும் எட்டாம் படியில்

எட்டறிவு கொண்ட ஞானிகளும் ஒன்பதாம் படியில் ஒன்பது அறிவு கொண்ட முத்தேவியர்களும் வைக்கப்படுகின்றனர். இவைகள் எல்லாவற்றுக்கும் மேல் இருந்து கொண்டு பத்தறிவு கொண்ட இறைவன் அனைவருக்கும் அருள் பாலிக்கின்றார். இவ்வாறு கொலு வைத்து, ஓரறிவு முதல் ஒன்பது அறிவு வரை கொண்ட ஜீவராசிகள் அனைத்தினதும் நலனுக்காக இறையருளை வேண்டி வழிபடும் விசேட காலந்தான் நவராத்திரி காலம். எனவே இது வழிபாடுகளில் மிகச் சிறந்த ஜீவகாருண்ணிய வழிபாடாகக் கருதப்படுகின்றது.

இறைவனிலிருந்து கிடைக்கப் பெறும் அருட்சக்தி மூன்று வகையிற் பயன்படுகிறது. அவை இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானாசக்தி என்று அழைக்கப்படுகின்றன. இச்சாசக்தி இச்சையையும் (ஆசை) கிரியாசக்தி செயற்பாட்டையும் ஞானாசக்தி ஞானத்தையும் (அறிவு) அளிக்கின்றன. இதே மூன்று சக்திக-ளைக் கொண்டுதான் அத்தனை ஜீவராசிகளும் உலகில் வாழமுடிகின்றது. இறையருளுக்கு ஆதிபராசக்தியை உவமைப் படுத்திய ஞானிகள், ஆதி பராசக்தியை மேலும் விரிவுபடுத்தி இச்சா சக்திக்கு இலக்குமி தேவியையும் கிரியாசக்திக்கு துர்க்கா தேவியையும் ஞானாசக்திக்கு சரஸ்வதி தேவியையும் உவமைப்படுத்தியுள்ளனர். அதாவது இச்சா சக்தியைப் பெறுவதற்கு இலக்குமி தேவியையும் கிரியா சக்தியைப் பெறுவதற்கு துர்க்கா தேவியையும் ஞானாசக்தியைப் பெறுவதற்கு சரஸ்வதி தேவியையும் விசேடமாய் வழிபட வேண்டு மென்று கூறப்படுகின்றது.

புலன் நுகர்வுப் பூவுலக வாழ்விற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் கலியுகத்தில் இலக்குமிதேவி செல்வத்தையும் துர்க்கா தேவி வீரதையும் சரஸ்வதி தேவி ஞானத்தையும் கொடுப்பவர்கள் என்று எண்ணி, இவற்றைப் பெறும் பொருட்டு முத்தேவியரதும் வழிபாட்டை மக்கள் மேற்கொண்டு வருகின் றனர். இதனால் நவராத்திரிகாலம் செல்வம், வீரம், கல்வி என்பனவற்றைப் பெற்றுக் கொள்ளுவதற்கு விசேடமாய் முத்தேவியரை நோக்கி வழிபடும் காலம் என்று கருதப்படுகின்றது.

புலன் நுகர்வுப் பூவுலக வாழ்க்கையில் அதிக வேட்கை கொண்ட மனிதன் மற்றைய ஜீவராசிகளை மறந்து, அவற்றின் வாழ்வை மறந்து, தனக்காக மட்டும் கொலுவைத்து வழிபடுகிறான். மற்றைய ஜீவராசி களும் வாழ வேண்டும், அவற்றுக்காகவும் இறைவனை வணங்கவேண்டும் என்பதை மறந்து செயற்படுவ தனால், கொலு வைப்பதற்குரிய தத்துவத்தைப் புரிந்து கொள்ளாமல் அர்த்தமற்று கண்ட கண்ட பொம்மை களை எல்லாம் வைத்து மக்களை மயங்க வைக்கும் வெறுங் கண்காட்சிப் பொருளாக கொலுவை அமைக்கிறான். இது மனிதன் தெய்வீகத்திலிருந்து விலகிப் புலன் நுகர்வுப் பூவுலக வாழ்விற்கு அடிமைப் பட்டுப் போகிறான் என்பதற்கு அறிகுறியாகும். இதுதான் கலியுகத்தின் கோலம் போலும்.

"ஏன் மனிதன் எல்லா ஜீவராசிகளுக்கு ஆகவும் இறைவனை வழிபடவேண்டும்?" என்று கேட்கலாம். எல்லா ஜீவராசிகளினதும் உயிர்களில் இறைவன் இருக்கிறான். இதனால் ஜீவராசிகள் நடமாடும் கோயில்களாகும். எல்லா ஜீவராசிகளின் இயக்கத்திற்கும் வாழ்விற்கும் இறைசக்தியே காரணமாய் இருக் கின்றது. இறைசக்தி இல்லாமல் எதுவுமே இயங்க முடியாது. இதற்கும் மேலாக இன்னும் அறிய வேண்டியது: உலக ஜீவராசிகளின் வாழ்வு ஒன்றினோடு ஒன்று பிணைக்கப்பட்டுள்ளது. இந்த உண்மை யைப் பலரும் அறிவர். அதாவது ஓரறிவு கொண்ட புல், பூண்டு, மரம், செடி, கொடி இன்றி மற்றைய உயிரினம் வாழமுடியாது. ஓரறிவு கொண்ட உயிரினங்கள் முதல் ஐந்தறிவு கொண்ட உயிரினங்கள் வரை எல்லாம் சரியாக இருக்கும் வரைதான் மனிதன் வாழமுடியும். வேறு வார்த்தையில் சொன்னால் ஒவ்வொரு உயிரினத்தினதும் வாழ்வும் இருப்பும் மற்றைய ஒவ்வொரு உயிரினங்களினதும் வாழ்விலும் இருப்பிலும் தங்கியுள்ளது. இந்த உண்மையை அனைவரும் அறிவர். ஒன்றில் மற்றொன்று தங்கியிருக்கும் நிலை சமச்சீராக இருக்கும்

வரைதான் உயிரினங்களின் நீடித்த வாழ்விற்கு உத்தரவாதம் உண்டு. சமச்சீர் குலையாமற் பார்த்துக்கொள்ள வேண்டியது பகுத்தறிவு படைத்த மனிதனின் கடமை யாகும். உயிரினங்களுடைய சமச்சீரைப் பேணும் பொருட்டு இறைவனை வேண்டி நிற்கும் வழிபாட்டு முறையே கொலு வைத்து வழிபடும் வழக்கமாகும். மற்றைய ஐந்தறிவு வரையான அறிவு கொண்ட உயிரினங்களுக்கு பகுத்தறிவு இல்லாதபடியால் அவற்றால் இறைவனை வழிபட முடியாது. அவை தமது கன்ம வினையைப் போக்குவதற்கே பிறப்பெடுத்தன. எனவே மனிதன் எல்லாவற்றினதும் முக்கியத்துவத்தை உணர்ந்து எல்லா உயிரினங்களினதும் வாழ்விற்காகவும் நலனுக்காகவும் இறைவனை வழிபட வேண்டும் என்பதற்காகவே கொலு வைத்து வழிபடும் முறை ஞானிகளால் உருவாக்கப்பட்டது. இதற்காக ஒன்பது இரவுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இறைவனிலில் இருந்து வெளிப்படும் அருட்சக்தியைப் பிரதிநிதித் துவப்படுத்தும் முத்தேவியரான இலக்குமி, துர்க்கை, சரஸ்வதி ஆகியோரை முன்னிருத்தி வழிபடுவதன் மூலம் இறையருள் மனிதன் உட்பட எல்லா உயிரினங்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதே நவராத்திரி வழிபாட்டின் எதிர்பார்க்கை ஆகும்.

சைவசமயத்தில் உள்ள ஒவ்வொரு கிரிகைகளுக்கும் ஒவ்வொரு தத்துவம் உண்டு. கிரிகைகளைச் செய்பவர்கள் அதற்குரிய தத்துவங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் கிரிகைகளைச் செய்விப்பவர்களுக்கும் மற்றையோருக்கும் தத்துவத்தின் பொருளைத் தெரியப்படுத்தும் பொருட்டு எடுத்துரைக்க வேண்டும். அப்பொழுது தான் அவர்களுக்கு இறையுணர்வும் பக்தியும் உண்டாகும். கிரிகைகளின் தத்துவப் பொருட்களை அறியாத பட்சத்தில் கிரிகைகள் எல்லாம் மூட நம்பிக்கைச் செயற்பாடுகளாகவே கருதப்படும். இது நீண்ட காலத்தில் இறை நம்பிக்கையீனத்தையும் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளையும் எளச் செய்யும். காலகதியில் இது இளஞ்சந்ததியினா் மத்தியில் பெரும்பாதிப்பை ஏற்படுத்தி, இறை நம்பிக்கை அற்ற ஒரு நிலையை உருவாக்கும். சமயக் கிரிகைகள் இவ்வாறு தொடர்ந்தால் சைவ சமயத்தவரின் நிலமை "குளிக்கப் போய் சேறு பூசியவன் நிலைக்கு" ஒப்பாகலாம். நீண்ட காலத்தில் சைவசமயம் மறைந்து போவதற்கும் இது வழிசமைக்கலாம். எனவே சமயப் பற்று உடையோர் இதில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

அரும் பெரும் சமயத் தத்துவங்களைத் தெளிவாக்குவற்கு ஏற்பட்டவைகளே சமயச் சடங்குகள். ஆனால், நாளடைவில் தத்துவங்கள் மறக்கப்பட்டுச் சடங்குகளே சமயநெறியாகக் கொள்ளப்படு கின்றன. இது சமயப் பூசல்களுக்கும் சமயமாற்றத்துக்கும் வழிவகிக்கின்றது. சமயத் தத்துவங்களில் தெளிவற்றவர்கள் கோயில்களை நடாத்துவதனாலேயே இவ்வகையான பிரச்சனைகள் எழுகின்றன. எனவே இவர்கள் தெளிவு பெற்றவர்களின் ஆலோசனையைப் பெற்றுச் செயற்படவேண்டும்.

கொலு வைத்து நவராத்திரி வழிபாடு செய்வதன் மூலம் மற்றைய உயிரினங்களின் அவசியத்தை உணரமுடிகின்றது. அதன் பலனாக மற்றைய உயிரினங்களைத் தேவையற்றுக் கொல்வதை, அவற்றைத் துன்புறுத்துவதை, அவற்றின் வாழ்விற்கு இடையூறு விளைவிப்பதை, மற்றும் மரம், செடி, கொடிகளை அநாவசியமான முறையில் அழிப்பதைத் தவறு என்று எண்ணும் பக்குவமும் அறிவும் எம்முள் வளருகின்றது. இதனால் இயற்கையைப் பாதுகாக்கவும் ஜீவகாருண்யம் கொண்ட மனிதர்களாய் வாழவும் இவ்வழிபாட்டு முறை வழி அமைத்துக் கொடுக்கின்றது. இறைவன் மனிதனுக்கு மட்டுமல்ல அத்தனை ஜீவராசிகளுக்கும் உரியவர், அத்தளை ஜீவராசிகளுக்கும் தாயும் தந்தையுமாவார் என்னும் உண்மையை எம்முள் வளர்க்க உதவுகின்றது. அத்துடன் உலகம் மனிதனுக்கு மட்டுமல்ல அத்தனை ஜீவராசிகளுக்குமானது என்பதையும் அதனால் எல்லா ஜீவராசிகளும் இவ்வுலகில் வாழும் உரிமையைப் பெற்றுள்ளது எனும் பேருண்மையையும் வருடாவருடம் எமக்கு ஞாபகப்படுத்துவது போன்றும் இவ்வழிபாடு

அமைந்துள்ளது. இவ்வாறான பல நன்மைகளை அடையப்பெறும் நோக்குடன் உருவாக்கப்பட்ட வழிபாட்டு முறையைக் கொச்சைப்படுத்துவது போன்று கண்ட கண்ட சீனப் பொம்மைகளை வைத்துக்கொலு அமைப்பது பெருந்தவறாகும்.

இன்றைய உலகம் இயற்கையைப் பேணவேண்டும் பாதுகாக்க வேண்டும் என்று வரிந்து கட்டிக்கொண்டு ஐ.நா. அமைப்பு மூலம் செயற்படுவதை நாம் அறிவோம். இதன்பொருட்டு எத்தனையோ மகாநாடுகளைக் கூட்டி ஆலோசிப்பதையும் அதற்காகப் பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்வதையுங்கூட நாம் அறிவோம். இயற்கையின் முக்கியத்துவத்தையும் அதன் சமச்சீரையும் எப்பவோ தெரிந்து கொண்ட சைவசமயம் அதன் பாதுகாப்பிற்காகவும் நலனுக்காகவும் உருவாக்கியது தான் கொலு வைத்து வழிபடும் வழிபாட்டு முறையாகும். இந்த வழிபாட்டுக்கென்று ஒதுக்கப்பட்டு உள்ளதுதான் ஒன்பது இராத்திரிகள். இப்பெரும் இலட்சியத்தைக் கொண்ட வழிபாட்டு முறையை சரியான முறையில் மேற்கொள்வது மிக மிக அவசியம். சைவ சமயத்தின் அருமை பெருமைகளை அறிந்து அவற்றைச் சரியான முறையிற் கடைப்பிடிக்க வேண்டியது எமது கடமையும் உரிமையும் ஆகும்.

மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெலாம்”

ஆக்கியோன்:
பசுந்தீவு கோவிந்தன் B.A. (Hons) Econ.

எமது வாழ்க்கை ஒரு பயணம். குறுகிய காலம். பயணத்தில் சந்திக்கும் ஏனைய பயணிகளுடன் அன்பைப் பகிர்ந்து கொள்ளுங்கள். அவர்கள் எல்லாம் பூர்வ பந்ததினால் இப்பொழுது எம்முடன் பயணிக்கிறார்கள்.

ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம். பொல்லாங்கிலும் ஒரு காரணம் இருக்கும் காரணம் அறிந்து பிரச்சனையைத் தீர்க்கவும்.

ஆணவம் பொல்லாதது முன்னேற விடாது. ஆணவத்தை அடக்கப் பழகிக் கொள்ளுங்கள். நான், எனது, எனக்கு என்று எதிலும் முனைப்புக் கொள்ளாதீர்கள்.

எப்பொழுமும் இல்லை என்று நினைக்காதீர்கள். இருக்கிறது என்று நினையுங்கள். எப்பொழுதும் நடக்காது என்று நினைக்காதீர்கள் நடக்கும் என்று நினையுங்கள்.

உங்களுக்கு இறைவனால் வழங்கப்பட்ட நல்லனவற்றை இருந்து சிந்தித்துப் பாருங்கள். இறைவனுக்கு நன்றி கூறுங்கள்.

இந்துக்களும் இந்து மதமும்

"தன்பணி அறிந்து தன்தொழி லறிந்து
தர்மம் விதித்த தனிவிதி என்று
பற்று மறந்து பலனைத் துறந்து
செயல் புரிவோரின் தியாகம் சாத்விகம்
(கீதை 18: 9)

“இந்துக்கள் என்பவர் யார்?” என்ற கேள்விக்கு விடை காண்பது, “இந்து மதம் என்றால் என்ன?” என்ற கேள்விக்கு விடை காண்பதைவிடக் கடினமானதே. வரலாற்றா ளர்கள், ஆசிரியர்கள், கல்விமான்கள், மதகுருமார்கள் பல நூற்றாண்டுகளாக இந்தக் கேள்விகளுக்கு விடை கண்டதாக இல்லை. இந்து மதத்தில் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட பிரிவுகள் உள்ளன, என்ற சிலரின் கருத்து முடிந்த முடிவாக பரவலாக ஏற்கப்படுவதாக இல்லை. இந்து மதத்தின் உட்பிரிவுகள் இவற்றிற்கும் மேலானவை என்று கருதுபவர்களும் உண்டு.

இந்துக்கள் பெரும்பாலும் அவரவர் நம்பிக்கைகளின் அளவு கொண்டு ஒருவரை ஒருவர் எடை போடுவதில்லை. இந்து மத வழிபாடு ஆள் சார்ந்தது, மிகுதி குடும்பம் சார்ந்தது. ஆலயங்களிலும், மத வழிபாடு பக்தனுக்கும் ஆலய விக்கிரகங்களுக்கும் இடையிலானதே, பக்தர்கள் பலரின் மத்தியில் நிற்கும் பொழுதும், பாரம்பரியமாக இந்துக்களின் வழிபாடு சார்ந்தது, சபை சார்ந்தது அல்ல.

இந்துக்களும் தாம் யார்? தாம் எதை நம்புகிறோம் என்பதில் இணக்கம் கண்டதாக இல்லை. இதற்குக் காரணம் இந்துமதம் தெளிவானதாகவும் இலகுவானதாக இருந்தாலும் அது ஒரு விரிந்த உலகத்துவ தன்மை கொண்டிருத்தல் எனலாம். இந்து மதம் உறுதியான கோட்பாடுகள் கொண்டிருப்பினும், அவை வேறுபட்ட விளக்கங்களுக்கு இடம் தருவதுடன், வளர்ந்து வரும் அறிவியல் உண்மைகளை ஏற்றுவிடும் இயல்பும் உடையது. சுயசிந்தனைக்கு மதிப்புத்தரும் பண்பும் அதில் மிகவே ஆழம் பதிந்துள்ளது. இந்து மதத்தில் விரும்பித் தெரிந்தெடுத்து பின்பற்றுவதற்கு பல் மார்க்கங்கள் உள்ளன.

இந்து மதம் அனைவரையும் தங்கள் உள்ள வழிகாட்டலுக்கு இணங்கி ஒழுக இடம் தருகிறது. ஓவ்வொருவரின் அறிவு, நம்பிக்கை, நம்பாமை, வினவுதல், பாரம்பரியம் என்பவற்றில் வேறுபாடு ஏற்கப்படும். பலர் குடும்பம் அல்லது குரு வழிகாட்டலின்படி ஒழுகுவர். அல்லது சமூக நடைமுறையைத் தழுவுவர். இதை வெளிப்படுத்துவதாக இந்து திருமண வைபவ சமஸ்கிருத மொழி ஓதலைக் குறிப்பிடலாம். அதன்படி மணமக்கள் ஒருவர்மேல் ஒருவர் தலையீடின்றிய நம்பிக்கை, வழிபாடு ஊக்குவிக்கப்படுகின்றன. இந்தச் சுதந்திரம் அவர்களுக்கு தரப்படுகிறது.

இந்து மதம் ஆழமானது, அகலமானது, சிக்கலானதும் கூட. இதனால் இந்து மதத்தை ஆழ அறியாதவர்க்கும் அம் மதத்தால் கொள்ளப்படாதவர்க்கும் இந்து மதம் குளப்பத்தைத் தரவல்லது. இந்துக்கள் அல்லாதவர்க்கும் இந்து மதத்தின் கோட்பாடுகள் குளப்பத்தைத் தருகிறது. அன்னியர்க்கு, இந்துக்கள் அவர்களின் இந்து மதம் பற்றிய கேள்விகளுக்கு விளக்கம் தர முடிவதில்லை.

இந்துக்களுக்கும், இந்து மதம் ஒரு தொடக்க நிலயில் இருந்து வரும் இயல்புடையது. இது வியப்பிற்குரியதில்லை. இந்து மத அடிப்படை வேதங்கள். இவை நான்கிலும் உள்ள சமஸ்கிருத மொழி பாக்களின் தொகை பத்தாயிரத்து அறுநூறு. இவற்றை அல்லது இவைபற்றிப் படித்தறிந்தவர்கள் மிகச் சிலரே. அவற்றைப் படித்துப் புரிதல் எத்தகைய சாதனை ஆகலாம் என்பது தெரிகிறது.

வேதங்களின் சாராம்சம், “பகவத் கீதை” - தமிழில் இறைவன் பாடல் - என்ற நூலில் அடக்கப்பட்டுள்ளது. குறள் போன்ற சமஸ்கிருத ஈரடித் தொகுப்புகள், அறுநூற்றுத் தொண்ணூற்று

இரண்டில் வேத சிந்தனைகள் துலக்கப் படுகின்றன. குருஷேத்திர யுத்தகளத்தில் மன நிலை குலைந்து நின்ற அர்ச்சுனனுக்கு, இறைவன் கிருஷ்ணனால் செய்யும் போதனையாக அமைகிறது கீதை. இந்துக்கள் பலர் இந்துக்களின் "விவிலியம்" (டீடைடந) என்று போற்றப்படுவதும், பல மொழிகளிலும் மொழிபெயர்ப்பாகிய இந்த நூலை தமிழ் வடிவத்திலோ, ஆங்கில வடிவத்திலோ படித்துப் பலனடையாதது கவலைக்குரியது.

"இந்து மதம் என்றால் என்ன?" என்ற கேள்விக்கு விடை சொல்வது சுலபமில்லை. அறிஞர்கள் இந்து மதத்தில் இருபத்தைந்து பிரிவுகளை இனங்கண்டிருக்கின்றனர் என்றும், இதில் இணக்கம் இருப்பதாக இல்லை என்றும் கண்டோம். மேலும் பிரிவுகள் இருக்கலாம். அது நிற்க, இக் கேள்விக்குச் சுருக்கமான விடை, "இந்து மதம் உயிரை இறைவனுடன் இணைக்கும் நோக்கம் கொண்டது" எனலாம். இந்த விளக்கம், சமயம், உயிர், இறைவன் என்ற கருவூலங்களை ஏற்பதாகவும், இவை பற்றி பொதுவான தெளிவற்ற கருத்துக்களைக் கொண்டதா கவும் உள்ளது. இந்து மதம் பற்றி சற்று நீளமான விளக்கம், "இந்து மதம் பக்தி, அறிவு, நற்செயல்கள் கொண்டு உயிர்களும் இறைவனும் இணையும் வழியைக் காட்டுவது" என்று அமையலாம்.

இந்து மதம், கடவுளைப் போற்றினும், அது இந்து மதத்தவரை கடவுளை ஏற்கவோ, கடவுளின் சக்தியை ஏற்கவோ பணிப்பதில்லை. ஐயுறவே ஒரு இந்துவின் ஆரம்ப நிலை. இந்து திரு நூல்கள், மெய்யியல் இவற்றுடன் இந்துக்கள் தாமும் உண்மை பற்றிய அறிவைப் பெற பல பிறப்புகள் வேண்டும் என்பதை வற்புறுத்துகிறது. ஆதியும் அந்தமும் இல்லாத பிரபஞ்சத்தை, பரம் பொருளை முழுமையாக அறிதல் மனித ஆற்றலால் முடியும் காரியமா, என்ன?

"தருமம் என்பதை தவறாய் அறிவது
அதர்மம் என்பதை அறியா திருப்பது
உள்ளத்தை அறியும் உளமில் லாதது
பேதம் பார்த்துப் பிரித்தறி யாதது
நடுவகை அதன்பேர் ராஜஸ அறிவு"

(கீதை 18: 31)

"கல்போல் உறுதி கனிபோல் கனிவு
எல்லாம் சமமென எண்ணும் நினைவு
இதுதான் சிலபேர் இயற்றிடும் துறவு
இதிலே அவர்கள் எய்துதல் உயர்வு."

(கீதை 18: 49)

திரு. சி. நம்பியாரூரன்




Blue Ocean
GROUP OF COMPANIES
LEADING THE WAY TO THE FUTURE
LINK
LINK ENGINEERING
BUILD OR BUY YOUR DREAM HOME IN CANADA / SRILANKA
416 904 0022 | +94 777546546
No.32, 2nd Floor, Galle Road, Dehiwala, Sri Lanka.
1 Helicon Gate, Toronto, Ontario, M1G3R7, Canada
Office 1403, Al Manara Tower, Business Bay, Dubai,
1 Meadow Close, Bexleyheath, Kent, DA6 7HB, United Kingdom
No.32 ,Brolin Terrace, Cranbourne North, VIC. 3977, Austraila
CIDA
SLAB
CCI
CIMA


JAASMIN
Banquet
90 NOLAN COURT
Markham, ON L3R 4L9
Call Thevan
Dir: 416 827 6660
905 477 3350 | 905 477 3331
WWW.NEWJAASMIN.CA

அப்பர் தேவாரத்தில் பழமொழிகள்

திருமதி. வனஜா இந்திரகுமார்



மனித வாழ்க்கையில் அனுபவங்களின் பிழிவாகக் காணப்படுபவை பழமொழிகளாகும். கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, அறியும் மனித வாழ்க்கையில் ஒவ்வொருவரும் பலவிதமான அனுபவங்களைப் பெறுகின்றனர். அவற்றுள் சில மகிழ்ச்சிக்குரியன, சில வருத்தத்திற்குரியன, சில நினைத்துச் சுவைக்கத் தக்கன. சில மறந்து விடத்தக்கன. அனுபவம் எதுவாயினும் அதனுடைய சாரத்தைத் தனக்குப் பின் வருவோர் உணருமாறு கூறப்பட்டவையே பழமொழிகள் ஆகும்.

பக்தி இயக்கப் பாடல்கள் இலகுவான மொழி நடையை உடையன. பேச்சு மொழியின் கூறுகளான வழக்குச் சொற்கள், சொல்லடைகள், பழமொழிகள், ஆகியவை கலந்த ஒரு மொழி நடையினையே தேவார மூவரும், பயன்படுத்தியுள்ளனர். திருநின்ற செம்மையே செம்மையாய்க் கொண்ட திருநாவுக்கரசர், தேய்ந்த உடலும் தேயாத உள்ளமுமாய், தாம் வாழ்ந்த காலத்தில் சமயத்தையும், பண்பாட்டினையும், சமூகத்தையும் மீள் உருவாக்கம் செய்யும் அரிய முயற்சியில் ஆழ்ந்திருந்தார். நாட்டுப்புற வழக்குகள் பல அவரது தேவாரப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் பழமொழிகளும் உண்டு.

திருநாவுக்கரசர் தேவாரத்தில் ஒரு பதிகம் முழுவதிலும், ஒவ்வொரு திருப்பாடலிலும் பழமொழி வருமாறு அமைந்துள்ளது. வேறு பல பாடல்களிலும் பழமொழிகள் வருவதையும் காணமுடிகிறது. திருப்பாடல்தோறும் ஒரு பழமொழி அமையப்பெற்ற தன்மையினால் நான்காம் திருமுறையிலுள்ள ஐந்தாம் பதிகம் திருவாரூர்ப் பழமொழிப் பதிகம் என்றே அழைக்கப்படுகிறது.

அப்பரின் தனிச் சிறப்பு என்னவெனில் அவர் திருவாரூர்ப் பதிகத்தில் பத்துப் பாடல்களிலும் கடைசி அடியில் ஒவ்வொரு பழமொழியை வைத்துப் பாடி இருப்பது தான். மெய்யெலாம் வெண்ணீறு என்று ஆரம்பிக்கும் இந்தப் பதிகம் திருவாரூர்ப் பழமொழிப் பதிகம் என்ற சிறப்புப் பெயராலேயே வழங்கப்படுகிறது.

மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான் தாள்தொ ழாதே
உய்யலா மென்றெண்ணி யுறிதூக்கி யுழிதந்தென் னுள்ளம் விட்டுக்
கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலு மாரூ ரரைக்
கையினாற் றொழா தொழிந்து கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வ னேனே.

உடம்பெல்லாம் வெண்ணீறு பூசிய பெருமானுடைய திருவடிகளை வழிபடாமல், கடைத்தேறலாம் என்று நினைத்துச் சமண சமயத்தைத் தழுவி உறியைத் தூக்கிக் கொண்டு திரிந்து மனத்தை அச்சமயத்தில் பறிகொடுத்து, கொய்தற்காக அடியவர்கள் உலவும் பூக்களை உடைய சோலைகளில் குயில்கள் கூவவும் மயில்கள் ஆடவும் அமைந்திருக்கும் திருவாரூரில் உகந்தருளியிருக்கும் பெருமானைக் கையினால் தொழாது காலத்தை வீணாக்கிச் சுவையுடைய இனிய கனி இருக்கவும் அதனை விடுத்துச் சுவையற்ற காய்களை விரும்பிய கள்வனாகி விட்டேனே.

என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய்திட் டென்னையோ ருருவ மாக்கி
இன்பிருத்தி முன்பிருந்த வினைதீர்த்திட் டென்னுள்ளங் கோயி லாக்கி
அன்பிருத்தி யடியேனைக் கூழாட்கொண் டருள்செய்த வாரூ ரர்தம்
முன்பிருக்கும் விதியின்றி முயல்விட்டுக் காக்கைப்பின் போன வாறே.

எலும்புகளை அடித்தளமாக அமைத்து நரம்புகளையும் தோலையும் பொருந்துமாறு இணைத்து எனக்கு ஓர் உருவத்தைக் கொடுத்து, இன்பங்களை நுகர் பொருளாக வைத்து, முன்பு அடியேன் செய்து குவித்திருந்த வினைகளைப் போக்கி அடியேனுடைய உள்ளத்தைத் தம் இருப்பிடமாகச் செய்து அடியேன் உள்ளத்தில் அன்பினை நிலைநிறுத்தி, அடியேனை ஆளுதலைக் கடமையாகக் கொண்ட ஆரூர்ப் பெருமானுடைய திரு முன்னர் இருக்கும் வாய்ப்பினை நெகிழவிட்டு, கைப்பற்றுதற்கு எளிதாய் உண்பார்க்குச் சுவையை உடையதான முயலை விடுத்துக் கைப்பற்றுதற்கும் அரிதாய்க் கைக்கொண்டாலும் உண்பதற்குத் தகுதியற்றதாய் உள்ள காக்கை பின் சென்ற அறிவிலியைப் போல ஆகிவிட்டேனே.

பெருகுவித்தென் பாவத்தைப் பண்டெலாங் குண்டர்கள்தஞ் சொல்லே கேட்டு
உருகுவித்தென் னுள்ளத்தி னுள்ளிருந்த கள்ளத்தைத் தள்ளிப் போக்கி
அருகுவித்துப் பிணிகாட்டி யாட்கொண்டு பிணிதீர்த்த வாரூ ரர்தம்
அருகிருக்கும் விதியின்றி அறமிருக்க மறம்விலைக்குக் கொண்ட வாறே.

முன்பெல்லாம் உடல் பருத்த சமணத் துறவியரின் சொற்களையே செவிமடுத்து அடியேனுடைய தீவினைகளையே பெருகச் செய்து, உளம் உருகி உள்ளத்தில் தேங்கியிருந்த கள்ள உணர்வை அடியோடு நீக்கி, பிணியை உண்டாக்கித் தம் அருகு வரச் செய்து, அடியவனாகக் கொண்டு அடியேனுடைய பிணியைப் போக்கிய ஆரூர்ப் பெருமானுடைய அருகிலே இருத்தற்குரிய நல்வினையில்லாமல் பல்லாண்டுக் காலம், விலை கொடுத்தாகிலும் பெறத்தக்க அறம் விலை கொடுக்காமலேயே கிட்டவும் அதனை விடுத்து, விலையின்றிக் கிட்டிலும் வெறுக்கத்தக்க பாவத்தை விலை கொடுத்துப் பெற்ற அறிவில்லாதவனாக ஆகிவிட்டேனே.

குண்டனாய்த் தலைபறித்துக் குவிமுலையார் நகைநாணா துழிதர் வேனைப்
பண்டமாப் படுத்தென்னைப் பாறலையிற் றெளித்துத்தன் பாதங் காட்டித்
தொண்டெலா மிசைபாடத் தூமுறுவ லருள்செய்யு மாரூ ரரைப்
பண்டெலா மறியாதே பனிநீராற் பாவைசெயப் பாவித் தேனே.

உடல் பருத்தவனாய்த் தலைமயிரை வலியப் பறித்துத் தலையை மொட்டையாக்கிக் கொண்டு, இளமகளிருடைய ஏளனச் சிரிப்பிற்கும் வெட்கப்படாமல் திரிந்த அடியேனை ஒரு பொருளாக ஏற்றுக் கொண்டு, பால் முதலிய பஞ்சகவ்வியத்தால் தூய்மை பெறச் செய்து தன் திருவடிகளைத் தரிசிப்பதற்குத் தொண்டர்கள் எல்லோரும் தம்புகழைப் பாட அதனைச் செவிமடுத்துப் புன்முறுவலோடு அருள் செய்யும் அப்பெருமானை என் வாழ்க்கையின் முற்பகுதியில் அறியாமல் திரவ வடிவமாக இருக்கும் குளிர்ந்த நீரினால் திடப் பொருளாகிய பொம்மையைச் செய்ய முற்படுபவரைப் போல, உண்மையறிவுக்குப் புறம்பான செயல்களில் ஈடுபட்டேன் ஆனேனே.

துன்னாகத் தேனாகித் துர்ச்சனவர் சொற்கேட்டுத் துவர்வாய்க் கொண்டு
என்னாகத் திரிதந்தீங் கிருகையேற் றிடவுண்ட ஏழை யேனான்
பொன்னாகத் தடியேனைப் புகப்பெய்து பொருட்படுத்த வாரூ ரரை
என்னாகத் திருத்தாதே யேதன்போர்க் காதனா யகப்பட் டேனே.

கொடிய பாம்பினை ஒத்தேனாகித் தீயவர் சொற்களைக் கேட்டு, கடுக்காயை உண்பதால் அதன் கறைபடிந்த பற்களை உடையேனாய், என் விருப்பம்போலத் திரிந்து இரு கைகளையும்

இணைத்து அவற்றில் பிச்சை ஏற்ற உணவினை உண்ட அறிவிலியாகிய அடியேன், பொன் போன்ற செவ்விய உடலிலே அடியேனை இருத்திக் குறிப்பிடத்தக்க பொருளாக அடியேனை ஆக்கிய ஆரூர்ப் பெருமானை என் உள்ளத்தில் நிலையாக இருக்கச் செய்யாமல், ஒருவன், விளைத்த சண்டையில் அதனோடு யாதும் தொடர்பில்லாத மற்றவன் அகப்பட்டுத் துன்புறுவது போல நவீனரான சமணர்கள் செய்த செயல்களில் பரம்பரைச் சைவனாகிய அடியேன் அகப்பட்டுப் பல்லாண்டுகள் துன்புற்றேனே.

பப்போதிப் பவணனாய்ப் பறித்ததொரு தலையோடே திரிதர் வேனை
ஒப்போட வோதுவித்தென் னுள்ளத்தி னுள்ளிருந்தங் குறுதி காட்டி
அப்போதைக் கப்போது மடியவர்கட் காரமுதா மாரூ ரரை
எப்போதும் நினையாதே யிருட்டறையின் மலடுகறந் தெய்த்த வாறே.

உலகில் பிறக்கும் பிறவிகளையே நல்கும் நூல்களை ஓதிச் சமணனாய் வலிய மயிர் நீக்கப்பட்ட மொட்டைத் தலையோடு திரியும் அடியேனை நிகரில்லாத வகையில் உவமையிலாக் கலை ஞானத்தை உபதேசித்து என் உள்ளத்தினுள்ளே தங்கி உயிருக்கு உறுதியானவற்றைத் தெரிவித்து ஒவ்வொரு கணமும் அடியவர்களுக்குக் கிட்டுதற்கரிய அமுதமாக உள்ள ஆரூர்ப் பெருமானை எப்பொழுதும் நினையாமல், கறப்பவனொருவன், பயனின்மை மட்டிலன்றிக் காலுதையும் பட்டினைப்பவனாய் இருட்டறையில் மலட்டுப் பசுவை பால் வேண்டிக் கறந்து இளைப்பது போலப் பயனின்றித் துன்புறுதலோடு வாழ்நாளின் முற்பகுதியைக் கழித்தேனே.

கதியொன்று மறியாதே கண்ணழலத் தலைபறித்துக் கையி லுண்டு
பதியொன்று நெடுவீதிப் பலர்காண நகைநாணா துழிதர் வேற்கு
மதிதந்த வாரூரில் வார்தேனை வாய்மடுத்துப் பருகி யுய்யும்
விதியின்றி மதியிலியேன் விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்த வாறே.

இனிச்சென்று சேரும் வழியை அறியாமல், கண் எரியுமாறு தலைமயிரை வலியப்பறித்து, கைகளிலேயே உணவை வாங்கியவாறே உண்டு ஊர்களிலுள்ள பெருந்தெருக்களில் பலரும் காண அவருடைய ஏளனச் சிரிப்புக்கு வெட்காமல் திரியும் அடியேனுக்கு நல்லறிவை வழங்கி ஆரூரில் நிறைந்த தேனாகிய பெருமானை நுகர்ந்து கடைத்தேறும் வாய்ப்பினைப் பெறாத நல்லறிவு இல்லாத அடியேன், விளக்கு இருக்கவும் மின்மினியினுடைய தீயைக் குளிர்காயக் கொள்வாரைப் போலப் பயனுடைய பொருளை விடுத்துப் பயனில்லாத பொருளைக் கைகொண்டு வாழ்நாளை வீணாய்க் கழித்தேனே.

பூவையாய்த் தலைபறித்துப் பொறியற்ற சமண்நீசர் சொல்லே கேட்டுக்
காவிசேர் கண்மடவார்க் கண்டோடிக் கதவடைக்குங் கள்வ னேன்றன்
ஆவியைப் போகாமே தவிர்த்தென்னை யாட்கொண்ட வாரூ ரரைப்
பாவியே னறியாதே பாழூரிற் பயிக்கம்புக் கெய்த்த வாறே.

தலைமயிரை வலியப் பறித்து, நல்வினையில்லாத கீழோராகிய சமணத் துறவியரின் உபதேசத்தைச் செவிமடுத்து, நாகணவாய்ப் பறவை போன்ற இனிய குரலை உடையவர்களாய், குவளை மலர் போன்ற கண்களையும் உடைய பெண்களைக் காண்டலே தீவினை என்று அவர்களை ஒரோவழிக் கண்டவழி ஓடிச் சென்று இருப்பிடத்தின் கதவினை மூடிக்கொள்ளும் கள்ளத்தன்மை உடைய அடியேனுடைய உயிர் சூலைநோயால் நீங்காதபடி காத்து, என்னை அடிமை கொண்ட ஆரூர்ப் பெருமானை அடியேன் உள்ளவாறு அறியாதே மக்கள் குடிபோகிய ஊரிலே பிச்சை எடுக்கச் சென்று இளைத்தவர் போல் ஆகிவிட்டேனே.

ஒட்டாத வாளவுணர் புரமூன்று மோரம்பின் வாயின் வீழக்
கட்டானைக் காமனையுங் காலனையுங் கண்ணினெடு காலின் வீழ
அட்டானை யாரூரி லம்மானை யார்வச்செற் றக்கு ரோதம்
தட்டானைச் சாராதே தவமிருக்க அவஞ்செய்து தருக்கி னேனே.

தன்னோடு நட்புறாத கொடிய அசுரர்களின் மும்மதில்களும் ஓரம்பினால் உருக்குலையுமாறு அழித்தவனாய், காமன் தன் கண்ணினாலும், காலன் தன் காலினாலும், அழியுமாறு அவர்களைத் துன்புறுத்தியவனாய், ஆரூரின் தலைவனாய், பற்று, பகைமை, கோபம், என்ற தீப்பண்புகள் தன்மாட்டு அணுகப் பெறானாய் உள்ள பெருமானை அணுகாமல், தவம், செய்தற்குரிய செயலாய் இருக்கவும், அதனை விடுத்து, பயனற்ற செயல்களைச் செய்து பெருமிதம் கொண்டு திரிந்தேனே.

மறுத்தானொர் வல்லரக்க னீரைந்து முடியினொடு தோளுந் தாளும்
இறுத்தானையெழின் முளரித்த விசின்மிசையி ருந்தான்றன் தலையி லொன்றை
அறுத்தானை யாரூரி லம்மானை யாலால முண்டு கண்டம்
கறுத்தானைக் கருதாதே கரும்பிருக்க இரும்புகடித் தெய்த்த வாறே.

தேர்ப்பாகன் கூற்றை மறுத்துக் கயிலையைப் பெயர்க்க முற்பட்ட வலிமை உடைய இராவணனுடைய பத்துத் தலைகளும் தோள்களும் அடிகளும் செயலறும்படி நசுக்கியவனாய், அழகிய தாமரை மலரிலிருந்த பிரமன் தலையில் ஒன்றை அறுத்தவனாய், விடமுண்ட நீலகண்டனாய் உள்ள ஆரூர்ப் பெருமானை மனத்து நினையாமல் மெல்லுதற்கு ஏற்றதாய் மிகுசுவை உடையதாய் இருக்கும் கரும்பை விடுத்து, கடிக்க இயலாத சுவையற்ற இரும்பைக் கடித்து அடியேன் வாழ்வின் முற்பகுதியில் இளைத்தேனே.

முதற் பாடலில் தான் சமண சமயத்தில் சேர்ந்ததற்கு இறைவனின் அருள் இல்லாதைக் கூறி பின் இறைவன் தனக்கு அருகில் அழைப்பதற்காகச் சூலைநோயைக் கொடுத்ததையும், பின்பு கடைத்தேற அவர் அருளியதையும் ஒவ்வொரு பாடல் மூலமும், அற்புதமான கருத்துக்களைப் பொதித்து பழமொழியையும் ஈற்றடியில் வைத்து எமக்கு விளக்கியிருப்பது மிகவும் அற்புதம்.

உடம்பு ஒரு கோயில். அது வெளியுலகில் பல விதமான சௌகரியங்களும் கிடைக்காவிட்டாலும், உள்ளுலகில் இறைசக்தி மிக்கதாக இருக்கிறது. அங்கு நீங்கள் மகாராஜாக்கள். அந்நிலையை உணர்ந்து அனுபவியுங்கள்.

நாமிருக்கும் இடத்தில் இறைத்தியானம் கொண்டால் அவ்விடம் இறைவன் சந்திதானம் ஆகிறது. நாராயண வழிபாடு எங்கு நடக்கிறதோ அவ்விடம் வைகுண்டம் ஆகிறதே. வைகுண்டம் தேடீ எங்கும் போக வேண்டாம்.

உங்கள் துன்பங்களை இறைவனிடம் அர்ப்பணியுங்கள். மற்றவர்களுக்குச் சொன்னால் அவர்கள் கவலைப்படுவார்கள். ஏன் மற்றவர்களைத் தேவையில்லாமல் கவலைப்படுத்த வேண்டும்?

நால்வரும் பாடிய திருத்தலங்கள்

திருமதி. இரஞ்சி. சபேஸ்வரன்

பக்திநெறிக் காலமாகிய பல்லவர் காலத்தில் சைவ சமயத்திற்குப் புத்துயிர் ஊட்டியவர்கள் நால்வர் எனப் போற்றப்படும் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார். திருநாவுக்கரசு நாயனார் சுந்தரமூர்த்தி நாயனார். மாணிக்கவாசக சுவாமிகள் ஆகியோர். இவர்கள் பல்வேறு தலங்களையும் தரிசித்து பாடல் பாடி அற்புதங்கள் நிகழ்த்தி சைவத்தின் மகிமையை உலகறியச் செய்தவர்கள். இதையே

சொற்கோவுந் தோணிபுரத்தோன்றல
மென்சுந்தரனுமஞ்
சிற்கோல வாதவூர் தேசிகரும் முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறை நூலெங்கே
எந்தைப் பிரானஞ் செழுத்தெங்கே

எனும் பாடல் அறியத் தருகிறது. இத்துணை பெருமை மிக்க நால்வரையும் தனித்தனியே வசீகரித்துப் பாடல் பெற்ற ஒவ்வொரு தலமும் உயர்ந்தவை. அப்படியிருக்க இந்நால்வராலும் ஒருங்கே பூசிக்கவும் ஸ்தோத்தரிக்கவும் பெற்ற தலங்களின் சிறப்பு எத்துணையென்பது நாம் உணர்வோம். அவை சரியாகக் கணக்கிடப் படாவிடினும் பன்னிரண்டு என்று அறியப்படுகிறது. அவை வருமாறு:

சிதம்பரம்

பூலோக கைலாயம் என்றும் ஆகாயத்தலம் என்றும் பிரசித்தி பெற்ற இத்தலத்தில் திருமூலநாயகர் சிவகாமியம்மை சமேதராய் இறைவன் அருங்காட்சி தருகிறார். இராஜராஜன் வேண்டுதலின் பேரில் நம்பியாண்டார் நம்பிகளால் பொல்லாப்பிள்ளையாரின் துணைகொண்டு திருமுறைகள் கண்டெடுக்கப்பட்ட தலம் என்ற பெருமையையும் பெரியபுராணம் எனும் திருத் தொண்டர் புராணம் சேக்கிழார் பெருமானால் அரங்கேற்றம் செய்யப்பட்ட தலம் என்ற பெருமையையும் இது பெறுகிறது. சோழ நாட்டு இத்தலத்தில் சிற்றம்பலம். பொன்னம்பலம். பேரம்பலம் நிருத்தசபை இராசசபை என்ற ஐந்து பெருமன்றங்களுண்டு.

“செல்வமதி தோயச் செல்வமுயர்கின்ற செல்வர் வாழ் தில்லைச் சிற்றம்பலமே” என்று சம்பந்தர் சிறப்பிக்கின்றார். அங்குள்ள இறைவனின் ஆடற்சிறப்பை “அத்தா உன் ஆடல் காண்பேன் அடியேன் வந்தவாறே” என்று அப்பர் வியந்துருக சுந்தரரோ “கடுத்தாடு கரதலத்தில் தமருகமும் எரியகலும் கரிய பாம்பும் பிடித்தாடிப் புலியூர்ச் சிற்றம்பலத்து” பெருமானைப் பெறு மனமே என்று பணிக்கிறார்.

மாணிக்கவாசர் திருவாசகம் பாடியதை பெருமானே பிராமண வடிவம் கொண்டெழுதி “பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடு” எனச் சொல்லி அதையும் கைப்பட எழுதி “மாணிக்க வாசகன் சொல்ல சிற்றம்பல முடையான் எழுதியது” என்று கையெழுத்திட்டு ஓலையை பஞ்சாட்சரப்படியில் வைத்து மறைந்தாராம். “வித்தகனார் விளையாடல் விளங்கு தில்லையிலே கண்டேன்” என்று பிரமிக்கிறார் வாதவூரர். கோயில் என்றால் சிதம்பரம் எனுமளவு பெருமைகள் வாய்ந்தது இத்தலம்.

திருவாரூர்

நாகபட்டினத்திற்கு மேற்கில் அமைந்துள்ள இத்தலம் திருமூலட்டானம் எனவும் படுகிறது இங்கு இறைவனும் இறைவியும் வன்மீகநாதன் அல்லியங்கோதை அம்மையாகக் காட்சி தருகின்றனர். மனுநீதி கண்ட சோழர் அரசாண்ட இராசதானி என்ற பெருமையும் இதற்குண்டு. சித்தம் தெளியவும் பிறவி யறுக்கவும் கொடிய வினைகள் அகற்றவும் இவ்விறைவனைத் தொழுது வீடு பேறடையலாமென மூவருமே தம் பாடல்களில் கூறியிருப்பது திருவாரூர் இறைவனிடம் சரணாகதியடைய வைக்கிறது. இளவல் சம்பந்தர்

"தந்தையார் போயினார் தாயரும் போயினார் தாமும் போவார் கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கிறார்" என்றும் கருவாகி தழைத்து மூளையும் கருநரம்பும் வெள்ளெலும்பும் சேர்த்து பிறந்து தாயொருத்தியால் வளர்க்கப்படும் உயிரும் "கடை போகாரால் மருவாகி நின்னடியே மறவேன்" என்று அப்பரும் வயல்களையும் சோலைகளையும் பசிய திடல்களையும் மக்களுக்காய் தரும் திருவாரூர் தந்தையே "மணமென மகிழ்வர் முன்னே மக்கள் தாய் தந்தை சுற்றம் பிணமெனச் சுடுவர்" ஆகையால் அந்தப்பிறவியே வேண்டேன் என்று சுந்தர ரும் மனமுருகிப்பாடுகின்றனர். தோழர் சுந்தரர் பொருட்டுத் தியாகேசர் நள்ளிருளில் பரவை யாரிடம் தூது சென்றாராம்.

"ஓங்கெயில் சூழ் திருவாரூர் உடையானே" உன் பூங்கழல்கள் அன்று எவையும் புகழ மாட்டேன் என்று மணிவாசகரும் தன் திருப்புலம்பலில் கூறியுள்ளார்.

திருவானைக்கா

ஜம்புகேஸ்வரரும் அகிலாண்ட நாயகியும் எழுந்தருளிய இத்தலம் ஜம்புகேஸ்வரம் என்ற பெயருடன் ஸ்ரீரங்கத்தின் அருகேயுள்ளது. ஊன் உணவைப் படைத்த கண்ணப்பர் அன்பிற்கும் அது அபகாரம் தீது என்று மருண்ட சிவகோசரியார் அன்பிற்கும் கட்டுண்ட தன்மையுமான இறைவனை "ஊனொடுண்ட னன்றென ஊனொடுண்டல் தீதென ஆன தொண்டரன்பினான" திருவானைக்கா திருத்தலத்தைச் சார்ந்துள்ளான் வழிபடுங்கள் என்பார் சம்பந்தர். இறைவனின் சிறப்புகளைப் பாடிய அப்பர் ஓரிடத்தில் "செத்தால் வந்துதவுவார் ஒருவரில்லை சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர" ஆதலால் தேகபந்துக்களை விடுத்து நீர் வளமிக்க காவ-ரிக்கரையில் அமைந்த பெருமானைச் சரணடையுங்கள் என்பார்.

மரக்கலம் பொருந்திய கடலின்கண் நஞ்சு தோன்றதேவர்கள் தம்மைத் தடுத்தாற்பொருட்டு சூழ்ச்சியுடன் ஈசனை அணுக அவரும் அதையுண்டு "உண்ணென உண்டிருள் கண்டன் ஆயினான்" அப்படிப்பட்ட இறைவன் எம்மையும் ஆள்வார் என்பார் சுந்தரர். மாணிக்கவாசகரோ திருவம்மானையில் "தென்னானை காவாதைத் தென்பாண்டி நாட்டானை" மூவுலகும் அழிந்தபின்னும் இருப்பவனுமான இறைவனை வணங்குவோம் என்கிறார்.

வெள்ளையானையும் சிலந்தியும் வழிபட்ட தலம் எனவும் இது பெருமைப் படுத்தப்படுகிறது.

திருவெண்காடு

சிதம்பரம் போன்றே நடராஜ சந்நிதி அற்புதமாக அமைந்த தலம் இதுவாகும். சுவேதாரண்யேசுவரர் பிரம்வித்யா நாயகி சமேதராக வீற்றிருக்கும் இறைவன் மறையவர் சுவேதகேதுவின் உயிரைக் கவர வந்த காலனை உதைத்தார் என்பதால் சம்பந்தர் "எமன்துாதர் ஆலமிடற்றடியாரென்றார் அஞ்சுவர" என்றும் "வெண்காட்டு முக்குளநீர் தோய் வினை யாவரவர் தம்மை தோயாவாந் தீவினையே" என்றும் கூறுகிறார். கருடனை உடைய திருமாலும் நான்கு முகங்களையுடைய பிரமனும் மேலும் கீழும் தேடிச்சென்றும் காணவியலாத அழற்பிழம்பாய் நின்றவரும் தவம் புரிந்த ஐராவதம் என்ற வெள்ளை யானைக்கு "வேண்டும் வரங் கொடுப்பாடு வெண்காடு மேவிய விகிர்தனாரே" என்பதும் அப்பரின் வாக்கு.

பூதம் பாட புவனியைக் காப்பாற்றும் பொருட்டு ஆடவல்லவனும் ஏழிலோசை நித்தரும் என்று இறைவனை வியந்த சுந்தரர் "சித்தர் சூழ வேதமோதித் திரிவதென்னே வேலைசூழ் வெண்காடனீரே" என்பார். குருந்த மரநிழலில் விருந்தாளியாக ஈசன் இருந்ததை "வெண்காடதனில் குருந்தின் விருந்தினனாகி" என்று வாதவூரர் குறிப்பிட்டுள்ளார். ஈசனைத் தவம் செய்து சூலம் பெற்ற மருத்துவன் அதைத் தவறாகப் பயன்படுத்த சினமுற்ற ஈசன் நந்தியைத்தூது அனுப்பினார். மருத்துவன் நந்தி மேல் சூலத்தை எய்ய அது ஒன்பது துளைகளை இட்டுச் சென்றதாம். சந்நிதிக்கு எதிரில் உள்ள நந்தி சிலையில் இத்துளைகள் உள்ளன என்பர்.

ஸ்ரீவாஞ்சியம்

பூமகளுக்கும் திருமகளுக்கும் ஏற்பட்ட பிணக்கால் திருமகள் திருமாலை விட்டுப்பிரிய விஷ்ணு சிவபெருமானைப் பூசித்து இட்சுமியை அடைந்ததால் திருவை வாஞ்சித்த தலம் திருவாஞ்சியம் எனப்பட்டது. வாஞ்சிலிங் கேஸ்வரரும் மங்களநாயகியும் வீற்றிருக்கும் இத் தலம் சோழநாட்டில் அமைந்துள்ளது. இயமன் எல்லா உயிர்களையும் கவரும் பாவந்தீர வழிபட்டு வாகனமாகும் பேறு பெற்றான் எனப்படுகிறது. எமனுக்கு இங்கு தனிக்கோயில் உண்டு.

கொன்றை மலர் ஊமத்தம் மலர் வில்வம் ஆகியவற்றைத் தம் பொன் போன்ற சடையில் சூடிய சிவபெருமான் விரும்பியுறையுமிடம் "வண்டிசை செய்திரு வாஞ்சியம்" என்று சம்பந்தர் இறைவன் சூடிய மலர்களைக் குறிப்பிட அவர் படையும் பூதமும் பாம்பும் புல்வாயதள் உடையும் என்று ஈசனின் அணி-கலன்களைக் குறிப்பிட்ட அப்பர் சுவாமிகள் "பூம்பொழில் வாஞ்சியம்அடைய வல்லவர்க் கல்லலொன்றில்லையே" என்பார். இருவரும் திருவீழிமிழலையிலிருந்து புறப்பட்டு இங்கு வந்து தரிசித்தனர் என்பர். பசுக்கூட்டத்தில் இளைய ஆனேறு எழுப்பிய ஒலிக்கஞ்சி வயல்களில் வாளை மீன்களும் கயல்களும் ஒளிக்கின்றன என அவ்வூர் சிறப்பைத் தன் பாடல்களில் வெளிப்படுத்திய சுந்தரர் "வாஞ்சித்துறையும் ஒருவனார்அடியாரை ஊழ்வினை நலிய வொட்டாரே" என்பார். "பாகம் பெண்ணோடாயனி பரிசும் திருவாஞ்சியத்தில் சீர்பெற இருந்து" என்று கீர்த்தித்திருவகவலில் கூறுகிறார் மாணிக்கவாசகசுவாமிகள். இங்குள்ள துர்க்கை சந்நிதியும் நடராஜமூர்த்தமும் விசேடமானவை.

திருவிடைமருதூர்

"திருவிடை மருதூர் தெரு அழகு" என்ற பழமொழிக்கேற்ப சோழநாட்டின் மத்தியில் அம்பாசமுத்திரத்திற்கு அருகில் பெருமையுடன் திகழும் மகாலிங்கத்தலத்தில் மகாலிங்கேஸ்வரரும் பெருநலமாமுலை நாயகியும் வீற்று உள்ளார்கள். உலகமக்கள் கூடிச் செம்மையாளராய் தைப்பூசத்திருநாளில் நீராடி வணங்குவது "பூசம் புகுந்தாடிப் பொலிந்தழகாய ஈசனுறைகின்ற விடைமருதீதோ" என்று அதிசயிக்கும் திருஞானசம்பந்தர் போலவே தேவர்கள் நான்கு வேதங்களை ஒலித்தும் பூதங்கள் கூத்தாடியும் வணங்குவது "பக்தர்கடங்கண் மேலை ஏதங்கடீர நின்றாரிடைமரு திடங்கொண்டாரே" என்கிறார் திருநாவுக்கரசு நாயனார்.

சுந்தரமூர்த்தி நாயனாரோ தான் முற்பிறப்பிற்செய்த வினைகள் இப்பிறப்பிலும் வந்து துன்புறுத்தலால் மூர்க்கனாகி காலமெல்லாம் போயின இறைவா "எந்தை நீ எனக்குய் வகையருளாய் இடைமருதுறை யெந்தைப்பிரானே" என இரந்து நிற்பார். எந்தையெந்தாய் என்னை ஆட்கொண்ட பிரான் "இடைமருதில் ஆனந்தத்தேனிருந்த பொந்தைப் பரவி நாம் பூவல்லி கொய்யாமோ" எனத்தேன் பொழிவார் மாணிக்கவாசகர். இத்துணை சிறப்பு வாய்ந்த இத்திருமுறைகளை நித்தமும் ஓதுவதில் நாமென்ன தடை காண்போமோ.

திருப்புறம்பயம்

பிரளய காலத்தே வெள்ளம் ஊரினுள் புகாதவாறு தடைப்பட்டு நின்றமையால் இப்பெயர்பெற்றது. சாஷிநாதேசவரரும் கரும்பன்னசொல்லம்மையும் வீற்றுள்ள இத்தல விநாயகரை பிரளயம் காத்த விநாயகர் என்பர். ஒரு வணிகப்பெண்ணிற்காக இறைவன் மதுரை சென்று சாட்சி கூறியதால் சாட்சிநாதர் எனப்படுகிறார்.

"திறம்பயனுறும் பொருள் தெரிந்துனரு நால்வர்க்கு அறம் பயன் உரைத்தனை புறம்பயம் அமர்ந்தோய்" என்று சம்பந்தரும் "ஆறுநூறாயிரவர்க் காடல்காட்டிப் புத்தகங்கைக் கொண்டு புலித்தோல் வீக்கிப் புறம்பயம் நம்மூர்" என்று ஆறுநூறாயிரத்து அறுபது தேவர்களுக்கும் தன் கூத்தினைக் காணும் அருள்பாலித்தார் என்று அப்பரும் கூறுகின்றனர். பதி சுற்றம் பெற்ற மக்கள் பெண்டிர் மனைவாழ்க்கை நினைப்பொழி மடநெஞ்சே என்று உருகும் சம்சாரி சுந்தரர் "புதிய பூமலர்நெல்லி நாறும் புறம்பயத்தொழப்

போதுமே" என்கிறார். வாதவூரர் தன் வரிகளில் "புறம்பயம் அதனில் அறம்பல அருளியும்" என்பார்.

இத்தகைய மேன்மை வாய்ந்த இவ்வாலயத்தின் அம்பிகைக்கு பௌர்ணமி தின வழிபாடுகள் சிறப்பாக நடைபெறுகின்றன.

திருவையாறு

சப்ததானம் என்று வழங்கும் ஏழு தலங்களில் முதன்மையானது. ஐந்து ஆறுகள் சங்கமிக்கும் இடத்தில் தஞ்சைமாவட்டத்தில் பஞ்சநதேச்வரர் தர்மஸம்வர்த்தனி என்றும் செம்பொற்ஜோதீச்வரர் அறம்வளர்த்த நாயகி என்றும் சிறப்புறும் இறைவன் இறைவியே காட்சி தருகின்றனர். "வலம்வந்த மடவார் கணமாட முழவதிர மழையென்றஞ்சிச் சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்குந் திருவை யாறே" என்று அழகாகத் தன் தமிழில் சம்பந்தர் பெருமான் கூறுகிறார். அப்பர் பெருமானுக்கு கயிலைக் காட்சி இறைவன் இங்குதான் அளித்தாராம். ஆதலாற் புல்லரித்த சுவாமி "ஐயாறடைகின்றபோது காதன் மடப்பிடியோடுங் களிறு வருவன கண்டேன்" என்று தான் முன்னெப்போதும் கண்டு அறியாதன கண்டேன் என வியக்கிறார்.

சுந்தரரும் சேரமான்பெருமானும் வர காவிரியாற்றில் பெருவெள்ளம் பிரவகித்ததாம். எதிர்க்கரையில் நின்ற சுந்தரர் "ஐயாறுடைய அடிகளோ" என்றுரைக்க வெள்ளம் வடிந்து வழிவிட்டதாக ஐதீகம். இவ்வாறே சிவாச்சார-யார் ஒருவர் காசியாத்திரை சென்று உரிய காலத்தில வரத்தாமதமாக ஈசன் தாமே அவ்வுரு க்கொண்டு தம்மைத்தாமே பூசித்தாராம். இவ்வற்புதத்தை மாணிக்கவாசகர் "ஐயாறு அதனின் சைவனுமாகிய" என்பார். இங்கு நந்திதேவர் திருமண உற்சவமும் சித்திரைப் பெருவிழாவும் சிறப்பானவை.

சீர்காழி

சிதம்பரத்திற்குத் தெற்கேயுள்ள இவ்வூரில்தான் சம்பந்தர் அவதரித்தார். இங்கு அவருக்குத் தனி ஆலயமும் ஞானப்பாலுண்ட தடாகமும் உள்ளது. பிரமன் வழிபட்டதால் பிரம்மபுரம் என்றும் சூரனுக்குப் பயந்த தேவரின் புகலிடமாதலால் புகலியென்றும் உரோச முனிவர் வழிபட்டதால் கழுமலம் என்றும் இன்னும் பல பெயர்களாலும் வழங்கப்படுகிறது.

தோணியப்பர் பெரியநாயகி என்றும் பிரமபுரீச்வரர் திருநிலைநாயகி எனவும் அழைக்கப்படும் இவ்விறைவன் இறைவிமேல் சம்பந்தர் அறுபத்தைந்து தேவாரங்களுக்கு மேல் பாடியுள்ளார். "கருமை பெற்ற கடல் கொள்ள மிதந்ததோர் காலமிதுவெனில் பெருமை பெற்ற பிரமாபுரமேவிய பெம்மானிவன்றே" என்று சர்வ சங்காரகாலத்தில் கரியகடல் பொங்கி வந்து உலகைக் கொண்ட போதும் தோணிபுரமாய் மிதந்ததை கூறுகிறார். "சிந்தித்து எழுமனமே நினையாமுன் கழுமலத்தை பந்தித்த வல்வினை தீர்க்க" என்பார் அப்பர்.

சுந்தரரும் "கற்பனை கற்பித்த கடவுளையடியேன் கழுமலவளநகர்க் கண்டு கொண்டேனே" என்று தன் பிரமிப்பைப் பகிர "மாச வேறுக்கும் பழம் பொருள் தன்னை" என்றும் "கழுமலமதனிற் காட்சி கொடுத்தும;" என்றும் சீர்காழியின் பெருமை கூறுவார் வாதவூரர். இவ்வாலயம் தருமபுர ஆதீன பரிபாலனத்திற்குட்பட்டு சீராகப் பராமரிக்கப்பட்டு வருவது சிறப்பான விடயமே.

திருக்கழுக்குன்றம்

பிரமனின் மானச புத்திரர்கள் கழுகுகளாக மாறி இங்கு பிரசாதம் உண்ண வருகின்றனர் என்பது அடியார்களின் நம்பிக்கை. தொண்டை நாட்டுத்தலமான இங்கு இறைவன் வேதகிரீச்வரர் பெண்ணிலாளம்மை வடிவாகக் காட்சி தருகிறார். பெருமான் உமையம்மையைக் காதலித்து வீற்றிருக்கும் இடம் ஆதலால் "பெண்மகள் தன்னோடொரு பாகம் காதல் செய்தான் காதல் செய் கோயில் கழுக்குன்றே" என்பார் சம்பந்தர். இறைவனின் அற்புதச் செயல்களை வியந்து பாடும் அப்பர் சுவாமிகள் தன்னைக் காக்கும் காவலன் "கழுக்குன்றம் அமர்ந்தான் தன்னைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே"

எனத் திருப்தியுறுகிறார்.

பலநிற மணிகளோடு முத்தினையும் தள்ளிக் கொண்டு பாய்ந்து ஒலிக்கும் அருவி களையுடைய திருக்கழுக்குன்றிலேயுள்ள பெருமானை "இறங்கிச் சென்று தொழுமின் இன்னிசை பாடியே" என்று சுந்தரர் பணிக்கிறார். "கணக்கிலாத் திருக்கோலம் நீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே" என்பார் இங்கு குருவடிவாய் இறைவனைத் தரிசித்த வாதவூரர். இத்தலத்திற்கு அண்மையில் நால்வர் கோயில் அமைந்த நால்வர்கோயில்பேட்டை எனுமிடம் உள்ளது.

திருப்பூவனம்

பாண்டிய நாட்டுத்தலமான திருப்பூவனத்தை தென்னாட்டு மூவேந்தர்களும் மிதிக்க அஞ்சி மறுகரையிலிருந்தே தரிசிக்க இறைவன் நந்தியை விலகச் செய்து தரிசனம் கொடுத்தாராம். ஆதலால் இங்குள்ள நந்தி சாய்ந்துள்ளது என்பர். பூவணநாதர் மின்னனை யாளம்மை சமேதராக இறைவன் காட்சி தருகிறார். இதையே சம்பந்தரும் "முடிசேர் தென்னர் சேரர் சோழர்கள் தாம் வணங்கும்.......செம்மையோங்குந் தென்திருப் பூவணமே" என்கிறார்.

அப்பர் சுவாமிகளும் "பொழில்திகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே" எனப் பூவனஇறைவன் சிறப்புகளைப் பாடுகிறார். எண்ணியவர்க்கும் பண்ணிசைப்பவர்க்கும் வினை தீர்க்கும் "புண்ணியனார் உறை பூவணம் ஈதோ" எனச் சுந்தரரும் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். "பூவணமதனிற் பொலிந்திருந்தருளித் தூவண மேனி காட்டிய தொன்மையும்" என மாணிக்க வாசகரும் சிறப்பித்துள்ளமை காணமுடிகிறது. குலசேகர பாண்டியன் இந்நகரில் முடிசூடிக் கொண்ட விழாவில் நெற்கதிரை முடியாகச் சூடிக்கொண்டானாம் ஆதலால் நெல்முடிக்கரை என்ற பெயரும் இதற்குண்டு.

காஞ்சிபுரம்

தொண்டை நாட்டுத் தலைநகரான காஞ்சிபுரம் வரலாற்றுக்கு முற்பட்ட மிகச்சிறப்பு வாய்ந்த நகரம் என்பது யாத்திரிகர் குறிப்பிலிருந்தும் காஞ்சி மகிமை என்ற நூலிலிருந்தும் அறியப்படுகிறது. இங்கு பல்வேறு பாடல் பெற்ற தலங்கள் இருப்பினும் கச்சித்திருவேகம்பம் என்று போற்றப்படும் ஸ்ரீஏகாம்பரநாதர் கோயிலே பெரிய கோயில் எனச்சிறப்பிக்கப்படுகிறது. ஏகாம்பரநாதர் ஏலவார்குழலி காமாட்சியம்மை சமேதராய் இறைவன் அருள்பாலிக்கிறார்.

"ஏர்கொள் கச்சித் திருவேகம்பத்த உறைவானை அல்லது உள்காது எனதுள்ளமே" என சம்பந்தர் பாட கல்விக்கு இருப்பிடமாக காஞ்சி நகர் விளங்கியதை சிறப்பித்து அப்பரும் "கல்வியைக் கரையில்லாத காஞ்சி மாநகர்" என்பார். சிந்திப்பாரவர் சிந்தையுள்ளானை வேண்டி தன் இடக்கண் ஒளிபெற்ற சுந்தரர் "காலகாலனைக் கம்பன் எம்மானைக் காணக்கண் அடியேன் பெற்றவாறே" என்று தான் அனுபவித்த அற்புதத்தைப் பாடுகிறார். திருவாசகத்தில் கச்சித்திருவேகம்பன் செம்பொற்கோயில் என்று சிறப்பிக்கும் வாதவூரர் "ஏகம்பத்துறை எந்தாய் போற்றி பாகம் பெண்ணுருவானாய் போற்றி" என்று வணங்குகிறார். கோயில்கள் நிறைந்து எப்போதும் திருவிழாக்கள் நடைபெறும் நகராதலால் இந்நகர் விழவறாக்காஞ்சி எனப்புகழப்படுகிறது.

இவ்வாறு அப்பரும் சுந்தரரும் ஆளுடைப்பிள்ளையும் அருள்மணிவாசகரும் பொருள் உணர்ந்தே பாடிய திருமுறைகளில் சிறப்பிக்கப்பட்ட இத்திருத்தலங்கள் சைவத்தின் தொன்மையையும் சிறப்பையும் பறைசாற்றுவன. இத்தலங்களைத் தரிசிக்கும் பேறுபெற்றோர் பிறவிப் பயன் அடைந்தவரே ஆவார்.

ஆக்கை யாற்பயனேன் அரன்
கோயில் வலம்வந்து
பூக்கையால் அட்டிப்போற்றி என்னாதஇவ்
ஆக்கையாற் பயனென்.



SELLING YOUR HOME?
HIRE THE FLEX COMMISSION BROKER
SURESH
OFFERS FLEXIBLE COMMISSION RATES
Suresh Sellathurai CMI
Broker & Certified Home Inspector
416-844-5626
416-321-2228
Suresh and Team

சனிப்பிரதோஷ விரதம்

அமிர்தி புவனேந்திரா

"ஒரு நாமம் அறிய ஓர் அந்தணனாக ஆண்டு கொண்டான் ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இலாற்கு ஆயிரந்திரு நாமம் பாடி நாம் தெள்ளோணம் கொட்டாமோ" என்று மணி வாசகப்பெருமான் தேன் சொட்டும் திருவாசகத்தில் விளக்குகின்றார் . உருவம் ஒன்றின்றி எங்குமாய் எல்லாமாய் வியாபித்தி ருக்கும் இறைவனை பல வடிவங்களில் பல ரூபங்க ளில் வழிபடுகின்றோம்

சனிக்கிழமையில் வரும் பிரதோஷம் சனி பிரதோஷம் என்றும், ஈஸ்வரனையும், சனிஸ்வரனையும் அன்று விரதமிருந்து வழிபடுவதால் சனி பிரதோஷம் எனவும் அழைக்கப்படுகிறது. சாதாரண பிரதோஷ வழிபாடு தரும் பலன்கள் போன்று ஆயிரம் மடங்கு பலன் தரக்கூடியது இந்த சனி பிரதோஷம். சிவபெருமான் தேவர்களை காப்பாற்ற ஆலகால நஞ்சை உண்ட நாள் சனிக்கிழமை. எனவே, பிரதோஷ நேரம் சனிக்கிழமை அன்று வரும் சனி பிரதோஷம் என சிறப்பு பெறுகிறது.

கைலாய நாதனான சிவனை வழிபடும் முதன்மையான விரதங்களில் பிரதோஷமும் ஒன்றாகும். நித்தியபிரதோஷம் மாதப் பிரதோஷம் என ஐந்துவகை பிரதோஷங்கள் இருந்தாலும் சனிபிரதோஷ விரதமானது துன்பங்களைப் போக்கி அருளைக் கொடுப்பதாகும்.

மாதொரு பாகனாக விளங்கும் சிவபெருமான் தன் அன்பர்களைக் காத்தருளும் பொருட்டு நடாத்தும் அற்புதங்க ளில் ஒன்றுதான் ஆலகால விஷத்தை மிடரினில் அடக்கி நஞ்சணிகண்டன் எனும் திரு நாமம் பெற்றார். இறைவன் இவ்வாறு நஞ்சை உண்டு பக்தர்களை காத்தருளிய வரலாறு தான் பிரதோஷம் தோன்றிய தோற்றமாகும்.


இந்திரன் தேவர்கள் திருப்பாற் கடலைத் கடைய முயன்றார்கள். மந்ர கிர-ியை மத்தாகவும் வாசுகி எனும் நாகத்தை கயிறாகவும் அமைத்தார்கள் திருமால் கூர்மமாகி மந்கிரகிரியென்னும் மலையை தன் முதுகில் தாங்கினார் அசுரர்கள் தலைப்புறமும் தேவர்கள் கால்ப்புறமும் நின்று திருப்பாற்கடலை கடையத்தொடங்கினார்கள் இவ்வாறு பாற் கடலைத் கடைந்து கொண்டிருக்கும் போது வாசுகி பாம்பு வலி தாங்காது தனது ஆலகால விஷத்தைக் கக்கியது. வானவர்கள் நடு நடுங்கி சிவ-னாரிடம் ஓடோடி தஞ்சம் புகுந்தனர். ஆலகால விஷம் வெப்பமுடன் உலகெங்கும் பரவியது தேவர்கள் அஞ்சி நடுங்கினர் திருக்கைலாயந-ாதனிடம் சென்று தஞ்சம் புகுந்தனர் தேவரீர் எம்மைக் காத்தருள வேண்டும் என்று வேண்டினர் கருணைக்கடலான மகாதேவர் தம்மை சரணடைந்தவர்களை காக்கும் பொருட்டு மனமிரங்கி அருள திருவுளங் கொண்டார்.

சிவபெருமான் சக்தியுடன் நந்திதேவரின் இரண்டு கொம்புகளின் நடுவே அவ்விஷம் பரவியது, இறைவன் அந்தக் கொடிய விஷத்தை அடியவர்களான அமரர்கள் உய்ய அமுதம் போல் உண்டருளினார். அந்த விஷம் உள்ளே சென்றால் உள் முகத்தில் உள்ள ஆருயிர்கள் அழிந்துவிடும். உமிழ்ந்தால் வெளி முகத்தில் உள்ள ஆருயிர்கள் அழிந்துவிடும் ஆதலால் உண்ணாமலும், உமிழாமலும் இருக்க கருணையே வடிவமான அனைத்து உயிர்களுக்கும் அன்னையாக இருக்கும் பார்வதி தேவி இறைவன் கண்டத்தில் கை வைத்து மேலேயும் வராமல் கீ ழேயும் போக விடாமல் தடுத்தாட்கொண்டாள். அதனால் இறைவனுடைய கழுத்தானது நீல நிறமாக மாறி நீல கண்டன் என பெயர் பெற்றார். அப்பர் சுவாமிகள் தனது திருவங்கமாலையில் கண்காள் காண்மின்களோ கடல் நஞ்சுண்ட

கண்டன் தன்னை என்றும் கடலதனில் அமுதொடு கலந்த நஞ்சை மிடரினில் அடக்கிய வேதியனே என்று திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் இறைவனது நீல கண்டத்தைப்புகழ்ந்து பாடினார்கள்.

இந்நஞ்சுண்ட காலத்தையே பிரதோஷ காலம் எனப் போற்றி வணங்குகின்றோம் , வளர்பிறை, தேய்பிறை என்ற இரண்டு பட்சங்களிலும் வரும் திரயோதசி திதியே பிரதோஷமாகும் திரு நீலகண்டர் ஆலகால விஷத்தை உண்ட நாள் சனிக்கிழமை தினமாகையால் சனிப்பிரதோஷம் சிறப்புப் பெறுகின்றது இத்தகைய சிறப்பு வாய்ந்த சனி பிரதோஷத்தன்று எவ்வாறு விரதம் இருக்க வேண்டும் என்று பார்க்கலாம். இன்று நாள் முழுக்க முழு விரதம் இருந்து, நீர் ஆகாரம் மட்டும் எடுத்து, மாலையில் பிரதோஷ வேளையில் சிவன் கோயிலுக்குச் செல்ல வேண்டும்.

பிரதோஷ நாளான திரயோதசியன்று சூரிய அஸ்தமன நேரத்தில், அதாவது மாலை நாலரை முதல் ஆறரை மணிக்குள் வழிபாடு செய்வதே முறை. மாலை ஆறரை மணியுடன் பிரதோஷ காலம் முடிந்து விடுகிறது. பிரதோஷ நேரத்துக்குள் அபிஷேக ஆராதனைகள், புறப்பாடு ஆகியவற்றைச் செய்தால்தான் பிரதோஷ பூஜையின் முழுமையான பலன்களைப் பெற முடியும்.. பிரதோஷத்தின்போது பிரபஞ்சத்திலுள்ள அனைத்து நதிகளும் நந்திகளின் திருக்



கொம்புகளிடையேயும் சிவபெருமான் நடனமாடுவதால், ஆலயத்தின் அனைத்து நந்தி மூர்த்திகளுக்குமே வழிபாடு செய்வதுதான் முறை. பிரதோஷ நேரத்தில் தேவியுடன் கூடிய சந்திரசேகரர் ரிஷப வாகனத்தில் ஆலயத்தை மூன்று முறை வலம் வந்து வணங்க வேண்டும். ஒரு கைப்பிடி காப்பரிசி (வெல்லமும் அரிசியும் சேர்த்தது , ஒரு பிடிவில்வமிலை ஒரு பிடி அருகம் புல் ஆகியவற்றை நந்தியின் கொம்புகளுக்கிடையில் அர்ப்பணித்து, விளக்கேற்றி நந்தியையும் சிவனையும் தொழுதால்... நற்பேறு உண்டாகும் . சனி பகவானால் உண்டாகும் சகல துன்பங்களும் விலகிப் போகும். நந்திக்கும் சிவனுக்கும் வில்வ மாலை, அறுகம்புல் மாலை அணிவித்தல் சிறப்புடையது

நந்தியெம்பெருமா னை தரிசனம் செய்து அங்கு நின்று இடப்புறமாக சென்று சண்டேச்சுவரரை வணங்கி சென்ற வழியே திரும்பிவரவே ண்டும். நந்தியை மீ ண்டும் தரிசனம் செய்து அங்கு நின்று வலப்புறமாக கோமுகி எனப்படும் சிவபெருமானது அபிஷேக நீர் வரும் துவாரம் வழியே தரிசனம் செய்து சென்ற வழியே திரும்பிவரவேண்டும் மீன்டும் நந்தியெம்பெருமானை தரிசனம் செய்து அங்கு நின்று இடப்புறமாக சென்று சண்டேச்வரரை வணங்கி சென்ற வழியே திரும்பிவரவேன்டும். நந்தியை மீன்டும் தரிசனம் செய்து அங்கு நின்று வலப்புறமாக திரும்பவும் கோமுகி எனப்படும் சிவபெருமானது அபிஷேக நீர் வரும் துவாரம் வழியே தரிசனம் செய்து சென்ற வழியே திரும்பிவரவேன்டும். நந்தியைத் தரிசனம் செய்த பின்னரே சிவபெருமானை தரிசனம் செய்ய வேண்டும் என்பது விரத முறையாகும் சிவபுராணம் நந்தி தோத்திரம் என்பவற்றால் இறைவனை வழிபடலாம்

மனச்சுத்தம்இ உடற்சுத்தம் இரண்டும் முக்கியமானவை. இரண்டும் கொண்டே இறைவனை வழிபடுதல் வேண்டும். அத்தகைய வழிபாட்டையே இறைவன் அங்கீகரிப்பார்.

உன்னைப் போல் எல்லா ஆத்மாக்களையும் எண்ணி அவர்களுக்கு நன்மையையே செய். எல்லா ஆத்மாக்களிலும் இறைவன் இருக்கிறார்.

கடவுள் எமக்கு எவ்வளவோ தருகின்றார். தந்து கொண்டே இருக்கிறார். நாம் அவருக்கு எமது அன்பை, எமது சிந்தனையை, எமது நல்ல சேவைகளையே கொடுக்க முடிகிறது.

நேற்று நடந்ததைப்பற்றிக் கவலைப்படாதே. நாளை நடக்கவிருப்பதைப்பற்றியும் விசனப்படாதே. இன்று நடப்பதையிட்டு சந்தோஷப்படு. ஏனெனில் இன்று நடப்பது தான் உண்மை.


HONEST - PROFESSIONAL - RELIABLE
CALL ME FOR FREE MARKET EVALUATION
can also help you in arranging for
BUY SELL
INVEST
Bad credit, no down payment
Still can buy you a home.
JAYANTHI SRITHARAN
REAL ESTATE BROKER
DIR: 416.918.5872
jayanthi.sritharan@gmail.com | www.sellgtahomes.ca
HomeLife / GTA Realty Inc., Brokerage*
1711 Mccowan Rd, Suit # 206, Toronto, ON M1S 3Y3
Bus.: 416-321-6969


THINKING OF BUYING
A PROPERTY ?
CALL ME TO MAKE YOUR
DREAM COME TRUE
FREE MARKET EVALUATION
I deliver consistent,
predictable,
reliable peformance
guaranteed !
CUSTOM
BUILT
HOMES
RESIDENTIAL
COMMERCIAL
INVESTMENT
PROPERTIES
SERVICES TO OUR BUYERS
FREE Home Inspection
Provide buyer package with community info
SERVICES TO OUR SELLERS
FREE Home Staging
Free Virtual Tour
Knowledgeable full service
Prepare your property for quick sale
Open house on week-ends
Social media sharing & e-marketing
JAYANTHI SRITHARAN
DIR: 416.918.5872
HomeLife / GTA Realty Inc., Brokerage*
1711 Mccowan Rd, Suit # 206, Toronto, ON M1S 3Y3
Bus.: 416-321-6969
*Independently Owned and Operated

ஆடும் பெருமானின் தத்துவம்

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு விளங்கும் சமயம் சைவ சமயம். சிவ சம்பந்தமான சைவத்தின் முடிந்த முடிவாகிய தத்துவம் சைவ சித்தாந்தம் ஆகும். பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளை விளக்குகிறது சைவ சித்தாந்தம். பதி கடவுள், பசு உயிர், பாசம் ஆணவம் என்னும் மலம். இவை மூன்றும் இறைவனால் படைக்கப்படாதவை. அனாதியானவை, நித்தியமானவை. தோற்றமும் முடிவுமில்லாதவை. உள்ளது இல்லதாகாது. இல்லது உள்ளதாகாது. உள்ளதில் இருந்தே உள்ளது தோன்றும். இல்லதில் இருந்து உள்ளது தோன்ற மாட்டாது என்னும் கொள்கையைக் கொண்டது சைவ சித்தாந்தம். இதுவே சற்காரியவாதக் கொள்கையாகும். இக் கொள்கையே சைவ சித்தாந்தத்தின் உயிர் நிலை. சைவ சித்தாந்தம் இறைவன், உயிர், ஆணவம், கன்மம், மாயை ஆகிய ஐந்திற்கும் இந்த இரண்டு நிலைகளான சொரூப நிலையும் தடத்த நிலையும் இருப்பதாகக் கூறுகின்றது. பதியின் சொரூப நிலை என்பது கடவுளின் சிறப்பியல்பான சொரூபலக்கணம் எனப்படும். தடத்த நிலை என்பது கடவுளின் பொதுவியல்பான தடத்தலக்கணம் எனப்படும். சொரூபலக்கணத்தில் கடவுளுக்குப் பெயர், குணம், குறி இல்லாத அருவம், உருவம், அருவுருவம் என எதிலும் தொடர்பில்லாத நிலை. மக்கள் வாக்கினாலோ மனத்தினாலோ காயத்தினாலோ அறியமுடியாத நிலையை நிர்க்குணப் பிரமம் என்றும் பரமசிவம் என்றும் குறிப்பிடப்படும். இறைவனின் சொரூபலக்கணத்தை உமாபதிசிவாச்சாரியார் சிவப்பிரகாசம் என்னும் நூலில் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

"பல்கலையா கமவேதம் யாவையினும் கருத்துப்
பதிபசுபாசந்தெரித்தல் பதிபரமே அதுதான்
நிலவும்அரு வுருவன்றிக் குணங்குறிகள் இன்றி
நின்மலமாய் ஏகமாய் நித்தமாகி
அலகில் உயிர்க்கு உணர்வாகி அசலமாகி
அகண்டிதமாய் ஆனந்த உருவாய் அன்றிச்
செலவுஅரிதாயச் செல்கதியாய்ச் சிறிதாகப் பெரிதாய்த்
திகழ்வதுதத் சிவமென்பர் தெளிந்து ளோரே." (பாடல் 13)

இந்த சொரூபலக்கணத்தையுடைய சிவம், உயிர்கள் மீதுள்ள கருணையினால் உயிர்களுடைய துன்பங்களைப் போக்கி அருள் செய்வதற்காகத் தானே இறங்கி வந்து பல நிலைகளிலுள்ள உருவங்களை அதிட்டித்து நின்று அருளுகின்றது. பிரமனாக நின்று படைத்தல் தொழிலையும், திருமாலாக நின்று காத்தல் தொழிலையும், உருத்திரனாக நின்று அழித்தல் தொழிலையும், மகேசுவரனாக நின்று மறைத்தல் தொழிலையும், சதாசிவனாக நின்று அருளல் தொழிலையும் சிவபெருமானே செய்கிறார். இவ் வைந்தொழில்களையும் அந்தந்த சக்தியின் துணையுடன் செய்கிறார். இதுவே இறைவனின் தடத்த நிலையாகும். இந்நிலையிலே பிரபஞ்ச உற்பத்தியும் பஞ்சகிருத்தியங்களும் இடம் பெறுகின்றன. திருவருட்சக்தியே இந்நிலையை அடைவதற்குக் காரணமாகின்றது. இச்சக்தியே அம்மை என்றும் அன்னை என்றும் அழைக்கப்படுவது. இதனாலே உலக வாழ்க்கையிலும் அன்னை உயர்த்தி மதிக்கப்படுகின்றாள்.

சைவ சித்தாந்தம் நடராச வடிவத்தினுடே தனது சிந்தனையை விபரிக்கின்றது. திருச்சிற்றம்பலத்தில் சிவபெருமான் ஆனந்தத் தாண்டவம் என்னும் திருக்கூத்தைப் புரிகிறார். இது திவ்விய சிறப்பு வாய்ந்தது. அதாவது நடராசர் திருவுருவம் கண்ணுக்கும் கருத்துக்கும் இன்பம் தருகின்ற வெறும் கலைப்பொருள் மட்டுமன்று. கலையைக் கடந்து அதற்கப்பாற்பட்ட பசுக்களாகிய உயிர்களின் ஆன்ம ஈடேற்றத்துக்கான சைவ சமய உண்மையையும், வழியையும், வழிபாட்டின் முறையையும் விளக்குகின்றது. இதனை அறிந்து கொள்வது சைவர்களுக்கும் சைவ சித்தாந்திகளுக்கும் அவசியமாகின்றது. உலகியற் சூழலிற் கட்டுண்டு உழலும் ஆரவாரத்தை

விடுத்துத் திருவருளையே கண்ணாகக் கொண்டு வழிபட்டுவரின், ஆனந்தக் கூத்தனின் திருச்சிலம்போசை கேட்கும். அவ்வொலி வழியே சென்று அப்பெருமானின் முன்னின்று வழிபடுதல் தக்கதாம். அவ்வாறு இறைவனின் திருமுன்பு நேர்பட நின்று வழிபாடு ஆற்றுவோர்க்கு அறியாமையும், இறைவனையன்றிப் பிறவற்றை அறியும் அறிவும் நீங்கும். இதனையே திருவியலூர் உய்ய வந்த தேவ நாயனார் தனது மெய்கண்ட சாத்திர நூலாகிய திருவுந்தியாரில்,

"திருச்சிலம்பு ஓசை ஒலிவழியே சென்று
நிருத்தனைக் கும்பிடென்று உந்தீபற
நேர்பட அங்கேநின்று உந்தீபற" (பாடல் 17)

என்று பாடியுள்ளார். இவரைக் குருவாகக் கொண்டு வழிபட்ட திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனாரும் தனது நூலாகிய திருக்களிற்றுப் படியாரில்,

"ஓசையெலாம் அற்றால் ஒலிக்கும் திருச்சிலம்பின்
ஓசைவழி யேசென் றொத்தொடுங்கில் - ஓசையினில்
அந்தத்தா னத்தான் அரிவையுடன் அம்பலத்தே
வந்தொத்தான் அத்தான் மகிழ்ந்து." பாடல் 33)

அல்லும் பகலும் சிவபெருமான் திருநடனம் புரிந்த வண்ணம் இருக்கிறார். அவரது திருவடியிலுள்ள திருச்சிலம்பிலிருந்து எப்போதும் அருளோசை வெளிப்பட்டுக்கொண்டே இருக்கிறது. அந்த அருளோசை இரண்டு விதமாக வெளிப்படுகிறது. அவரது திருவடியையே பற்றி நிற்பவர்க்கு, அவரது அகச் செவியில் கேட்கும் அளவில் "ஓசை"யாகவும், அவரது உணர்வுக்குப் புலனாகும் நிலையில் "ஒலி"யாகவும் இது விளங்குகிறது. இதனையே அப்பரடிகள் "ஓசை ஒலியெலா மானாய் நீயே, உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே" எனத் திருவையாறுத் திருத்தாண்டகத்தில் பாடியுள்ளமையை நாம் மனங் கொண்டு ஆராதிப்போமாக.

இதனைத் திருமூலர் திருமந்திரத்தில்,

"ஆடிய காலும் அதிர்சிலம் போசையும்
பாடிய பாட்டும் பலவான நட்டமுங்
கூடிய கோலங் குருபரன் கொண்டாடத்
தேடியு ளேகண்டு தீர்ந்தற்ற வாறே" (பாடல் 2760)

நடராசப் பெருமானின் திருவடிவம் சிவனின் ஐந்தொழில்களையும் குறிப்பிடுகின்றது. அதனோடு சிவனின் அசைவற்ற தன்மையையும் அசையும் தன்மையையும் (static and dynamic states) ஒரு சேரக் காட்டுவதாக இது உள்ளது. இது அவனின் சொரூப நிலையையும் தடத்த நிலையையும் சிவ சக்தி தத்துவத்தையும் குறிப்பதாகவும் உள்ளது. இது நடராசதாண்டவத்தின் இருவகை ஆட்டங்களைப் பற்றியும் கூறுகின்றது. ஊன நடனம் ஞான நடனம் என்பனவாகும். சாதாரண பக்தி வழிபாட்டில் மட்டும் இருக்கும் அடியார்க்கு மட்டும் தெரிவது ஊன நடனம். தியானத்தில் ஆழ்ந்திருக்கும் முத்தி பெற விரும்பும் சீவன் முத்தர்களுக்குத் தெரிவது ஞான நடனமாகும். இதனை உமாபதிசிவாச்சாரியார் திருவருட்பயனில்,

"ஊன நடனம் ஒருபால் ஒரு பாலாம்
ஞானநடம் தான்நடுவே நாடு." (பாடல் 83)

திருவைந்தெழுத்திலுள்ள நம என்ற பதம் ஊனநடனத்தையும், சிவ என்ற பதம் ஞான நடனத்தையும் குறிப்பதாகவுள்ளது. ய என்ற பதம் குறிக்கும் உயிர் நடு நின்று ஊனநடனத்தின் பயனையும் ஞான நடனத்தின் பயனையும் பெறுகின்றது. ஒரு புறத்தே பிறவிக் கடலுள் மூழ்கும்

ஊனநடனமும் இன்னொரு புறத்தே முத்திக்கு வழிவகுக்கும் ஞானநடனமும் நிகழ்கின்றது. இரு நடனங்களிலும் ஆன்மா நடுவில் இருக்கின்றது. திரோதான சக்தியானது மலத்தைப் பரிபாகப்படுத்தும் வரையும் ஆன்மா ஊனநடனம் செய்கின்றது. அருட்சக்தியானது ஆன்மாவைச் சிவத்துடன் சேர்க்கும் போது ஆன்மா ஞானநடனம் செய்கின்றது.

நடராசப் பெருமானின் திருஅங்க அமைப்பை திருவடியிலிருந்து திருமுடிவரை உற்றுநோக்கினால் அது அஞ்செழுத்துவடிவில் அமைந்திருக்கும். அதனையே பஞ்சாக்கரத் திருமேனி என்பர். இதில் பஞ்சாக்கரமென்பது "நமசிவாய" ஆகும். விரும்பத்தக்க திருவடி - ந திருவயிறு - ம உயர்ந்த திருத்தோள் - சி சிவாகமங்களை அருளிய திருமுகம் - வ திருமுடி - ய. இந்த அமைப்பு பாதாதி கேசமாக அதாவது பாதத்திலிருந்து கேசம் (முடி) வரை நடராச வடிவம் அமைந்துள்ளது. இப்படித் திருவைந்தெழுத்தை பாதாதி கேசமாக எண்ணுவது ஊனநடனமாகும். இத்திருவைந்தெழுத்து நகர முதலாக கூறப்பெற்றமையால் தூலபஞ்சாட்சரம் எனப்படும். ஐந்தெழுத்து வடிவத்தின் இலக்கணத்தையும் ஐந்தொழில் வடிவத்தின் இலக்கணத்தையும் திருவதிகை மனவாசம் கடந்தார் தமது உண்மை விளக்கம் என்னும் சித்தாந்த நூலில் விளக்குமாற்றைக் காண்போம்.

"ஆடும் படிகேள்நல் அம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியி லேநகரம் - கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகரும்முகம் வாமுடியப் பார்." (பாடல் 32)

நினைத்தற்கரிய திருப்பாதத்தில் நகாரமும் திருவயிற்றில மகாரமும் வளர்ந்து தோன்றும். திருத்தோளில் சிகாரமும் திருமுகத்தில் வகாரமும் திருமுடியில் யகாரமும் பொருந்தும் என்பதே பொருளாகும்.

பாதாதி கேசமாக கூறப்பட்ட திருவைந்தெழுத்துக்களும் இங்கு கேசாதிபாதமாக எண்ணப்படுவது ஞானநடனமாகும். இது "சிவாயநம" எனப்படும். அதாவது உடுக்கு ஏந்திய திருக்கரம் - சி, தூக்கிய திருவடியைக் காட்டும் நன்றாக வீசிய திருக்கரம் - வா, யாரையும் அஞ்சேல் எனக் காட்டும் அபய கரம் ஒளி பெற்ற - ய, தீ ஏந்திய திருக்கரம் - ந, முயலகன் மீது ஊன்றிய திருவடி - ம, எனக் காட்டப்படுவது ஞானநடனமாகும் என்றும், இத்திருவைந்தெழுத்து சிகரம் முதலாகக் கூறியமையால் சூக்கும பஞ்சாட்சரம் எனவும் விளக்குகிறது சைவ சித்தாந்தம். இதனையும் உண்மை விளக்கம் 33 வது பாடல்

"சேர்க்கும் துடிசிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம் - பார்க்கில் இறைக்கு
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கு மகரமது தான்."

கூத்தப் பெருமானின் திருநடனத் திருமேனியாக இரு வகைத் திருவைந்தெழுத்துக்களும் விளங்குவதன் கருத்து அப்பெருமான் உயிர்களுக்கு இம்மைக்கும் மறுமைக்கும் வருத்தமோ பிறவிப்பிணியோ வந்து அமையாதவாறு காத்தருளும் தன்மை பற்றியதாகும் என விளக்குகிறார் மனவாசகங் கடந்தார்.

திருவைந்தெழுத்தையும் இறைவனின் திருநடனக் கோலத்தையும் பாதாதி கேசமாகவும், கேசாதி பாதமாகவும் ஊனநடனம், ஞான நடனம் என விளக்கமளித்த திருவதிகை மனவாசகம் கடந்தார், இறைவன் உயிர்கள் மீதுள்ள கருணையினால் ஆற்றும் ஐந்தொழில்களையும் கூத்தப் பெருமானின் திருமேனியுடன் இணைத்துக் கூறுகிறார். உடுக்கேந்திய திருக்கரத்தால் படைத்தலையும், அமைந்த திருக்கரத்தால் உயிர்கள் நுகர்தலைச் செய்வதற்குக் காரணமாய

காத்தலையும், புகழ் பெற்ற தீ ஏந்திய திருக்கரத்தால் அழித்தலையும், அழுத்தமாக ஊன்றியிருக்கும் தாமரை மலரனைய திருவடியால் பொருந்திய மறைப்பையும், எடுத்த தாமரையனைய திருவடியால் அருளலையும் அப் பெருமான் மேற்கொண்டிருப்பதை விளக்குகிறார். இதனைப் பின்வரும் பாடலால்

"தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு." (பாடல் - 35)

விளக்கியிருப்பதை நாமும் உய்த்துணர்ந்து வழிபடுவோமாக.

ஆகாயத்திலிருந்து காற்றும், காற்றிலிருந்து நெருப்பும், நெருப்பிலிருந்து நீரும், நீரிலிருந்து பூமியும் தோன்றின என்பதை சமய நூல்களும் விஞ்ஞானமும் ஒத்துக்கொள்கின்றன. இந்த உலகமே பஞ்ச பூதங்களால் ஆனது. அது போல் மனிதனும் பஞ்ச பூதங்களால் ஆனவன் என்பதை உணர்த்துவதே திருநடனத் திருமேனியின் தத்துவமாகும். ஆகாசப் பரப்பில் நீர்ச்சுழிகள் போல் தோன்றி நிற்கும் நுண்ணிய மின்னுருக்களின் (Electrons) கூட்டமாகிய அணுக்களால் அமைந்தவையே அனைத்துச் சடப்பொருட்களும் என்று தற்கால விஞ்ஞானிகளும் கூறுகின்றனர். இவ்வாறு கூறும் விஞ்ஞானிகள் கூட சிவ நடனத்தைக் கண்டு அதிசயமடைகின்றனர். அணுக்கள் பற்றி ஆராய்ந்த இயற்பியல் விஞ்ஞானியான டாக்டர் ஃபிரிட்ஜிற் காப்ரா (Fritjot Capra) என்பவர் சிவ நடனத்தை அணுவின் அசைவுடன் ஒப்பிட்டுத் தனது "The Tao of Physics" என்ற நுலில் விளக்கி எழுதியுள்ளார். நடராசர் வடிவிலுள்ள அறிவியல் பற்றி அவர் கூறும்போது "நவீன இயற்பியல் விஞ்ஞானிகள் பொருளை அசைவற்ற சடமாகக் கருதுவதில்லை. துடிப்புள்ள தொடர்ந்து நடனமாடும் ஒன்றாகக் கருதுகின்றனர்" என்கின்றார்.

ஒரு சில வருடங்களாக அணுத்துகள் குறித்த மிகப் பெரிய ஆய்வுகூடமான "சேர்ண்" (CERN) எனப்படும் ஜெனீவாவில் உள்ள நிறுவனத்தின் முன் நடராசப் பெருமானின் திருவுருவம் ஸ்தாபிக்கப் பட்டுள்ளமை சைவசமயிகள் பெருமையுடன் மனங்கொள்ளத்தக்கது. மேற்கத்தையர்களால் விஞ்ஞான ஆய்வின் மூலம் கண்டறியப்படும் சிவனின் திரு நடனக்கோலமும் அதன் தத்துவங்களையும் அதன் சிறப்பினையும் சைவ சித்தாந்திகள் எமக்கு விளக்கிய காலம் கணக்கிடற்கரியது.

இத்திருநடனத்தைக் கண்டு களிக்க ஆதியில் பதஞ்சலி முனிவரும் புலிக் காலைவேண்டிப் பெற்ற வியாக்கிரபாதரும் வந்தனர். சிவதொண்டில் சிந்தை மகிழ்ந்த அப்பரடிகள் இத்திருநடனக் காட்சியைக் காணவிரும்பி மனித்தப் பிறவியை வேண்டுகின்றார். காரைக்காலம்மையாரும் பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்புண்டேல் அறவா நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க என்றார். நாதன் நாமம் நமச்சிவாயவே, வந்த கூற்றை அஞ்சவுதைத்தன அஞ்செழுத்துமே, அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே, நற்றுணையாவது நமச்சிவாயவே, நற்றவாவுனை நான் மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே, நானேயோ தவஞ் செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன் என்றெல்லாம் நாயன்மார்கள் திருவைந்தெழுத்தைப் பிறவிப் பிணியைக் கடக்க உதவும் ஓடமாகவும், படைக்கலமாகவும், மந்திரமாகவும் போற்றிப் பாடிவைத்துள்ளமை மனித்தப் பிறவி செய்த தவப்பயனாகும். நாமும் போற்றிப் பரவுவோமாக.

திருமதி நீலா நகுலேசபிள்ளை

மனிதனைத் தேடி.....

மனிதனைத் தேடி
மானிலம் சலித்தேன்.

எங்கவன் உள்ளான்?
எனக்குத் தெரியலை.

ஒரு கணம் சிந்தனை
மறு கணம் உதயம்

முத்துக்களிலே
சொத்தைகள் எத்தனை?
முழுநிலாக் கூட
மறு நாள் தேயுது.

வாஞ்சையுடனே
மலரைப் பறித்து
முகர்ந்த பின்னாடி
சோர்ந்து இதழ் விழுந்து.

எங்கே குறை இலை?
எங்கு நிறைவுண்டு?

நெல்லிற் குமி யுண்டு
நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கு முண்டு.

நிறைவும் குறைவும்
நிறைந்தவன் மனிதன்.

மனிதம் உள்ளவன்
மனிதன் ஆவான் - அம்
மனிதம் எங்கே?
மனத்துள் தேடு

உனக்குள் மனிதம்
உண்டா சொல்லு.

உன்னைப் போல
பிறரை நீயும்
நேசிக்கின்றாயா?
நேர்மை யாய்க் கூறு!

உனக்குள் உள்ளே
உண்டெனில் மனிதம்
நீ தான் மனிதன்
பிறகேன் தேடுறாய்?

மனிதம் பேணி
மனச் சாட்சிக்கு
விரோத மின்றி

உள்ளம் தனிலே
கள்ளம் இன்றி

உனக்கு உண்மையாய்
உலகிற்கு நன்மையாய்

போட்டி பொறாமை
பூசல் அகற்றி

தன்னுயிர் போல
மன்னுயிர் பேணி

அடுத்தவன் வாழ்வைக்
கெடுத்திடாமல்
அனைவரிடத்திலும்
அன்பு செலுத்தினால்
அவனே மனிதன்.

"சக்தி உள்ள வயதிலும்
சந்தர்ப்பப் பொழுதிலும்
வழுக்கி விழாது
ஒழுக்கம் பழுத்த
உள்ளம் உள்ள
அவனே மனிதன்"

"கர்வம் பூசாத வெற்றி
கவரல் ஒழிந்த செல்வம்
பொறாமை கொள்ளாத
நெஞ்சம்
புகழுக்கு மயங்காத உள்ளம்
எவனுக்கு உண்டோ
அவனே மனிதன்."

அவனே உன்னுள்
அடங்கி இருப்பின்
பிறகேன் தேடிப்
பேதலிக் கினறாய்.

ஓட்டு மொத்தத்தில்
ஒவ்வொரு மனிதனும்
உத்தமனாக
உயர்ந்த நோக்குடன்

மனித நேயத்தை
வளர்த்துக் கொண்டால்
மனிதன் அவனே!
மலைத்திட வேண்டாம்.

மனிதன் அவனே!
அவனே மனிதன்!

வாழும் வகையில்
வாழ்ந்து கொண்டால்
மனிதன் கூடத்
தெய்வம் தான்.

வாழ்க்கையை
இழிவாய்
ஆக்கிக் கொண்டால்
மனிதன் கூட
மிருகமே!

எனவே நாமும்
மனிதம் பேணி
மனித மாண்புடன்
மனிதனாய் என்றும்
வாழ்வோம்!
வாழ்வு
வாழும் வரைக்கும்!

திருமதி மலர் சிதம்பரப்பிள்ளை



We care for your SMILE and its IMPORTANT to us.
CALL NOW : 416 666 7770
Dr. SABESAN
Dr. SABESAN THANGATHURAI
Dentist
Dr. சபேசன் தங்கத்துரை
குடும்ப பல்மருத்துவர்
Follow us:
பல் பிடுங்குதல்
பல்வேர் அடைத்தல்
பல் சுத்தப்படுத்தல்
முரசுகரைதலை தடுத்தல்
பற்களை சீராக்கி அழகுபடுத்தல்
Root Canal Treatment
Cosmetic Dentistry
Crown & Bridges
Gum Treatment
White Fillings
Braces
Extraction
Teeth Cleaning
Teeth Whitening
Treatment for Kids
Onsite Dental Lab Available
DENTIST Dr. Sabesan Thangathurai
BOOK APPOINTMENT

SWAMI-MALLAI MURUGAN

By: Nirahulan Puvanenthira

Swami-Mallai (also known as Thiruverkam), is located near Kumbabkonam near the river Cauvery. It is the 3rd Aaru-padai Veedu of Lord Murugan. This particular shrine is important to the Hindu culture, as it is believed that Lord Murugan taught Lord Shiva the meaning behind the Pranava Mantra; Aum, Thus why he is known as Swaminathan.

One day Lord Brahma was on his way to Kailasa-Mallai. On his way, he happened to bump into Lord Murugan. There Murugan asked him the meaning of the Pranava Mantra; Aum. Brahma did not reply correctly, and was imprisoned by Murugan. Brahma is also known as the lord of creators in the Hindu belief. Because Brahma was imprisoned by Lord Murugan, all



creation in the universe ceased. The Devas and devotees prayed to Lord Shiva and Parvathi Devi, asking that Lord Brahma be released. Lord Shiva called Murugan and sat him on his lap. He questioned Murugan whether he knew the meaning of the Pranava Mantra. Murugan said yes, but only agreed to tell him if he could accept him as a guru, and to listen to him as disciple. Lord Shiva agreed to his terms, and Murugan explained to him the meaning of Aum. From then on, Murugan was also known as "Swaminathan" and the hill was referred to as "Swami-Mallai." Another myth said that before commencing his prayers, Maharsihi Brighu attained boons from the lord stating that if anybody disturbed him during his meditation that they would forget/lose all knowledge. The power of the meditation was so strong that the fire that arose from his head, stretched to the heavens. After hearing the cries of the devas, Lord Shiva agreed to help by placing his hand over the head of Brighu, thus disturbing his prayers. It is said that Lord Murugan is who restored all of Shiva's knowledge by teaching him the meaning behind the Pranava mantra.

The temple itself was built by Parantaka Cola, and is said to have existed even in the 2nd century BC. Though, the temple was severely damaged greatly in the year 1740 when the Anglo-French War occured. Regardless of the war the temple was restored back to its original beauty. The temple was built on an artificial hill about 60 feet high. The 60 stone steps placed near the temple are said to represent the Hindu cycle of Sixty years leading to the lord. But of all historical and cultural aspects about the temple, the most important is the fact that the Shivan and Parvathi moolesthaanam (statute) is placed on the ground floor of the temple, whereas the Murugan statue is placed higher above. This is said to represent that Murugan takes the place of the Guru, and that Shivan is the looked at as the devoted disciple.

Swami-Mallai temple possesses many gold, jewels diamonds, and rubies. It is said that every Thursday Lord Swaminatha (Murugan) is decorated beautifully with a Diamond Vel (spear). Karthigai Virtham is performed monthly, and is worshipped by thousands and thousands of devotees visiting the temple. Other important festivals celebrated here include Brahma Utsavam, Skandha Shasti, as well as Pankuni-Uthiram. Here, devotees carry Kavadis to the shrine and Abishekams are performed with great pleasure. A special type of Abishekam performed at Swami-Mallai temple is the Vibuthi Abishekam (bathing with holy ashes) which brings great devotion. After the Abishekam, the Lord is decorated with Rudraaksha Maallais, and elegant flower garlands. He is presented with a stick in his right hand, his left hand on his hip and his Vel (spear) on his right side. The Swaminatha form of Murugan is a very auspicious form, and shows the significance of the 3rd Aaru-padai Veedu of Lord Muruga; Swami-Mallai.



ஈழத்து ஐம்பெரும் ஈஸ்வரங்கள்

இவ்வருட கோடை விடுமுறையின் போது இலங்கைக்குச் சென்றோம். அங்கே உள்ள ஐம்பெரும் ஈஸ்வரங்களுக்குச் செல்லும் வாய்ப்புக் கிட்டியது. நான் முதலில் கீரிமலையில் உள்ள நகுலேஸ்வரத்திற்கு சென்றேன். நகுலேஸ்வரத்தில் உள்ள இறைவனின் பெயர் நகுலேஸ்வரர், இறைவி நகுலாம்பிகை ஆவார். அங்குள்ள புனித தீர்த்தத்தின் பெயர் கீரிமலை ஆகும். அங்கிருந்து மன்னாரின் மாதோட்டத்தில் உள்ள திருக்கேதீஸ்வரத்திற்கு சென்றேன். அங்குள்ள இறைவனின் பெயர் கேதீஸ்வரநாதர், இறைவியின் பெயர் கௌரி அம்மையாகும். இங்குள்ள தீர்த்தத்தின் பெயர் பலாலி ஆகும். அடுத்ததாக நான் திருகோணமலையில் உள்ள திருக்கோணேஸ்வரத்திற்கு சென்றேன். இத்தலத்தில் உள்ள இறைவனின் பெயர் கோணேஸ்வரன், இறைவியின் பெயர் மாதுமையம்மாள் ஆகும். அங்குள்ள புனித தீர்த்தம் பாபநாசம் ஆகும். திருக்கேதீஸ்வரமும், திருக்கோணேஸ்வரமும் பாடல்பெற்ற தலங்கள் ஆகும். அடுத்ததாக மட்டக்களப்பில் உள்ள கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் ஆலயத்திற்கு சென்றேன். அவ்வாலயத்தில் புல்லையுண்ட நந்தியை கண்டேன். கடைசியாக சிலாபத்தில் உள்ள முன்னேஸ்வரம் ஆலயத்திற்கு சென்றேன். இங்குள்ள இறைவனின் பெயர் முன்னைநாதன். பௌத்தர்களும் இக்கோயிலுக்கு பெருமளவில் வருவதைப் பார்த்தேன். நாம் எல்லோரும் ஈசனைத் தொழுது அருள்பெறுவோம்.

அஷிவின் கிருஷான்,
வகுப்பு 5, ஸ்ரீவரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி.

விநாயகர் ஆலயம்

கோடைகால விடுமுறையின் போது எனது பெற்றோரின் சொந்த இடமாகிய காரைநகருக்குச் சென்றபோது அங்கேயுள்ள இவ்வாலயத்தைப் பார்த்து மிகவும் ஆனந்தம் அடைந்தேன். இங்குள்ள பிள்ளையார் சிலை ஒரே கல்லில் ஒன்றரை அடி பீடத்துடன் செதுக்கப்பட்டுள்ளது. இவ் விக்கிரகத்தின் தொப்புள் பகுதிக்கு கீழே துவாரம் உண்டு. அபிேகம் அசெய்யும் பால் இளநீர் முதலானவை இத்துவாரம் வழியாக பீடத்தின் முற்பகுதிக்குள் வெளியேறுவது என்னை பிரமிக்க வைத்தது. இதன் பரிவார மூர்த்தியாக சந்தான கோபாலர் விக்கிரகம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இவ் ஆலய புறச்சூழல் நாவல் மரங்கள், வில்வ மரங்கள், ஆலமரங்கள் பல விழுதுகளுடன் காணப்படுகின்றன. இது மிகவும் சிறிய கட்டிட அமைப்பைக் கொண்டுள்ளது. இவ்வாலயத்தில் பிள்ளையார் கதை, விநாயகர் சதுர்த்தி, சித்திரைக் கஞ்சி போன்ற திருவிழாக்கள் மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றன.

இந்த ஆலயத்தைப் பற்றி அங்கிருந்த ஒரு முதியவரைக் கேட்டபோது இந்த ஆலயம் 1835ம் ஆண்டுக்கு முன்னரே தோன்றியது என்றும் இந்த சிலை இந்தியாவிலிருந்து கடல் வழியாக வந்தது என்றும் கூறினார். இச்சிலையை வேறு இடத்திற்கு மாற்ற முற்பட்டபோது அதனை அசைக்க முடியாமையால் இந்த இடத்தில் ஆலயத்தை அமைத்தனர் என்றும் கூறியுள்ளார். இன்னொரு சிறப்பு தன்மையமக அந்தாதியில் இந்த ஆலயத்தைப் பற்றிய பாடல் அமைந்துள்ளது என்பதாகும்.

“வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்
வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ
துள்ளி ஓடும் தொடர்ந்த வினைகளே.”

ஜெ. சங்கர்
வகுப்பு 7, ஸ்ரீவரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி.

HINDUISM

Hinduism is the world's oldest and third largest religion. It is known as the mother of all religions. One sixth of the world population is made up of Hindus. Hindusium has approximately one billion followers. Hindus call themselves followers of Santana Dharma or Vaidika Dharma. The place of origin of Hinduism is at the banks of Indus River in India. A Hindu (follower of Hinduism) is an individual who accepts and lives by the religious guidance of the Vedic scriptures. Hindusium includes Saivism, Vaishnavism, and Shaktism among others of beliefs and practices. The Kovil, Aalayam, or Temple is the place of worship of the Hindus. Kovil means the residence of God. Aalayam means the place of where the induvial soul merges with God. The holy books in Hinduism are Vedas and Upanishads. Some of the festivals that are celebrated by Hindus are Deepavali, Navaratri, Thai Pongal, and many more.

Dharrshanan Sakthitharan




No One Beat Us!
PRO MAR
Awards & Promotions Ltd.
www.promarawards.com
One stop for all your promotional Ideas...
Trophies
Cop.Awards
Plaques, Medals
Laser Engraving
Sand carving
Screen Printing
416-291 2344
Fax: 416-291 1231
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

Canada Hindu Maamantram

2017 CONTEST WINNERS

Malalaikal

Speech

	First Name	Last Name
1st	Vitujan	Vaseekaran
2nd	Aaratha	Mohan
3rd	Sivasharan	Premananth

Pannisai

	First Name	Last Name
1st	JananiShree	Sakthi
2nd	Vitujan	Vaseekaran
3rd	Bahuleaya	Maheshbabu

Aarampam

Speech

	First Name	Last Name
1st	Bairavi	Thatparanantha
2nd	Soumyaa	Kirishanthan
3rd	Meha	Thivahkaran

Pannisai

	First Name	Last Name
1st	Soumyaa	Kirishanthan
2nd	Bianka	Macmillan
3rd	Jeneny	Umamaheswaran

Group 1

Speech

	First Name	Last Name
1st	Maanasa	Sethuraman
1st	Sankavi	Manimaarn
2nd	Uthaya	Nithakaran
3rd	Vithuna	Pathmanathan

Group 1

Pannisai

	First Name	Last Name
1st	Aathanan	Thivahkaran
2nd	Thanujan	Devadas
3rd	Abinaash	Prasshanna

Group 2

Speech

	First Name	Last Name
1st	Anurag	Sethuraman
2nd	Aamsavi	Sivakumar
3rd	Saathana	Premananth

Pannisai

	First Name	Last Name
1st	Sanjana	Krishan
2nd	Mathanki	Thirugnanasampanthan
3rd	Aamsavi	Sivakumar

Group 3

Speech


	First Name	Last Name
1st	Jasmitha	Sivarupan
2nd	Aathirai	Shiyamsunthar
3rd	Kaaviya	Nithakaran
3rd	Aaharen	Piranavan


Pannisai

	First Name	Last Name
1st	Vishnuka	Vigneswaran
2nd	Aarthanan	Janarthanan
3rd	Aboorvaa	Vasuthevan

	First Name	Last Name
Group 4		
	Speech	
1st	Shajilaasha	Rameshkumar
2nd	Anusikka	Sivackumar
3rd	Akshaya	Nishanthan
	Pannisai	
1st	Sahana	Premananth
2nd	Swadana	Devadas
3rd	Lakshmi Narasimhan	Ranganathan
	Saiva Knowledge	
1st	Swadana	Devadas
2nd	Kaveen	Pathmanathan
3rd	Lakshmi Narasimhan	Ranganathan
Group 5		
	Speech	
1st	Thulasi	Thavarajah
2nd	Syayandan	Kaneshalingam
3rd	Lucksana	Sivakumar
	Pannisai	
1st	Yathavi	Prasshanna
2nd	Dilaksha	Sutharjan
3rd	Viswa	Vijayakumar
	Saiva knowledge	
1st	Ashwin	Krishan
2nd	Aarthika	Rajakumar
3rd	Kirujani	Nadanasabesan

	First Name	Last Name
Group 6		
	Speech	
1st	Kuberaka	Kumareswaran
2nd	Dharsshana	Sakthitharan
3rd	Krisni	Thivakar
	Pannisai	
1st	Vithiya	Vijayakumar
2nd	Anjanaa	Tharsan
3rd	Jaathus	Kiriparan
	Saiva Knowledge	
1st	Theebana	Thavarajah
2nd	Vithiya	Vijayakumar
3rd	Dharrshanan	Sakthitharan
3rd	Dharsshana	Sakthitharan
Group 7		
	Pannisai	
1st	Abilaash	Kesavamoorthy
	Saiva knowledge	
1st	Gajaananan	Sakthitharan
Group 8		
	Speech	
1st	Suvethika	Thayaparan
2nd	Thushanth	Sriskandarajah
	Pannisai	
1st	Thushanth	Sriskandarajah
2nd	Suvethika	Thayaparan
	Saiva knowledge	
1st	Suvethika	Thayaparan
2nd	Thushanth	Sriskandarajah
3rd	Nishanthi	Kaneshalingam







All Your Real Estate Needs
HomeLife /Future Realty Inc.,
Brokerage, Independently Owned And Operated
Why we...
▸ Flexible Listing commission
▸ Free Market Evaluation
▸ Free Neighbourhood pricing
▸ Honest, Reliable & Client Focus
▸ Full Time Sales Representative
▸ Professional Photographer
▸ Free Home-staging
Amal Ganeshamoorthy
Real Estate Broker
Dir: 416.829.9993
Abi Amalan
Real Estate Broker
Dir: 416.732.1810

நன்றி நவில்கின்றோம்

அனைவருக்கும் அன்பு வணக்கம்.

2017ம் ஆண்டு இந்து மாமன்றம் மகிழ்வுடன் படைத்திடும் சர்க்கரைப் பொங்கல் விழாவை மன நிறைவுடன் கண்டுகளிக்க வந்திருக்கும் அனைத்துத் தமிழ் உள்ளங்களுக்கும்,

இன்றைய சர்க்கரைப் பொங்கல் விழாவிற்கான பிரதான அனுசரணையாளர் (TRAFFIC TICKET) திரு, திருமதி சுதர்சன் அவர்களுக்கும்,

எமது அழைப்பை ஏற்று விழாவைச் சிறப்பிக்க வந்திருக்கும் பிரதம விருந்தினர் திரு. தி. ஜெகதீசன் அவர்களுக்கும், சிறப்பு விருந்தினர் ரொறன்ரோ மாநகரசபை உறுப்பினர் ஜிம் கரிஜியானிஸ் அவர்களுக்கும், திரு.திருமதி தேவதாஸ் அவர்களுக்கும்,

"சைவநீதி" மலருக்கு அறிமுக உரையாற்றிய "சைவநீதி" மலராசிரியை திருமதி மனோன்மணி தனபாலசிங்கம் அவர்களுக்கும்,

வெளியீட்டுரையாற்றிய கலாநிதி பால. சிவகடாட்சம் அவர்களுக்கும்,

நிகழ்ச்சிகளைத் தயாரித்து நெறிப்படுத்தி, "சர்க்கரைப் பொங்கல் 2017" விழாவினைச் சிறப்பித்த ஆசிரியர்கள் திருமதி கமலாதேவி சண்முகலிங்கம், திருமதி சாந்தினி சிவரூபன், திருமதி கௌரி சம்பந்தன் மற்றும் நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு தமது திறமைகளை வெளிக்கொணர்ந்த மாணவ மணிகள், மற்றும் இவர்களுக்கு உறுதுணையாக இருந்த பெற்றோர் ஆகியோருக்கும்,

எமது மன்றம் நடாத்திய 2017க்கான சமயப் போட்டிகளில் நடுவர்களாகப் பணியாற்றிய அறிஞர்களுக்கும்,

எமது மன்றம் நடாத்திய 2017க்கான போட்டிகளில் வெற்றியீட்டிய, மற்றும் பங்குபற்றிய, மாணவர்களுக்கான பரிசில்களைச் செய்து தந்துதவிய Promar Awards நிறுவனத்தாருக்கும்,

இவ்விழா சிறப்பாக நடைபெற தமது அனுசரணைகளை வழங்கிய சகல உத்தம தொண்டர்களுக்கும்,

"சைவநீதி 2017" மலருக்கு பெருமனதோடும் மகிழ்வோடும் விளம்பரம் தந்து, ஆதரவு நல்கிய அனைத்து பெருமக்களுக்கும்,

நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கிய திருமதி அமிர்தி புவனேந்திரா, ஜபாலினி பிரணவன் ஆகியோருக்கும்,

"சைவநீதி 2017" மலருக்கு தரமான ஆக்கங்கள் தந்துதவிய பேரறிஞர்கள், கல்விமான்கள், கவிஞர்கள் அனைவருக்கும்,

இந்நிகழ்ச்சியினை புகைப்படம் மூலம் பதிவுசெய்துகொண்டிருக்கும் மன்ற உறுப்பினர் திரு எஸ். கருணானந்தன் அவர்களுக்கும், ஒலியமைப்புச் செய்துகொண்டிருக்கும் இ. கருணாகரன் அவர்களுக்கும்,

"சைவநீதி 2017" மலரின் அட்டைப்படத்தை அழகுற அமைத்துத் தந்த ஓவியச்சுடர் திரு. கண்ணன் அவர்களுக்கும்,

"சைவநீதி 2017" புத்தக அச்சு, மற்றும் வடிவமைப்பாளர் சரோஜா புஷ்பராஜ் அவர்களுக்கும்,

"சைவநீதி 2017" புத்தகத்தையும், நிகழ்ச்சி நிரலையும் அச்சிட்ட விவேகா அச்சகத்தினருக்கும்,


மேலும், சகல வழிகளிலும் எமக்குத் தேவையான உதவிகளை வழங்கிய அனைவருக்கும்

இந்து மாமன்றம் மிக மகிழ்வுடன் மனமார்ந்த நன்றியறிதல்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

சைவத் தமிழ் அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

சைவநீதி மலர் அடுத்த வருடம் புத்தம் புது மலராய் நறுமணம்வீசி பொலிவுடன் விளங்க, சமய சம்பந்தமானதும், பலதரப்பட்ட மக்களுக்கும் பயன் தரக்கூடிய வகையிலும் உள்ள ஆக்கங்கள் வரவேறகப்படுகின்றன. அவை, சைவநீதி மலரில் ஏற்கெனவே வெளிவராத புதிய ஆக்கங்களாக இருப்பது விரும்பத் தக்கது. இவற்றை தமிழிலோ, ஆங்கிலத்திலோ கட்டுரைகளாகவும், கவிதைகளாகவும், வினா விடைகளாகவும், கதைகளாகவும் தமது ஆக்கங்களைத் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். ஆக்கங்கள் ஒவ்வொன்றும் தரமானதாகவும், இம்மலரில் மூன்று பக்கங்களுக்குள் அடங்குவதாகவும் இருத்தல் வரவேற்கத்தக்கது. இதனை கணனி மூலம் அச்சிட்டோ, திருத்தமான கையெழுத்துப் பிரதியாகவோ 1.10.2017க்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஆசிரியர், சைவநீதி



நன்றி


MAKING
A DIFFERENCE
IN THE COMMUNITY
WHERE WE WORK AND PLAY.
We're proud to support initiatives that help make our community a better, safer place for everyone.
Pround sponsor
the co-operators
A Better Place For You™
Home auto life Investments
Group Business Farm Travel
Vel Insurance Sevices Inc.
Senthooran Punithavel
797 Milner Ave. unit #200
Toronto ON M1B3C3
(416) 396-0707

திசை தொறும் சைவநீதி தேசுற்று வாழ்க ! மேலும்
தீந்தமிழ் உலகமெங்கும் திருப்பொலிவுடனே வாழ்க !!
வாழிய ! வையகம்